
இடி-02 ஓகஸ்ட் 11 - 17, 2002 ரூ. 18/- முழக்கம் -73

# இடி

ඉඩි IDI
பக்கங்கள் 24



## அதிகாரப் போட்டி : வெல்லப் போவது யார்?





## ஆயுதக் குவிப்புக்கான அமைச்சர்களின் விஜயங்கள்

## ஹிஸ்புல்லாஹ்வின் கேள்விக்கு ஹக்கீமின் விளக்கம் என்ன?

ஜங்ஷன் திரைப்படம் நேரடி ரிப்போர்ட்

## நேர்முகம்: மாவை சேனாதிராசா

### மனித தர்மம்

மனிதன் மனித நேயத்துடன் வாழ்வதற்கு உருவானவையே மதங்கள். மதத்தின் மூலமாக மனிதனைக் குழப்பி விடுவது வேதனைக்குரியது. தத்தம் மதத்தின் கோட்பாடுகளை அறிந்து அதன்படி ஒழுகுவதே மனித தர்மமாகும்.

உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள். அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதைப் பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும். தூய்மை வரும். எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

*–ஜெயந்தி சிதம்பரம்,*
*புத்தளம்.*

### மறுமை நாள்

இறுதி நாள் பற்றி முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்.

"உங்களுக்கிடையே செல்வம் பெருகிக் கொழிக்காதவரை மறுமை நாள் ஏற்படப் போவதில்லை. அது எந்தளவுக்கென்றால், அந்நாளில், பொருளை வைத்திருப்பவன் "தனது தர்மத்தை யார்தான் வாங்கப் போகிறார்கள்" என்று கவலை கொள்வான். மேலும் யாரிடமாவது தர்மத்தைக் கொடுக்க முனைந்தால் அவன் "எனக்கு தேவையில்லை" என்று கூறிவிடுவான்.

ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி

*–எம்.எஸ்.நஸீஹா,*
*ஏத்தாலை.*

### ஸ்தோத்தரி

*"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே."* ஏனென்றால், *"கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்."* ஆகவே, *"கர்த்தருடைய கிருபையோ அவர்களுக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது." (சங்கீதம் 103:1,2,8,17)* எனவே நாம் கர்த்தரையே சேவித்து ஸ்தோத்திரிப்போம்.

–ஜெக்குலின் கொரேரா,
44/57, St. Anthony's Mw, Col-13.

Millenium Advertising & Printers (Pvt) Ltd.
No. 417/ 2, Galle Road, Colombo -03
Telefax: 01-370992 E-mail: map@pan.lk

**கதைகளில் இடம்பெறும் சம்பவங்கள், கதாபாத்திரங்கள் கதாசிரியர்களின் கற்பனையே. கட்டுரைகள் அவற்றை எழுதியோரின் கருத்துக்களேயன்றி, அக்கருத்துக்களோடு 'இடி'க்கு உடன்பாடு உண்டு அல்லது இல்லையென்று கருதக் கூடாது.**

*இடி வாசகர்களுக்கு இனிய வந்தனங்கள்*

*புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டபின் ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர் மிலிந்த மொரகொட, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் சந்தித்து உரையாடியுள்ளமை சமாதான நடவடிக்கையை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.*

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகிய இருவரும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டபின் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் சிலவற்றில் காலதாமதம் ஏற்பட்டதுடன், இன்னும் சில சிக்கல்கள் காரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.*

*புலிகள் மீது நம்பிக்கை இல்லாத சக்திகள் முற்று முழுதாகப் புலிகளைக்குற்றம் சாட்டுவதிலே தமது முழுச் சக்தியையும் செலவு செய்கின்றன. உடன்படிக்கையில் உள்ள அனைத்தும் நிறைவேற்றப்பட்டபின் தான் அடுத்தகட்ட நடவடிக்கை என்று கூறிய புலிகள் உடன்படிக்கையில் உள்ள அம்சங்கள் நிறைவேறும் வரை பொறுமையாக உள்ளனர்.*

*அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றிய தகவல் எதனையும் வெளிப்படுத்த முன் சமாதானத்துக்கு எதிரான சக்திகளும், சில ஊடகங்களும் தமது கருத்துக்களை முன் வைத்து மக்களைத் திசை திருப்ப முயற்சிக்கின்றன.*

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கி வருபவரும் அரசியல் ஆலோசகர் போல் செயற்படுபவருமான அமைச்சர் மிலிந்த மொரகொட, தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியில் பிரதான பங்கு வகிக்கும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகிய இருவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமான முறையில் நடைபெற்றதாக அறிய முடிகிறது.*

*தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தி அரசியல் ரீதியிலான அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு உள்ளது.*

*லண்டனில் உள்ள நோர்வே தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புப் பற்றிய மேலதிக விபரங்கள் வெளிவரவில்லை என்றாலும் இதுபோன்ற உயர் மட்டச் சந்திப்புகள் மக்கள் மனதில் சமாதான எதிர்ப்புச் சக்திகளால் தூவப்படும் விஷ வித்துக்களை அழிக்க உதவும் என்பதை இரு பகுதியினரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.*

*அன்புடன் ஆசிரியர்,*
*ஏ.ரவிவர்மா.*

## முல்லைத்தீவு மாணவர்களுக்கு ஹட்டன் கல்விமான்கள் உதவி

**ஹ**ட்டன் பிரதேச கல்வி வலய சமாதான செயற்திட்டக் குழுவினர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத் தீவு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்காக அண்மையில் வன்னி சென்றனர்.

கிளிநொச்சி கல்விப் பணிமனையில் நடைபெற்ற வைபவத்தில் ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் டி.எம்.அபேரட்ணவிடமிருந்து பொருட்களைப் பெற்றுக் கொண்ட தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே. சின்னராசாவிடம் கையளித்தார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அங்கு உரையாற்றும் போது, "20 வருட யுத்தம் என்பது சாதாரண காலம் அல்ல. யுத்தம் தொடங்கிய பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு வேறு முகங்களே தெரியாது. அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் போராளிகளையும் அவர்களை எதிர்த்துப் போராடுகின்ற ஸ்ரீலங்கா இராணுவத்தையும் மாத்திரமே தெரியும்."

"ஏ9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தை சுற்றுலாப் பிரதேசமாக நினைத்துக் கொண்டு தெற்கிலிருந்து பலரும் சென்று இராணுவத்தால் இடித்து தரைமட்டமாக்கப்பட்ட கட்டிடங்களையே பார்வையிட்டு வருகின்றனர். இந்த நிலையில் உண்மையான மனித நேயத்துடன் வன்னிக்கு வருகை தந்து அதிலும் குறிப்பாக மாணவர்களது பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு அவர்களுக்கு உதவ முன்வந்த ஹட்டன் பிரதேச கல்விமான் குழுவினரைப் பாராட்டுகின்றேன்.

தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில், தமிழீழ விடுதலைப் போராளிகளைப் பற்றி தவறான எண்ணங்களே உருவாக்கப்பட்டுள்ளன. அதனை இல்லாமல் செய்ய வேண்டியது இங்கு வந்துள்ள தமிழர் சிங்களவர்களைக் கொண்ட இந்த சமாதான செயல்திட்டக் குழுவினரின் பொறுப்பாகும். எண்ணங்களும் செயற்பாடுகளும் நல்லவைகளாக இருந்தால் சாந்தியும் சமாதானமும் நிச்சயம் பிறக்கும் என்றார்.

ஹட்டன் பிரதேச கல்வி வலய சமாதான செயல்திட்டக்குழுவினர் யாழ் சென்று. யாழ் சென் பற்றிக் கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியதோடு யாழ் பொது நூலகத்துக்கும் நூல்களை அன்பளிப்புச் செய்தனர்.


சமாதான செயல் திட்டக்குழுவில் வ.க.ப.டி.எம். அபேரட்னவுடன், உ.க.ப. கே.எஸ்.யட்டிவெல ஆசிரியர் ஆலோசகர்களான திரு.எஸ். எஸ்.தேவசிகாமணி, திரு. ஜே.ஒ.எல்.சிசிவே, நிர்வாகப் பொறுப்பாளர் டி.பி.விஜயகோன், பொஸ்கோ கல்லூரி பிரதி அதிபர் எஸ்.பரமநாதன், பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு.முரளிதரன், ஹட்டன் நியூ கேசுவன் புத்தகசாலை உரிமையாளர் எம்.விஜயகுமார் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

## தமிழ்மொழி சமுர்த்தி உத்தியோகஸ்தர் சங்கம்

*(கஹட்டகஸ்திகிலிய நிருபர்)*

அனுராதபுரம் மாவட்டத்தில் தமிழ்மொழி பேசும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் ஒன்றிணைந்து மாவட்ட தமிழ் மொழி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் கடமையாற்றும் தமிழ்மொழி சமுர்த்தி உத்தியோகஸ்தர்களுக்குத் தேவையான சகல உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கவும், அவர்கள் சுதந்திரமாகச் செயற்படவும் வழி வகைகளை ஏற்படுத்துவதற்கான இச்சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் கடந்த வாரம் அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.



ஹட்டன் ஜோன்பொஸ்கோ கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அமரர் வி.டி.தர்மலிங்கத்தின் நினைவுப் பேருரையின்போது எழுத்தாளர் அன்டனி ஜீவா உரையாற்றுவதையும் தொழிற் சங்கவாதி டி.அய்யாத்துரை, பத்திரிகையாளர் பெ.முத்துலிங்கம், திரு.லோறன்ஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## மன்னார் இளைஞர்களின் சமாதானக் கருத்தரங்கு

**சௌ**மிய இளைஞர் நிதிய வடக்கு தெற்கு பரிமாற்றத்திட்டத்தின் கீழ் மன்னார் வாழ்வோதய சமாதானக் குழுவினர் இயக்குநர் வணபிதா. எஸ். யோகராஜா தலைமையில் எட்டியாந்தோட்டை சென்று பல கருத்தரங்குகளில் பங்குபற்றினர். எட்டியாந் தோட்டை களனி தோட்ட தேயிலைத் தொழிற்சாலை, பனாவத்தை இறப்பர்தொழிற்சாலை ஆகியவற்றைப் பார்வையிட்டு தேயிலை, இறப்பர் பதனிடும் முறையைத் தெரிந்து கொண்ட மன்னார் வாழ்வோதயக்குழுவினர் பெருந்தோட்ட மக்களது லயன் காம்பரா வாழ்க்கை நிலைமை பற்றிய அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர்.

"வடக்கு கிழக்கு இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள்?" "ரணில்- பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள சமாதானம்." "சுதந்திரத்துக்கு முன்பும் பின்பும் தமிழர்களது நிலை." "தாயகக் கோட்பாட்டின் குறிக்கோள்" ஆகிய தலைப்புக்களில் பல பல கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் இக்குழுவினர் நடத்தினர்.

இக்கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் கலந்து கொண்ட மலையகத் தமிழ், சிங்கள, முஸ்லிம்மக்களும், மதத்தலைவர்களும் கேட்ட கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் மன்னார் வாழ்வோதயக் குழுவினர் பதிலளித்தனர்.

சௌமிய இளைஞர் நிதியத் தலைவர் பி. அந்தோனி முத்துவின் ஏற்பாட்டில் மன்னார் வாழ்வோதய சமாதானக் குழுவினர் மூன்று நாட்கள் மலையகத்தில் பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டனர்.

## சாந்திபுரம் வீடமைப்புத் திட்டத்தின் அவல நிலை

**தே**சிய வீடமைப்பு அதிகார சபையினால் மன்னார் சாந்திபுரத்தில் அமைக்கப்பட்ட வீடுகளில் சில முறிந்து விழும் அபாய நிலை தோன்றியுள்ளது. பாவனைக்கு உதவாத மரங்களினால் வீடுகளை அமைத்துக் கொடுத்ததே இந்நிலை ஏற்படக் காரணம் எனத் தெரிய வருகிறது.

போக்குவரத்து, நீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத இந்த வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப் பெற்றுக் கொண்ட பலர் வேறு இடங்களில் ஓலைக் குடிசையில் வசிக்கிறார்கள். இக்குறைபாடுகள் தொடர்பாக பல இடங்களில் முறைப்பாடுகள் செய்தும் உரிய நிவாரணம் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கிறார்கள்.

## சமுர்த்தி முத்திரை விநியோகம் தாமதம்

*(தம்பலகமம் நிருபர்)*

**கி**ண்ணியா பிரதேச செயலகத்திற்கு சமுர்த்தி முத்திரைகள் கொண்டு வரப்பட்டு ஒரு மாதம் கடந்தும் இதுவரை முத்திரைகள் விநியோகம் செய்யப்படவில்லை. சமுர்த்தி முத்திரை விநியோகிக்கப்படும் திகதி அடிக்கடி ஏதாவது ஒரு காரணம் காட்டி நீடிக்கப்படுகிறது. இரண்டு மாத சமுர்த்தி முத்திரைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. புதிதாக வந்திருக்கும் முத்திரைகள் கூட இடை நிறுத்தப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

# நமது தாயகத்தில் நமது ஆட்சி வேண்டும்!

## யாழ். பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இடிக்கு வழங்கிய பேட்டி

**நேர்காணல்: ஏ. ரவிவர்மா**



### ஊர்மிளா களம்

**பிரதமர் ரணில் ~ தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோருக்கிடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை காலதாமதமாவதன் காரணம் என்ன?**

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பாடசாலை, வணக்கஸ்தலங்கள், பொது இடங்கள் ஆகியவற்றிலிருந்து படையினர் வெளியேறாமையே உடன்படிக்கை காலதாமதமாவதன் பிரதான காரணம். வலிகாமம் வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியிலிருந்து எக்காரணம் கொண்டும் இராணுவம் வெளியேறமாட்டாது.

வலிகாமம் வடக்கில் 17 கிராம சேவகர் பிரிவில் வாழ்ந்த 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரம் மக்கள் 1987ம் ஆண்டு வெளியேறினார்கள். அவர்கள் தம் சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலையை இராணுவம் ஏற்படுத்தியுள்ளது. அங்கு வாழ்ந்த மக்கள் விவசாயம். மீன்பிடி மற்றும் ஏனைய தொழில்களைத் தம் மண்ணில் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. 15 வருடகாலம் அவர்கள் அகதிகளாக வாழ்கிறார்கள்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பனை, தென்னை ஆகியவற்றைத் தறித்து புதிய காவலரண்கள் கட்டப்படுவதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். நுணாவில் பகுதியில் புதிய பாதுகாப்பு வலயம் உருவாகுவதாகவும் அறிந்துள்ளோம். கச்சாய், மறவன்புலோ, கோகிலாகண்டி ஆகிய கிராம மக்கள் மீளக்குடியேற இராணுவம் அனுமதியளிக்க மறுத்து வருகிறது. மீசாலை படித்த மகளிர் குடியேற்றத் திட்ட கட்டடங்கள் தகர்க்கப்படுவதாகவும் மக்கள் எம்மிடம் முறையிட்டுள்ளனர்.

வெளியேறிய மக்களை மீளக் குடியேற்ற மறுப்பதும், புதிய இராணுவ அரண்களை ஏற்படுத்துவதும் மிக முக்கிய பிரச்சினைகள். இயல்பு வாழ்க்கைக்கு மீள்வது என்பது புரிந்துணர்வு உடன்படிக்கையின் மிக முக்கிய வாசகம். அகதிமுகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழும் மக்கள் சொந்த இடத்தில் மீளக் குடியேறி தொழில் செய்வதற்கு இராணுவம் தடையாக உள்ளது.

இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது கொண்டிருக்கும் தப்பான அபிப்பிராயமே இவற்றுக்கு மூலகாரணம்.

**அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில் தமிழீழ தேசியக் கூட்டமைப்பு பங்கு பற்றுமா?**

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்பதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என நாம் கடந்த காலங்களிலும் வலியுறுத்திக் கூறினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்களை ஓரம் கட்ட முனைந்து ஏனைய இயக்கங்களுடன் சமரசம் செய்து கொண்ட அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வில் பல குளறுபடிகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேச மக்களின் போராட்டத்தில் நியாயம் இருக்கிறது என்பது இந்த ஒப்பந்தத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது. ஆனபடியினால் அனைவரும் விரும்பும் வகையில் ஒப்பந்தத்தில் கூறப்பட்டதன் பிரகாரம் தமிழ் மக்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதே சரி என நாம் தீர்மானித்துள்ளோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள்.

**புளொட், ஈ.பி.டி.பி ஆகிய இரண்டு கட்சிகளும் கூட்டமைப்புடன் இணையும் சாத்தியம் உள்ளதா?**

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்கவேண்டும் என்பதே எமது விருப்பம். புளொட், ஈ.பி.டி.பி ஆகியன ஜனநாயக வழிக்குத் திரும்பினாலும் இராணுவத்துடன் இணைந்து வேலை செய்ததாகக் கருத்து நிலவுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்த இரண்டு கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இவர்களை இணைக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் அதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை.

**கிழக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கப் போவதாக செய்திகள் வெளியாகி உள்ளனவே?**

நான் அப்படி நினைக்கவில்லை. அவர்கள் அப்படி அறிவித்ததாக நான் அறியவில்லை. முஸ்லிம், மலையக, தமிழ் தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே எமது விருப்பம்.

போராடுபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதே உலக வழக்கு. முஸ்லிம், மலையக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எமது பொது எதிரி பேரினவாதம். பேரினவாத சித்தாந்த ஆட்சி, பௌத்த சிங்கள அரசு ஆகியவை எம்மை ஒட்டு மொத்தமாக அடக்கி ஆள நினைக்கின்றன.

வடக்கு, கிழக்கில் உள்ள எமது தாயகம் பிரதேசத்தில் நமது ஆட்சி நடைபெறவேண்டும் என நாம் விரும்புகிறோம். சிங்கள மக்கள் மீது எமது ஆட்சியைத் திணிக்க நாம் முயலவில்லை. ஆனால், சிங்களப் பேரினவாதமோ முழு இலங்கையையும் ஆட்சி செய்ய விரும்புகிறது. இராணுவ நடவடிக்கைகளும், இனக்கலவரங்களும் அதற்கு உரமூட்டுகின்றன.

செப்டெம்பர் 11ம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற அனர்த்தத்தின் விளைவாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் பயங்கரவாத எதிர்ப்பு என்ற கோஷத்துடன் ஆப்கானில் காலடி வைத்தார். அதே போன்ற பயங்கரவாதம் இலங்கையில் இருப்பதாகக் கூறி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அமெரிக்க ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தது பாரிய அரசியல் தவறு. தமிழ்த் தேசிய விடுதலைப் போரை அழிக்கும் சிந்தனையின் உச்சக்கட்டமே இது. இதன் காரணமாக ஜனநாயக வழியில் நிற்கும் சக்திகளும், போராட்டம் நடத்தி ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த சக்திகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டதன் காரணமாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவானது.

வடக்கு கிழக்கு, முஸ் லிம்,மலையகம் என தமிழ் பேசும் நாம் பிரிந்து நின்றால் பேரினவாத சக்திகள் தமது எண்ணத்தை இலகுவில் ஈடேற்றி விடும். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

**இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்யும் எண்ணம் உண்டா?**

தற்போதைக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லை. ஆனால், தமிழ் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்ற எண்ணம் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களுக்கு உண்டு. இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை ஒன்றிணைந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கின.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியன தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறின தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தொடர்ந்தும் அங்கம் வகித்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டபின் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தனக்கு இவ்வளவு இடம் வேண்டும் என வாதாடிப் பெற்று வருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட தமிழரசுக் கட்சி உரிமையுடன் தனக்குரிய அங்கத்துவத்தைக் கேட்டுப் பெற முடியாதுள்ளது.

தமிழரசுக்கட்சி தமிழ்க் கூட்டமைப்பின் முக்கிய கட்சி. தமிழரசுக் கட்சி பலமான அமைப்பாகச் செயற்பட வேண்டியது அவசியம். கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு இது துணைபுரியும். குறிப்பாக வட பகுதியின் தமிழரசுக் கட்சி அபிமானிகள் தாம் ஒதுக்கப்படுவதாக கருதுகின்றனர். அவர்கள் மீண்டும் அரசியல் பணியில் ஈடுபடுவதற்கு தமிழரசுக் கட்சி மீளக் கட்டியெழுப்பப்படுவது துணைபுரியும்.

**தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிக அக்கறை காட்டவில்லை என்ற கருத்துள்ளதே?**

அது தவறான கருத்தாகும். தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தைக் கையாள நாம் ஒரு குழுவை அமைத்துள்ளோம். அக்குழு பிரதமருடன் இதுபற்றி கலந்துரையாடி சில முடிவுகளை எடுத்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் அ.விநாயகமூர்த்தி, ரவிராஜ், சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

சட்ட விரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்ட, வெளிநாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டபோது கைதானவர்களை விடுதலை செய்வதற்காக குடிவரவு, குடி அகல்வு சட்டத்தில் திருத்தம் கொண்டுவர இணக்கம் காணப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

**அரசியல் போராட்டங்களில் பல கசப்பான சம்பவங்களை அனுபவித்திருப்பீர்கள். அவற்றில் நீங்கள் சந்தித்த மிகமோசமான சம்பவம் எது?**

கடந்த பொதுத் தேர்தலில் ஊர்காவற்று றையில் தாக்கப்பட்டதையே மிக மோசமான சம்பவமாகக் கருதுகிறேன். 1960 ஆம் ஆண்டு மாணவப் பருவத்தில் தந்தை செல்வாவின் பிரசாரத்தால் கவரப்பட்டு தமிழரசுக் கட்சியில் இணைந்தேன். 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டேன். இதுதான் நான் முதன் முதல் கலந்து கொண்ட போராட்டம்.

1968ம் ஆண்டு முதன் முதலில் கைது செய்யப்பட்டேன். 72ம் ஆண்டு தேடப்படுவோர் பட்டியலில் அரசாங்கம் என் பெயரைச் சேர்த்தது. 11 தடவை கைது செய்யப்பட் டேன். ஏழு முறை சிறை சென்றேன். ஏழு வருடகா லம் சிறை வாசத்தை அனுபவித்தேன். சிங்கள இராணுவமும், பொலிஸும் தாக்கிய போது நிலை குலையாத நான் தமிழ்க் குழுவினரால் தாக்கப்பட்ட போது அதிர்ச்சியடைந்தேன்.

தமிழீழத்துக்காக ஆயுதப் போராட்டம் நடத்திய குழு ஊர்காவற்துறை சென்ற எங்கள் மீது தாக்குதல் நடத்தியதால் வெட்கமும் வேதனையும் அடைந்தேன். அந்தச் சம்பவத்துக்காக கவலைப்படுகிறேனே தவிர பழிவாங்கும் எண்ணம் என்மனதில் எழுந்ததில்லை.

மேடை

எம்.ஏ.மாறன்

# ஆயுதக் குவிப்புக்கான அமைச்சர்களின் விஜயங்கள்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான இடையூறுகளற்ற சுமுகமான நிலைமையொன்றைத் தோற்றுவிப்பதற்கேயாகும்.

ஆனால், தற்போதைய அரசியல் மற்றும் இராணுவ நகர்வுகளை அவதானிக்கின்ற போது சமாதான ஒப்பந்தம் என்பது யுத்தமொன்றுக்கான கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அரசாங்கத்தின் தந்திரோபாயமாகவே அமைந்துள்ளது.

உண்மையிலேயே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்தத்திலும் ஆர்வத்திலும் விடுதலைப் புலிகள் இருப்புக் கொண்டிருக்கின்ற போதிலும், அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கான திகதியை இழுத்தடிப்புச் செய்வதிலேயே குறியாக இருந்து வருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த போது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பொறுப்பு பொதுஜன ஐக்கிய முன்னணி தரப்பிடமிருந்தால், தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் பல சிக்கல்களை எதிர்நோக்கும் என நம்பப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியேற்று, ஐக்கிய தேசிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான உறவு சுமுக நிலையைப்பெற்றிருந்தது.

ஆனால், கடந்த மூன்று வாரங்களாக மந்திரிசபைக்கும் ஜனாதிபதிக்குமுள்ள உறவு மிக மோசமான எதிர்வினைகளைத் தோற்றுவித்துள்ளதால் இனிமேல் மேற்கொள்ளவிருக்கின்ற சமாதான முன்னெடுப்புகளிலும் பாரிய பின்னடைவுகள் தோன்ற வாய்ப்பிருப்பதாக நம்பப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதம் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என இறுதியாக ஐ.தே.மு. அரசு அறிவித்திருக்கின்றது. தற்போது ஓகஸ்ட் மாதமும் பிறந்துவிட்டது. இந்நிலையில் பல தடவைகள் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகளை அரசு ஆரம்பித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. ஆனால் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர்கள் சிலர் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதில் பிரதமர் ரணிலோடு கருதது முரண்பாடு கொண்டுள்ளதாக சில செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது அமைச்சரவையும் ஜனாதிபதியும் கடுமையாக முரண்பாடு கொண்டுள்ள ஒரு நிலைமை தோன்றியிருக்கின்றது. "தான் ஒரு வார்த்தை சொன்னால் யுத்த நிறுத்தம், சமாதானம் என்பன செல்லாக் காசாகிவிடும்" என ஜனாதிபதி மீண்டும் கர்ஜித்திருக்கிறார். இவையாவும் ஓகஸ்ட் மாதத்திலும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்பதையே கட்டியம் கூறிநிற்கின்றன.

இதைவிட முக்கியமானதொரு விடயம், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் பிரதமருக்கோ, ஐ.தே.மு அரசாங்கத்துக்கோ பூரண விருப்பம் இல்லை என்பதுதான். அரசாங்கம் முயற்சித்து, ஆக்கபூர்வமான - புரிந்துணர்வுடனான செயற்பாட்டில் இறங்கினால் ஜனாதிபதியை அமைதிப்படுத்தி அவரது ஒத்துழைப்புடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும்.

ஆனால், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான திகதியை மேலும் மேலும் தள்ளிப் போட வேண்டாம் என்பதற்காகவே அரசாங்கம் ஜனாதிபதியிடம் வலிந்து முரண்பட்டுக் கொண்டு வருகின்றது.

அண்மை நாட்களாக அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் தோன்றியிருக்கும் சண்டையானது மேலும் விரிவடைந்து செல்கிறது. இதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி சமாதானம் குறித்த விடயத்தில் தனது கடும் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைகளை அவ்தானித்துப் பார்க்கின்ற போது அரசாங்கம் திட்டமிட்டே பேச்சுவார்த்தைக்கான திகதியை இழுத்தடித்துக் கொண்டு செல்கின்றது என்பது புரிகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பிரதமர் அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்களையும், அவற்றின் நோக்கங்களையும் ஆராய்ந்து நோக்கினால் அவை யுத்தத்தினை முதன்மைப்படுத்தியிருப்பதையும் காணமுடிகிறது.

பிரதமர் பதவியைக் கையேற்றவுடனேயே ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். வர்த்தக ஒப்பந்தம், பிராந்தியப் பாதுகாப்பு என்பனவற்றில் பேசப்பட்டதாக ரணிலின் இந்தியப் பயணம் குறித்து பிரதமர் செயலகம் அறிக்கை விட்ட போதும் அதன் உள்நோக்கம் விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியாகத் தோற்கடிப்பதாகவே அமைந்திருந்தது

ரணிலின் இந்திய விஜயத்தின் பின்னர் திருகோணமலையிலுள்ள சில எண்ணைக் குதங்கள் இந்தியாவுக்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதற்கான பாதுகாப்பையும் இந்தியாவே கவனிக்கும். எனவே, மிக இலகுவாக இந்தியபபடை தமிழ் மக்களின் தாயகப் பிரதேசத்துக்குள் நுழைய வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் ரணிலின் மற்றொரு வெளிநாட்டுப் பயணம் பிரித்தானியாவுக்குச் சென்றதாகும. இங்கும் ஆயுதக் கொள்வனவு, யுத்தம் ஏற்பட்டால் படையினருக்கு விஷேட பயிற்சி அளிப்பது போன்ற விடயங்களே பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டன. பிரித்தானியப் பயணத்தின் போதும் பிரதமர் ரணில் புலிகள் பற்றிய அதிருப்தியான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

தொடர்ந்து அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்கப் பயணமொன்றை மேற்கொண்டார். மிலிந்தவுக்கும் அமெரிக்க அரசுக்குமான உறவு மிக நீண்டகாலமாக இருந்து வரும் ஒன்றாகும். அமைச்சரான பின் மிலிந்த மொறகொட அமெரிக்கப் பயணம் மேறகொண்டிருந்தது நவீன யுத்த விமானங்களை இலங்கை வரன் படைக்குக் கொள்வனவு செய்யும் நோக்கிலானதாகும் என்று வெளிநாட்டு மற்றும் தென்னிலங்கை பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன சீன விஜயத்தை மேற்கொண்டிருந்ததும், சீன அரசாங்கத்திடம் யுத்த டாங்கிகள், மற்றும் றைபிள்கள், துப்பாக்கிகள் கொள்வனவு செய்யும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதும் பகிரங்கமான விடயம் தான் பாதுகாப்பமைச்சரிடம் சீன அரசாங்கம் யுத்தத்துக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்வதாக உறுதியளித்திருந்த விடயம் கூட பத்திரிகைகளில் வெளிவந்தன.

இறுதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க விஜயம் மேற்கொண்டபோது புலிகளை மிகவும் மோசமானவர்களாகக் காட்ட முயற்சித்திருந்தார். இதன் மூலம் அமெரிக்காவிடமும் பிரதமர் ஆயுத உதவியையும் யுத்தத்தை முன்னெடுத்தால் தேவையான ஆலோசனைகளையும் கோரியிருந்தார் என்பது வெளிப்படையாகின்றது.

அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் படைகளை இன்னும் ஆயுத ரீதியாகப் பலப்படுத்திக் கொண்டு வல்லரசு நாடொன்றின் உதவியுடன் புலிகளோடு போருக்குத் தயாராகுவதாகவே அமைந்திருக்கின்றது. அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் கூட ஆயுதங்களைச் சேகரிப்பதையே நோக்கமாக்கிக் கொண்டிருக்கின்றன.

சமாதான சூழலைப் பயன்படுத்தி புலிகள் ஆயுதத்தையும், ஆட்களையும் சேர்த்து தங்களைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள் என்று அரசாங்கத்தால் முன்பு கூறப்பட்டது. இப்போது அதைத்தான் அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

# அதிகாரப் போட்டியில் வெல்லப் போவது யார்?

இலங்கை ஜனநாயக சோஸலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் எத்தகையவை என்பதை நினைவூட்டி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீண்டதொரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்த கருத்து விஸ்வரூபம் எடுக்கும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை ஜனாதிபதியின் கடிதம் வெளிப்படுத்துகிறது.



அதி நவீன வீடியோ கெமரா பொருத்தப்பட்ட கைப்பையுடன் ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்துக்கு வருகை தருவதாக முதலில் செய்தி வெளியானது. ஜனாதிபதி கைப்பையில் குண்டுடன் வருவதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டுத் தெரிவித்ததாக எழுந்த சர்ச்சையுடன் ஜனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கிடையிலான விரிசல் பூதாகரமாகத் தொடங்கியுள்ளது.

அமைச்சர் ரவி கருணாநாயக்க அந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். பிரதமரும் அப்படி ஒரு கூற்று வரவில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆனால் ஜனாதிபதி, பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் கூற்றுக்கு பிரதமர் கண்டனம் தெரிவித்ததாகவும், தனிப்பட்ட முறையில் தன்னைச் சந்தித்த போதும் அத்தகைய நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாதெனத் தெரிவித்ததாவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அதி உயர் பதவிகளில் உள்ள ஜனாதிபதி - பிரதமர் ஆகியோர் வெளியிடும் எதிரும் புதிருமான கருத்துக்களால் அப்பாவிப் பொதுமக்கள் அதிர்ந்து போயுள்ளனர். அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதியே. ஆனால், அமைச்சரவைக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான அரசியல் பிணக்கினால் பிரதமரின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த நிலையிலேயே அமைச்சரவை உள்ளது.

அமைச்சரவையை நியமிப்பதில் தனக்கு உள்ள அதிகாரத்தை வெளிப்படுத்த முதலாவது அமைச்சரவைப்பட்டியலில் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு சமுர்த்தி அமைச்சைக் கொடுக்காமல் ஜனாதிபதி தன்வசம் வைத்திருக்கிறார்.

சமுர்த்தி அமைச்சு தனக்குத்தான் என மார்தட்டிய எஸ்.பி.திஸாநாயக்க அன்று மௌனமாக இருந்தார். பின்னர் வேறு காரணங்களையும், நிபந்தனைகளையும் முன்வைத்து சமுர்த்தி அமைச்சை மீண்டும் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் கையளிக்க ஜனாதிபதி உடன்பட்டார்.

பிரதமர் ரணிலின் மீது குற்றம் சுமத்தி பிரதமர் பதவியிலிருந்து அவரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஜனாதிபதி இறங்கி உள்ளதாக சில தகவல்கள் கசிந்துள்ளன. கரு.ஜயசூரியவைப் பிரதமராக்கி ரணில் விக்கிரம சிங்கவை அமைச்சராக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இருப்பதாக பொதுத் தேர்தல் முடிந்த கையோடு வெளியான தகவல்கள் தெரிவித்தன.

அந்தத் திட்டத்தை ஜனாதிபதி செயற்படுத்தலாம் என்ற சந்தேகம் இப்போது அரசியல் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ளது. ஜனாதிபதியின் வாகனங்கள் இறக்குமதி விவகாரம், கைப்பை விவகாரம் ஆகியன சூடு பிடித்துள்ள இவ்வேளையில் பிரதமர் ரணிலின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிடும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட உள்ளதாக அரசியல் அரங்கில் தகவல் கசிந்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் பிரதான பங்கை வகித்த பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து பிரதான இடத்தை வகிக்கின்றனர். ஜனாதிபதிக்கு எதிராக இவர்கள் தெரிவிக்கும் கருத்துகள் தினமும் வெளியானதால் மக்கள் மத்தியில் தன்னைப் பற்றிய தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுவிடுமோ என ஜனாதிபதி அச்சமடைந்துள்ளார்.


ஜனாதிபதியைத் தற்கொலைப் போராளியாகச் சித்தரித்த ரவி கருணாநாயக்க அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுதியாக உள்ளது. பிரதமர் ரணில், அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரின் முன்னாள் சகாவும், ஜனாதிபதியின் சகோதரருமான அனுர பண்டாரநாயக்க, ரவி கருணாநாயக்கவின் முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்துகின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாத போது நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதை மறந்து அரசாங்கக் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அக்கப் போர் புரிந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இல்லாத போது ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொண்டது, எதிர்க்கட்சிக்குச் சாதகமாகப் போய் விட்டது. அமைச்சர்களையோ, அரச தரப்பு உறுப்பினர்களையோ கட்டுப்படுத்தும் ஆற்றல் பிரதமருக்கு இல்லை எனக் காரணம் காட்டி பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபடலாமென இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் ஆரம்பமான இடத்தில் அப்படியே நிற்கின்றன. ஜனாதிபதிக்கு எதிராகப் பிரயோகிக்க முற்படும் அரசியல் அஸ்திரங்கள் அனைத்தும் போன வேகத்திலேயே திரும்பி விடுகின்றன.

ஜனாதிபதியைக் கட்டுப்படுத்த முடியும் என அமைச்சர்களும், அமைச்சரவையைக் கலைக்க முடியும் என ஜனாதிபதியும் அறிக்கைப் போர் நடத்துகின்றன. அரசியல் சதுரங்கத்தில் ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் அனைவரும் திட்டமிட்டு ஒருமித்த கருத்துடன் ஜனாதிபதிக்கு எதிராக காய்களை நகர்த்தி வருகின்றனர்.



ஜனாதிபதி தன் கட்சிக்குள்ளே உள்ள ஒரு சில கருத்து முரண்பாடுகளுடன், தம்பியின் துணையோடும், அரசியல் அதிகாரத்தின் பலத்துடனும் எதிர்ப்படைகளை வீழ்த்த களமிறங்கியுள்ளார். சமாதான நடவடிக்கைகளின் காலதாமதமும், விலைவாசி உயர்வும் அரசாங்க எதிர்ப்பாளர்களின் சாதகமான அஸ்திரங்கள்.

தற்போது ஜனாதிபதி தனது அரசியல் அதிகாரங்களை வெளிக்காட்டும் சூழ்நிலைகளை அதிகரித்து வருகிறார். இந்நிலையில் தனது பலத்தை நாட்டு மக்கள் முன் நிரூபித்தாக வேண்டிய கட்டத்தில் ரணில் இருக்கிறார். அந்தரங்கத்துக்கு வந்து அதிகாரப் போட்டியில் வெற்றி பெறப் போவது யார் என்பது மிக விரைவிலேயே தெரியவரும்.

# ஹிஸ்புல்லாஹ் கேள்விக்கு ஹக்கீமின் பதில் என்ன?

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேசத்து ஒலுவிலில் கடந்த 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த ஒரு கூட்டம் நடந்தது. அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் அனுசரணையோடு, அம்பாறை மாவட்ட உலமாசபை ஒலுவில் துறைமுக மகாவலி கேட்போர் கூடத்தில் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியிருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும், அமைச்சருமான றவூ·ப் ஹக்கீம் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் தவிசாளரும், அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், மயோன் முஸ்தபா, மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்; திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திடீர் தௌபீக் ஆகியோர் உட்பட கல்முனை சாய்ந்தமருது, மருதமுனை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை, ஒலுவில், பொத்துவில், சம்மாந்துறை, வரிபத்தான்சேனை, இறக்காமம், மூதூர், வாழைச்சேனை ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, கிண்ணியா போன்ற கிழக்கு மாகாணத்தின் இடங்களிலிருந்தும் உலமாப் பெருமக்கள் பெருந்தொகையானோர் இக்கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர். காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் மதியபோசன இடைவேளையின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிவரை நடைபெற்றது. கூட்டத்திற்கு அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாசபைத் தலைவரான மௌலவி.எஸ்.எச்.ஆதம்பாவா தலைமை தாங்கினார். மௌலவி நதீர் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆற்றிய உரை பெருத்த சலசலப்புகளை ஏற்படுத்தி விட்டது. தற்போது முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற சமாதானத் தீர்வு விடயத்தில் வட - கிழக்கு முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் குரலெழுப்பினார். ஸ்ரீ.ல.மு.காங்கிரஸும் அதன் தலைவர் றவூ·ப் ஹக்கீமும், இந்த அரசும் முஸ்லிம்களுக்கான தீர்வு விடயத்தில் அசமந்தமாக இருந்து விட்டதோடு தொடர்ந்தும் அசமந்த போக்கையே கடைப்பிடித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆதாரங்களுடனும் அடுக்கடுக்காகவும், ஆக்ரோஷமாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பேசியவற்றிலிருந்து முக்கியமானவற்றை இங்கே தருகிறோம். "இந்தக் கூட்டத்தில் முனாபிக்தனமாக (நயவஞ்சகத்தனமாக) யாரும் பேசிப்பிரயோசனமில்லை. ஒன்றை மறைத்து மற்றொன்றைப் பேசுவது கூடாது. முழுப் பூசணிக்காயைச் சோத்துக்குள் மறைத்து விடவும் முடியாது. இந்தக் கூட்டம் ஓர் உயிருள்ள கூடடமாக இருக்குமானால் இங்கே நாம் சில விடயங்களைப் பேசித்தான் ஆகவேண்டும். அதற்காக உங்கள் அனுமதியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்!"

ஹிஸ்புல்லாஹ் இவ்வாறு கூறியதும் 'அல்லாஹு அக்பர்' என்று முழங்கி சபை அனுமதி தருகிறது. அந்த அனுமதியோடு அவர் றவூப் ஹக்கீமைப் பார்த்தபடி தொடர்கிறார்.

"நீங்கள் யூ.என்.பியை ஆட்சிக்கு கொண்டு வர முயற்சிததீர்கள். சந்திரிகா அரசை வீழ்த்தி யூ.என்.பியை ஆட்சி பீடத்திற்குக் கொண்டுவர நீங்கள் முயற்சி செய்யும் பொழுதே உங்களுக்குப் பல விடயங்கள் தெரிந்திருந்தன. யூ.என்.பி. ஆட்சிக்கு வந்து புலிகளுடன் பேசப்போகிறது; இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கொண்டு வரப்போகிறது; புலிகளோடு யுத்த நிறுத்தம் செய்யப் போகிறது; புலிகளோடு பேசி ஓர் உடன்படிக்கையை செய்து கொள்ளப் போகிறது. போன்ற விடயங்கள் எல்லாம் அப்போதே உங்களுக்குத் தெரியும். உங்களுக்கு மட்டுமல்ல இந்த விடயங்கள் முழு நாட்டுக்குமே தெரிந்திருந்தன.

இத்தனையையும் தெரிந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான நீங்கள் யூ.என்.பி.யோடு முஸ்லிம் சமூகத்தின் சார்பாக ஏதாவது உடன்படிக்கையொன்றைச் செய்தீர்களா? முஸ்லிம் அலகு, கரையோர மாவட்டம், இனப்பிரச்சினையில் முஸ்லிம்களின் நிலைப்பாடு, ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பு போன்ற எதைப்பற்றியாவது யூ.என்.பியுடன் ஒப்பந்தம் செய்தீர்களா? நீங்கள் அப்படி எதுவும் செய்யவில்லை. இது நீங்கள் விட்ட மாபெரும் தவறு. நமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் யாருடன் சேரும்பொழுதும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும். சந்திரிகா என்றால் என்ன, சாணக அமரதுங்க என்றால் என்ன, தொண்டமான் என்றால் என்ன எல்லோருடனும் அரசியல் ரீதியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் கட்சிதான் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ். ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வு என்ற இவ்வளவு பெரிய விடயத்தில் நீங்கள் யூ.என்.பி.யுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளாமல் ஏன் தவறு விட்டீகள் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

சரி, அதை மன்னிப்போம். கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அரசு-புலிகள் ஒப்பந்தமொன்று நடைபெறப் போவதாகக் கூறப்பட்டது. பெப்ரவரி மாதத்தில் அது சம்பந்தமாக அமைச்சரவையில் ஆராயப்பட்டது. பெப்ரவரி 8 இல் 'இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து அரசு திருப்தி' என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. பெப்ரவரி 9இல் 'நகல் திருத்தங்களுடன் நோர்வே குழுவினர் ஒஸ்லோ பயணம்- 20ம் திகதிக்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்து' என்று டெய்லி நியூஸில் செய்தி வெளிவருகிறது.

(இந்நேரத்தில் குறிப்பிட்ட பத்திரிகைச் செய்திகளைக் காண்பிக்கிறார். தொடர்ந்து)

"பல தடவைகள் நான் உங்களைப் பாராளுமன்றத்தில் சந்தித்து, பாராளுமன்ற Lobbyல் வைத்து, கண்டீனில் வைத்து உங்களிடம் 'அரசும் புலிகளும் ஒப்பந்தம் செய்யப் போகிறார்கள். இந்த ஒப்பந்தத்தினால் முஸ்லிம்கள் பாதிக்கப்படப் போகிறார்கள்.எனவே இதுவிடயமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுங்கள் என்று பல தடவைகள் கெஞ்சினேன். ஆனால் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின் அரசு புலிகள் ஒப்பந்தம் கைச்சாத்தாகியும் விட்டது.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் கூட 'வட கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் தாயகம்' என்ற ஒரு வரி இருக்கிறது. ஆனால் இந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. அன்று வட கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்று சொன்னதையே நாம் எதிர்த்தோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் பற்றி ஒரு வரி கூட இல்லாதிருந்தும் அதை நீங்கள் எதிர்க்கவில்லை. போதாதற்கு இந்த ஒப்பந்தத்தின் முன்னுரையில் 'யுத்தத்தில் சம்பந்தப்படாத குழுக்களில் ஒன்றாக' நாம் குறிப்பிடப்படுகிறோம். இவ்வாறு குறிப்பிடுகையில் நீங்கள் அதை எதிர்த்துப் பேசாமல் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? எதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?

மார்ச் 4இல் பாராளுமன்றத்தில் நீங்கள் கூறும் போது, உங்களுடைய அங்கீகாரத்தோடும். திருத்தங்களோடும்தான் ஒப்பந்தம் செய்ததாகச் சொன்னீர்கள். இந்த ஒப்பந்தத்தை வாழ்த்துகிறேன்: வரவேற்கிறேன்: பாராட்டுகிறேன் என்றும் கூறினீர்கள்.

மார்ச் 6 இல் நீங்கள் பாணந்துறையில் பேசியது 7ம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது. அதில் 'இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் ஒவ்வொருவரையும் துரோகிகளாகக் கணிக்க வேண்டும்!' என்று நீங்கள் கூறியதாகச் செய்தி உள்ளது. அப்போதுகூட இந்த ஒப்பந்தம் முஸ்லிம்களுக்கு ஏற்றதல்ல என்று உங்களிடம் பலமுறை கூறி, அது சம்பந்மாக நடவடிக்கை எடுக்கும்படியும் கெஞ்சினேன்.

இந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் உரிமைகள், பாதுகாப்பு, எதிர்காலம், முஸ்லிம்களுக்கான அலகுகள் என்று எவையுமே சேர்க்கப்படவில்லை. இதைச் சுட்டிக்காட்டி உங்களிடம் நான் பல முறை சொன்னேன். ஆனால் அண்மையில் நீங்கள் 'இது வெறும் ஒப்பந்தம்தானே: தீர்வல்ல என்று சொல்கிறீர்கள். அப்போது நான் 'சில வேளை இன்னும் 10, 15 வருடங்களுக்கு இதுவே தீர்வாக இருந்தாலும் இருந்து விடும்' என்று சொன்னேன்.

இது, இப்படியிருக்க, 24.02.2002ல் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் துரிதப்படுத்துமாறும், நடைமுறைப்படுத்துமாறும் நீங்கள் வேண்டுகோள் விடுக்கிறீர்கள். இது உங்கள் உத்தியோகப்பூர்வ அறிக்கையாகவும் டெய்லி நியூஸில் பிரசுரமாகியுள்ளது.

31.03.2002ல் 'புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் அனைவருக்கும் நிம்மதி' என்று நீங்கள் சொன்னது 'நவமணி' பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

இதுவெல்லாம் நீங்கள் விட்ட மாபெரும் தவறுகள். எனினும் அல்லாஹ்வின் நாட்டம் அப்படியோ தெரியவில்லை. எனவே அதை விடுவோம்.

பெப்ரவரி 24ல் நான் உங்களைச் சந்தித்தேன். 'சரி... ஏதோ நடந்து முடிந்து விட்டது. இனியுள்ள விடயங்களை உடனடியாக ஆராய்வோம். இந்த ஒப்பந்தத்தால் முஸ்லிம்களுக்கு நிறைய பாதிப்புகள் உண்டு. நாளை அல்லது மறுநாள் ஒரு கூட்டத்தைக் கூட்டுங்கள் என்று உங்களிடம் சொன்னேன்...!"

இவ்வாறு கூறிவிட்டு ஹிஸ்புல்லாஹ் ஹக்கீமைப் பார்த்து 'அவ்வாறு சொன்னேனா? இல்லையா?' என்று கேட்க, ஹக்கீம் மௌனமாக இருக்கிறார் ஹிஸ்புல்லாஹ் தொடர்ந்து பேசுகிறார்.

உங்களிடம் நான் எனது கட்சிக்காரர்களோடு, மயோன் முஸ்தபா, திருமலை மஹ்ரூப் எல்லோரையும் அழைத்து வருவதாகச் சொன்னேன். ஆனால், நீங்கள் எந்தக் கூட்டத்தையும் கூட்டவில்லை. மார்ச் 5ம் திகதி பாராளுமன்றத்தில் உங்களைச் சந்தித்து. 'எல்லோரையும் சேர்த்து உடன் கூட்டமொன்றைக் கூட்டுங்கள்' என்று மீண்டும் கெஞ்சினேன். அதுவும் உங்கள் காதில் விழவில்லை.

ஆனால் எம்.எச். முஹம்மது ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதற்கு என்னை அழைத்தார். நான் அவரது கூடடத்திற்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அத்தோடு அவரிடம் இந்தப் பிரச்சினையைச் சிக்கலாக்கி விடாதீர்கள் என்றும் கேட்டுக் கொண்டேன்.

'இந்தப் பிரச்சினையைக் கையாளும் உரிமை முஸ்லிம் காங்கிரஸுக்குத்தான் உண்டு. இது போன்ற பிரச்சினைகளைக் கையாளத்தான் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்துள்ளார்கள்' என்றும் எம்.எச்.முஹம்மதுவிடம் சொன்னேன். அதற்கவர் 'றவூ·ப் ஹக்கீம் வருவதாகச் சொல்லியுள்ளார்' என்றார்.

'அவர் வரட்டும்; நான் வரமாட்டேன். ஏனெனில் இந்தப் பிரச்சினையை றவூப் ஹக்கீம்தான் கையாளவேண்டும்!' என்று அவரிடம் தெளிவாகக் கூறிவிட்டேன்.

அதன் பின்னர் உங்களைச் சந்தித்தேன். 'உடனடியாகக் கூட்டத்தைக் கூட்டுங்கள். இல்லையெனில் பிரச்சினை மேலும் சிக்கலாகி விடும்!' என்று சொன்னேன். மற்றுமுள்ள முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களிடமும் கூறினேன்.

'எம்.எச்.முஹம்மது போன்றோரிடமிருந்து தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸாகிய நாம் பட்ட பாடு, வேதனை, அவமானம், அடி என்பவற்றையெல்லாம் மறந்துவிட முடியுமா? எனவே அவா கூட்டும் கூட்டத்திற்குப் போக வேண்டாம்!' என்று கெஞ்சிக் கெஞ்சிக் கூறினேன். ஆனால் கேவலம், அவர் கூட்டிய கூட்டத்தில் போய் உட்கார்ந்து பேசிவிட்டு வருகிறீர்கள். இந்த முஸ்லிம் சமுதாயம் மட்டையை உங்களிடம் தந்துள்ளது. நீங்கள் தான் பந்தை சரியாக அடிப்பீர்கள் என்று எண்ணியே மட்டையை உங்களிடம் தந்துள்ளது. ஆனால் நீங்களோ, முஸ்லிம் சமுதாயம் உங்களை நம்பித்தந்த மட்டையை யாரிடமோ கொடுத்துப் பிழையாகப் பந்தையடிக்கப் பண்ணுகிறீர்கள். சரி; அதையும் விடுவோம்.

ஒருநாள் பாராளுமன்ற கண்டீனில் டீ குடித்துக் கொண்டிருக்கும் போது 'ரூமுக்கு வாருங்கள்' என்று என்னை அழைத்தீர்கள். முஸ்லிம் சமுதாயத்துக்காக உங்கள் ரூமுக்கு வந்தேன். புலிகள் வரச் சொல்லி அழைப்பு விடுத்திருப்பதாகச் சொன்னீர்கள். 'சந்தோஷம். புலிகளைச் சந்திக்கப் போவதாக இருந்தால் பிரதம மந்திரியிடம் பேசி, அவரது அனுமதியுடன் போங்கள். பிரதம மந்திரியுடன் புலிகளைச் சந்திக்க விருப்பமில்லையென்று முதலிற் சொல்லுங்கள். அவர் உங்களை வற்புறுத்தினாலேயொழிய நீங்கள் புலிகளைச் சந்திக்கப் போகாதீர்கள்' என்று கூறினேன். அவ்வாறு போனீர்களென்றால் நாளை நமக்கான ஒரு தேவையைப் பிரதம மந்திரியிடம் கூறுகையில் Why not you talk to them? why not you discu-ss with them? why not you settle with them? என்று கேட்டு அவர் எங்களை மாட்டிவிடுவார் என்றும் சொன்னேன். ஆனால் நீங்கள் என் பேச்சைக் கேட்காமல் புலிகளைச் சந்திக்கச் சென்றீர்கள். சென்றவாரம் நீங்கள் பிரதம மந்திரியைச் சந்திக்கப் போகையில் உங்களோடு நானும் வந்தேன். அப்போது, இடைக்கால நிர்வாக சபை பற்றி நீங்கள் பிரதமருடன் பேச, அவர் 'Why not you talk to them?' என்ற அதே கேள்வியை உங்களிடம் கேட்டார். ஆனால் அன்று நீங்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை.

'சரி... போறதுதான் போகிறீர்கள். ஆனால் புலிகளோடு ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள்' என்றேன் அன்று.

ஏப்ரல் 12ல் உங்கள் அமைச்சில் ஒரு கூட்டம் கூட்டினீர்கள். புலிகளைச் சந்திக்கச் செல்வது பற்றிக் கதைக்க வேண்டுமென்று சொல்லி என்னையும் கூப்பிட்டீர்கள். வந்தேன். அநேக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிமார்களும் இருந்தார்கள். என்னைப் பேசச் சொன்னீர்கள். பேசினேன். 'புலிகள உங்களோடு உடன்படிக்கையொன்றைச் செய்யவுள்ளார்கள். ஆனால் அவர்களோடு எந்த உடன்படிக்கையையும் செய்யாதீர்கள். சும்மா போய்விட்டு வாருங்கள். ஏனெனில் வடக்கு முஸ்லிம் அகதிகள் மீளக் குடியேறலாம் என்று புலிகள் உடன்படிக்கை செய்ய வருவார்கள். அவ்விதமான உடன்படிக்கையைச் செய்துவிடாதீர்கள். நாளை உங்கள் பிறந்தநாள். என்னுடைய வாழ்த்துக்கள். அகதிகள் பற்றிப் புலிகளோடு பேசுங்கள். ஆனால் அவர்கள் விடயத்தில் முடிவுக்கு வந்து விடாதீர்கள்!' என்று நான் அந்தக் கூட்டத்தில் பேசும் போது. காத்தான்குடியைச் சேர்ந்த சட்டத்தரணி ஜவாட் குறுக்கிட்டு 'உங்கள் கதையைப் பார்த்தால் பிரச்சினை முடியாது போலிருக்கிறதே. அப்படியானால் அகதிகள் பிரச்சினையைப் பிச்சைக்காரன்ன புண் மாதிரி வைத்துக் கொள்ளவா சொல்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு நான் 'ஆமாம்; புண் மாதிரி வைத்துக் கொள்ளத்தான் வேணடும். நமக்குப் பிரச்சினை இருந்தால்தான் உலகத்திடம் போய் இருக்கும் பிரச்சினையைச் சொல்லி, மற்றப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெறமுடியும். நீங்கள் புலிகளோடு ஒப்பந்தம் செய்வதால் மட்டும் வடக்கில் மீளக் குடியேறிவிட முடியாது. ஆனால், ஒப்பந்தத்தோடு அந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். நமது பிரச்சினைகளுக்கு உரிய, நிரந்தரத் தீர்வு வரும் வரை நமக்குப் பிரச்சினை என்ற புண் இருக்க வேண்டும். எனவே, புலிகளோடு பேசுங்கள்,' ஆனால் உடன்படிக்கை எதிலும் கைச்சாத்திட்டு விடாதீர்கள்!' என்று அந்தக் கூட்டத்தில் நான் பேசினேன்.

அன்று இரவு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஒரு கூட்டம் நடந்தது. அங்கும் 'புலிகளோடு முஸ்லிம் காங்கிரஸ் தான் பேச வேண்டும்' என்று நான் கூறினேன். பௌசி எம்.பி.யும் இதையேதான் சொன்னார்.

இவ்வளவு சொல்லியும் நீங்கள் போய்ப் புலிகளோடு உடன்படிக்கை செய்து கைச்சாத்திட்டு விடடு வருகிறீர்கள்.

அந்த ஒப்பந்தம் என்ன சொலகிறது? பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் என்று கூறுகிறது. இது மிகப் பெரும் தவறு.

கிழக்கு முஸ்லிம்களிடமிருந்து போராட்டத்திற்கு நிதி அறவிட மாட்டோம என்று ஒப்பந்தம் சொல்கிறது. அதில் நீங்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள். ஆனால் போராட்டத்துக்கு அல்லாமல் வேறு தேவைகளுக்கெனப் புலிகளால் முஸ்லிம்களிடமிருந்து நிதி அறவிட முடியுமென்பதை அது மறைமுகமாகச் சொல்கிறது.

நம்மிடம் புலிகள் கப்பம் வாங்கினால், நாம் தமிழ் மக்களிடம் கப்பம் வாங்குவோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இது முடியுமா? இப்படி அறவிட்டால் எவ்வளவு பிரச்சினைகள் வரும்? எனவே ஒரு விடயத்தைச் சொல்வதற்கு முன் யோசித்துச் சொல்ல வேண்டும்.

முதலாவது உங்களுக்குள் தெளிவு இருக்க வேண்டும். நமது கட்சி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்பதில் தெளிவு இருக்க வேண்டும்.

நீங்கள் மேடைகளில் நாட்டின் அமைதி, சுபீட்சம், பொருளாதாரம் என்று பேசுகிறீர்கள். ஸ்ரீ.ல.மு.கா. என்ற கட்சியானது முஸ்லிம் சமுதாயத்தின் பாதுகாப்பு, உரிமைகளுக்காகவே தோன்றியது. வடகிழக்கில் ஒரு சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, அந்த ஒப்பந்தத்தின் கீழ் முஸ்லிம்கள் பாதிக்கப்படுவர்களாக இருந்தால் அந்த ஒப்பந்தத்தைக் கிழித்து வீசுவதுதான் முஸ்லிம் காங்கிரஸின் பணியாகும்.

இதுவரையில் நீங்கள் நிறைய தவறுகள் விட்டுள்ளீர்கள். இப்போது தலைக்கு மேலே வெள்ளம் போய்விட்டது. நீங்கள் பிரதம மந்திரி காப்பாற்றுவார் என்று சொல்கிறீர்கள். நாம் பிரதம மந்திரியிடம் முஸ்லிம்கள் சார்பாக ஒன்பது கோரிக்கைகளை வைத்தோம். அவற்றை நிறைவேற்றுவதாகப் பிரதம மந்திரி சொன்னார். அன்று மாலையே தமிழ்க் கட்சிக்காரர்கள் ஒன்பது கோரிக்கைகளைக் கொண்டு போய்ப் பிரதமரிடம் கொடுத்தார்கள். அவற்றையும் நிறைவேற்றுவதாக அவர் கூறியிருக்கிறார்.

நமது தனிப்பட்ட நன்மைகளுக்காக, இலாபங்களுக்காகச் சமூகத்தைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. இனியாவது சமூகத்தை எப்படி வழிநடாத்துவது; முன்னேற்றுவது என்று பாருங்கள். சமூகத்திற்காக 24 மணி நேரமும் உங்களோடு இணைந்து பணிபுரிய நான் தயாராகவிருக்கிறேன்!"

பகல் போசன இடைவேளைக்கு முன்னர் ஹிஸ்புல்லாஹ் ஆவேசமாகப் பேசி முடிக்க, இடைவேளையின் பின்னர் ஹக்கீம் பேசினார்.

ஹிஸ்புல்லாஹ் தன்னை நோக்கி வீசிய எந்தக் குற்றச் சாட்டுகளுக்கும் அவர் பதிலளிக்கவில்லை. ஆனால், ஹிஸ்புல்லாஹ் பேசியதற்கு ஹக்கீம் விளக்கம் சொல்வாரென்றே சபையோர் எதிர்பார்த்திருந்தனர்.

ஹிஸ்புல்லாஹ் பேசியதில் எதையாவது பொய்யென்று ஹக்கீம் மறுத்துப் பேசுவாரானால், தான பேசியதெல்லாம் உண்மை என்று நிரூபிக்க, ஒரு பையனைப் பள்ளிவாசலுக்கு அனுப்பி குர்ஆன் ஒன்றை எடுத்து வரச் செய்து, அதில் சத்தியம் செய்ய ஹிஸ்புல்லாஹ் தயாராகவிருந்தார். அப்படியொரு நிலைமை ஏற்படும் பட்சத்தில் அவர் ஹக்கீமையும் சத்தியம் செய்யும்படிக் கோரவும் இருந்தார் எனத் தெரிகிறது.

ஆனால், ஹக்கீமோ முஸ்லிம் சமூகத்துக்கு ஊடகம் ஒன்று இல்லை. சர்வதேச ரீதியான முஸ்லிம்களின் பிரச்சினை என்ற பாணியிற் பேசியதோடு பிரதம மந்திரி தன்னை அட்ஜஸ்ட் பண்ணிப் போகும்படிச் சொல்வதாகவும் கூறினார். நாம் பேச்சுவார்த்தைகளில் மேலும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் சொல்லத் தவறாத ஹக்கீம், அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் பேசிய ஆக்ரோஷப் பேச்சைச் சாடுவது போல் சில வார்த்தைகளைப் பிரயோகித்தார்.

பின்னர் 'ஹிஸ்புல்லாஹ்வைக் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம்தான். ஆனால் அவரது கதிரைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்றுதான் யோசிக்கிறேன்.' என்று ஹக்கீம் கூறிய போது 'நிறுத்துங்கள் தலைவர். என் கதிரையை நான் பாதுகாத்துக் கொள்வேன்!' என்று சிரித்தபடியே கூறினார் ஹிஸ்புல்லாஹ்.

இறுதியாக, கூட்டத்தை வழிநடாத்திக் கொண்டிருந்த நதீர் மௌலவி, 'ஹிஸ்புல்லாஹ் ஒரு மணித்தியாலம பேசினார். நிறைய விடயங்கள் சொன்னார். தலைவரிடம் விளக்கங்கள் கோரினார். அவற்றுக்கெல்லாம் தலைவரிடமிருந்து விளக்கங்கள் வருமென்றுதான் எதிர்பார்த்தோம். ஏனோ தலைவர் ஹக்கீம் ஒரு விளக்கமும தரவில்லை!" என்றார்.

இது நதீர் மௌலவியின் ஆதங்கம் மட்டுமல்ல. கூடியிருந்த உலமாக்களினதும், ஏனையோரதும் ஆதங்கமாகவே இருந்தது.

கூட்டம் சம்பந்தமாக அறிந்த முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளும், முஸ்லிம் மக்களும் கூட ஹிஸ்புல்லாஹ்வின் பேச்சுக்கு ஹக்கீம் விளக்கமெதனையும் கூறாதது கண்டு ஆத்திரமும், கவலையும், அதிருப்தியும் கொண்டே இருக்கின்றனர். இனியாவது ஹக்கீம் விளக்கம் தருவாரா...?

# இலவச சீருடைக்கு ஏகப்பட்ட செலவு

பாடசாலைகளுக்கான இலவச சீருடை விநியோகத்தின் புதிய நடைமுறையினால் மலையகப் பெற்றோர் பெரும் விசனமடைந்துள்ளனர். சீருடை தேவையானவர்கள் விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அதிபரிடமும், பிரதேச சபை அதிகாரியிடமும் கையெழுத்துப் பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மலையோசை
பா. யோகராஜன்

விண்ணப்பப் படிவங்களைப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது. சில இடங்களில் 5 ரூபாவும் சில இடங்களில் 10 ரூபாவும் விண்ணப்பப் படிவத்துக்காகச் செலுத்த வேண்டியுள்ளது. விண்ணப்பப்படிவத்துக்காகப் பணம் செலுத்தும்போதே இலவச சீருடை விநியோகம் என்ற சொல்லுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடுகிறது.

இதுவரை காலமும் மாணவர்களின் சீருடை பற்றிய எண்ணம் பெற்றோர்களுக்கு இருக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்கான சீருடை பொதி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வந்ததால் வசதியற்ற பெற்றோர் பெரும் நன்மையடைந்து வந்தனர்.

புதிய நடைமுறையினால் விண்ணப்பப் படிவங்களை நிரப்பவேண்டும். விண்ணப்பப் படிவங்களை நிரப்பத் தெரியாத பெற்றோர் அவற்றை நிரப்பத் தெரிந்த ஒருவரை நாடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சரியான தகவல்களுடன் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் பாடசாலை அதிபரை நாடிச் செல்லவேண்டும். தொழிலாளியின் கஷ்டகாலம் என்றால் அவன் செல்லும் நாளில் பாடசாலை அதிபர், பாடசாலை அலுவலாக வெளியில் சென்றிருப்பார் அல்லது அன்று பாடசாலைக்கு வராமல் இருந்திருப்பார்.

பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் பிரதேச சபை அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும். தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் தமது அலுவல்களுக்காக பிரதேச சபை செல்வது வழமை. அவர்களுடன் இன்னும் நூற்றுக்கணக்கான பெற்றோர் பிரதேச சபை அலுவலகம் செல்வதால் ஏற்படும் நெருக்கடியால் பிரதேச சபை அலுவலக ஊழியர்களின் பணிகள் தாமதமடையும்.

சீருடை விண்ணப்பங்களுக்கு கையொப்பமிட தனியான இடம் ஒன்று இல்லாததால் புதிதாக பிர

செ.தி.பெருமாள்

தேச சபை அலுவலகம் செல்லும் பெற்றோர் யாரிடம் கையெழுத்து வாங்குவது எனத் திண்டாடும் நிலைமை உருவாகலாம். இந்தக் கையெழுத்துப் பெறும் பணி ஒரு நாளில் நிறைவு பெறும் என்பதை அறுதியிட்டுச் சொல்லமுடியாது.

இரண்டு பேரிடம் இலவச சீருடைக்காக கையெழுத்துப் பெற எத்தனை நாட்கள் வேலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்படும் என்பதைக் கூறமுடியாதுள்ளது. இலவச சீருடைக்காக வருமானத்தை இழக்கவேண்டிய சூழ்நிலை மலையகப் பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் சீருடைத் துணிகள் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எல்லா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலமும் துணிகள் வழங்கப்படுமா? அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புடவைக் கடைகள் மூலம் சீருடைகள் வழங்கப்படுமா என்பது தெரியவில்லை.

மஸ்கெலியா, சாமிமலை போன்ற பகுதிகளில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புடவைக் கடைகள் இல்லை. இப்பகுதியில் உள்ள பெற்றோர் ஹற்றன் சென்றே சீருடைத் துணிகளைப் பெறவேண்டும். ஒரு நாள் வேலையை இழந்து பஸ் காசு செலவுசெய்து இலவச சீருடைத் துணி பெறும் அவல நிலைக்கு மலையகப் பெற்றோர் தள்ளப்பட்டுள்ளனர்.

இலவச சீருடைக்கான விண்ணப்பப் பணம், கையெழுத்துகளுக்காக வேலைக்குச் செல்லாது அலைவது, சீருடைத் துணிபெறச் செல்லும் பஸ் பயணம், எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் இலவச சீருடைத் துணியை விட அதிகமாக மலையகப் பெற்றோர் செலவு செய்யும் நிலைமை உள்ளது.

வசதி குறைந்தவர்களுக்கு வரப்பிரசாதமான இலவச சீருடை விநியோகம் எட்டாக் கனியாக மாறிவிடும் அபாயநிலைமை தோன்றியுள்ளது. இதேவேளை வசதி உள்ள பெற்றோர் இந்த அலைச்சல்களைக் கருத்தில் கொண்டு இலவச சீருடைத் துணிக்காக விண்ணப்பிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து அரசாங்கம் இலவச சீருடைத் துணி விநியோகத்தை மீள்பரிசோதனை செய்யும் என மலையக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# லாபப் பணத்தைப் பெற தொழிலாளர் போராட்டம்

மஸ்கெலியா பிளான்டேசன் தோட்ட கம்பனி கடந்த வருடத்தை விட இந்த வருடம் அதிக அளவிலான லாபம் ஈட்டியுள்ளது என நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக நாள் ஆதாயமாக அதிக லாபம் கிடைக்கும் என எதிர்பார்த்த தொழிலாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

மஸ்கெலியா பிளான்டேசன் தோட்டங்களில் வேலை செய்யும் அதிகாரிகளுக்கும், குமாஸ்தா, கணக்கப்பிள்ளை சுப்பவைசர், வைத்திய அதிகாரி, தாதிகள் ஆகியோருக்கும் அவர்களின் பதவிக்கேற்ப ஆயிரக்கணக்காக வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தங்களது முழு சக்தியையும் பயன்படுத்தி வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்தளவு ஆதாயம் வழங்கி உள்ளதாக அறியவருகிறது. அதுவும் அவர்களுக்கு தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வேலை நாள் 65\100 இற்கு வேலை செய்திருந்தால் மட்டுமே இந்தப் பணம் வழங்கப்பட உள்ளது என கூறப்படுகிறது. இந்த வேலை செய்யாவிடின் அந்தப் பணமும் இல்லை என்பதால் மக்கள் வெறுப்புடன் உள்ளனர்.

மஸ்கெலியாவில் உள்ள எட்டு பிரிவுகள் அடங்கிய மரே தோட்டத்தில் தோட்டத் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடி இப்பணத்தை பெறுவதில்லை என முடிவெடுத்துள்ளனர். கடந்த ஆண்டைவிட மேலதிகமாக ஆதாய பணம் தரவேண்டும், தோட்ட முகாமைத்துவ அதிகாரி சம்பந்தப்பட்ட மரே தோட்டக் காரியாலயத்திற்கு வருகை தந்து சுமுகமாக பிரச்சினையை முடித்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துத் தோட்டத் தலைவர்கள் தலைமைக் காரியாலயத்திற்கு மின் அஞ்சற் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

சரியான முடிவு இல்லையாயின் இப்பிரிவில் வேலை செய்யும் 1495 தோட்டத் தொழிலாளர்களும் மெதுவாக வேலை செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தோட்டத் தலைவர்கள் கூறுகின்றனர்.

மஸ்கெலிய பிளான்டேசன் தோட்ட கம்பனியும் பெருந் தோட்டத் துறை அமைச்சும், மலையக அமைச்சர்களும் முன்வந்து கடந்த ஆண்டை விட மேலதிகமாக எமக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் எனவும், தோட்ட அதிகாரிகளுக்கு ஒருவிதமாகவும் தொழிலாளர்களுக்கு ஒருவிதமாகவும் பாரபட்சமாக செயற்படக் கூடாது எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

~மஸ்கெலியா நிருபர்~


பத்தனை சந்தியில் அமரர் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அம்மன் ஆலய வேலைகள் பூர்த்தியடைந்து இரண்டு வருடங்களாகியும் கும்பாபிஷேக வேலைகள் நடை பெறவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.


## முன்னணிப் பத்திரிகையான உங்கள் இனிய "இடி" வாரப் பத்திரிகையின் அந்தஸ்துமிக்க சந்தாதாரர்களாகுங்கள்

"இடி" வாரப் பத்திரிகை வெளியானதும் பரபரப்பாக விற்றுத் தீர்ந்து விடுவதால் அது பலருக்கும் கிடைக்காமற் போவதைக் கருத்திற் கொண்டு, இப்போது விஷேட சந்தாத் திட்டம் ஒன்றை உங்களுக்காக நாம் அறிமுகப்படுத்துகின்றோம்.

'இடி வாரப் பத்திரிகையின் விற்பனை விலை ரூ.18/-

'இடி' வாரப் பத்திரிகையைத் தபாலில் அனுப்பக் கட்டணம் ரூ.04/- எனவே 'இடி' வாரப் பத்திரிகையைத் தபாலிற் பெற ரூ.22/- ஆகும். ஆயினும் ரூ.20/- வீதம் எமது சந்தாதாரர்களுக்கு 'இடி'யை வாராவாரம் தபாலில் அனுப்ப நாம் முடி வு செய்துள்ளோம்.

இந்த வகையில் 'இடி'யின் சந்தா விபரம் பின்வருமாறு அமையும்:

| நாடுகள் | ஒரு வருடம் (52 வாரங்கள்) | 6 மாதங்கள் (26 வாரங்கள்) | 3மாதங்கள (13 வாரங்கள்) |
|---|---|---|---|
| இலங்கை | ரூ.1040/- | ரூ.520/- | ரூ.260/- |
| ஐரோப்பிய நாடுகள் | ரூ.3400/- | ரூ.1700/- | ரூ.850/- |
| அமெரிக்கா,கனடா | ரூ.4000/- | ரூ.2000/- | ரூ.1000/- |
| மத்தியகிழக்கு நாடுகள் | ரூ.3000/- | ரூ.1500/- | ரூ.750/- |

குறிப்பிட்ட காலத்திற்குள் 'இடி' வாரப் பத்திரிகையின் விலை அதிகமானாலும் கட்டப்பட்ட சந்தாத் தொகை அதற்கேற்ப அதிகரிக்கப்படமாட்டாது. இதனால் நீங்கள் மேலும் நன்மையடைகிறீர்கள்.

உங்கள் பெற்றோர், மனைவி, சகோதர சகோதரிகள், நண்பர்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் ஏற்ற அறிவுக் கருவூலங்களை அள்ளி வழங்கும் 'இடி'யின் சந்தாதாரர்களாவது உங்களுக்குப் பெருமையையும், கௌரவத்தையும் நிச்சயம் வழங்கும்.

சிறப்பும் தரமும் நிறைந்த 'இடி' வாரப் பத்திரிகையின் அந்தஸ்துக்குரிய சந்தாதாரர்களாகுவதற்கு மகிழ்ச்சியுடன் முடிவு செய்துவிட்ட நீங்கள் உங்கள் பெயர், தபால் விலாசம் என்பவற்றோடு உரிய சந்தாத் தொகையை எமக்கு அனுப்புங்கள்.

நீங்கள் நீட்டும் ஆதரவுக் கரங்களைப் பற்றிப் பிடித்து இன்னும் பல சாதனைகளை நாம் படைப்போம்!

நன்றி!

-இடி நிர்வாகத்தினர்-



## மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே!

இதையொட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு. எண்ணியவன் எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா? திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா? காதல் தோல்வியாகிவிட்டதா? கணவன் - மனைவி ஒற்றுமை குறைகிறதா? கையில் பணம் தங்கவில்லையா? பணவருவாய் குறைவா? கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா? குடும்ப வாழ்க்கை இனிமையாக அமையவேண்டுமா? லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா? வெளிநாட்டுப பயணத்தில் தங்குதடை ஏற்படுகின்றதா? தான்பெற்ற பிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா? பெருவாழ்வு - குபேர வாழ்வு பெறவேண்டுமா? குழந்தை பேறு கிட்டவில்லை எனக் கவலையா? கல்வியில் சித்திபெற வேண்டுமா? கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட்கடாட்சத்தால் 100க்கு 100 வீதம் வெற்றிபெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம். வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்படக்கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவை நிமித்தம் வெற்றி கிட்டுவது மிகமிகச் சுலபம். மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியில் கொடுப்பதென்றால் அது எமது திருவருளே. அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங்களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும் அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால் எண்ணற்ற வாடிக்கையாளர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிர்வாகப் பதிவேட்டில் காணலாம்.

வெளிநாட்டவர்களுக்கென அதிதொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியாலத் தொலைபேசிச் சேவை உண்டு.

TEL:- 00941-342463, 00941-470615

தேவைகளுக்கு

39 வருட மாந்திரீகத் துறையில் நிலையான சேவை புரியும்

உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூஷணம் சொல்லின் செல்வர்

டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N) JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Samy J.D.G.A.NL Jp Hon.Prof. (IUMA)
Sri Durgadevi Manthrika
Uchchada Peedam.

கொழும்பில் :
No.162, Kotahena Street,
Mayfield Road,
Colombo-13. SriLanka.

நுவரெலியாவில்:
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 05235097.

வெளிநாட்டார் தொடர்பு:
கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL: 00941-431137
FAX: 00941-344831

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இல.:
01-342463, 431137, 470615, Fax-344831
E-mail:drpksamy @ sltnet.lk
www.imexpolanka.com/drpksamy.

# சிலிக்கலம்


## கொலைகாரக் கவிஞர்



பென் ஜோன்சன் என்பவர் லண்டனில் கட்டடத் தொழிலாளியாக இருந்தவர். பிறகு மத குருவாகவும் இங்கிலாந்தின் முதல் ஆஸ்தான கவிஞராகவும் ஆகியவர். 1598இல் இவர் கொலைக்குற்றச் சாட்டுக்காக சிறைத்தண்டனை பெற்றவர். மேடையில் நடித்துக் கொண்டிருக்கும் போது உடன் நடித்தவருடன் தகராறு ஏற்பட்டு சண்டை முற்றிக் கடைசியில் கொலையில் முடிந்தது. அவர் ஒரு மதகுருவாக இருந்ததால் மரண தண்டனை விதிக்கப்படவில்லை. ஆனால் அக்கால வழக்கப்படி கொலைக்குற்றம் சுமத்தப்பட்டவர் என்று குறிப்பிட அவரது இடது கட்டை விரலில் 'T' என்ற முத்திரை குத்தப்பட்டது. மீண்டும் 1605 இல் அவர் சிறைதண்டனை பெற்றார். அவரது காதுகளை வெட்டிவிடும்படி தீர்ப்பளிக்கப்பட்டாலும் அவர் அரச செல்வாக்குள்ளவர்களின் உதவியோடு அத்தண்டனையிலிருந்தும் தப்பிவிட்டார். நாடகாசிரியராகத் திகழ்ந்த அவர் 1616 இல் அரசரின் அன்பைப் பெற்று ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டார்.

## இயற்கை செய்யும் உதவி

அட்டைகள் மண்புழு இனத்தைச் சேர்ந்தவை. இவைகளுக்கு சில விசித்திர இயல்புகள் உள்ளன. அதன் உடலின் இருபுறமும் உறிஞ்சிகள் இருக்கும். முன்புற உறிஞ்சியின் நடுவில் அதன் வாய் இருக்கும். கூரிய பற்களைக் கொண்ட அதன் மூன்று தாடைகளால் விலங்கைக் கடித்து "Y" வடிவில் காயத்தை உண்டாக்கும். அதன் உமிழ்நீரில் உள்ள ஒரு இரசாயனப் பொருள்



காயம்பட்ட இடத்தில் வலிதெரியாமற் செய்யவல்லது. அத்தோடு அவை சுரக்கும் மற்றொரு இரசாயனப் பொருள் விலங்கின் இரத்தம் உறையாமல் தடுக்கிறது. இதனால் அட்டைகள் பாதிக்கப்பட்ட விலங்குகள் வலியுணர முன்னமே நிம்மதியாக வேண்டியளவு இரத்தத்தைக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொள்கின்றன.

## மீசைக்கார மாமா



இவர் துருக்கி நாட்டுக்காரர். தோகான் என்று பெயர். இவரது மீசையின் நீளம் ஐந்து அடி. மீசை தொங்காமல் இருக்க இரு நுனிகளிலும் கயிறு கட்டி தலைப்பாகையுடன் சேர்த்துக் கட்டியிருக்கிறார். மாதமொன்றுக்கு 1.6 அங்குலம் மீசை வளர்கின்றது என்று இவர் சொல்கிறார்.

## முதல் பல்கலைக்கழகம்

கிரேக்க அறிஞரான பிளேட்டோவின் இயற்பெயர் அரிஸ்டோக்ளிஸ். அகன்ற தோள்களை உடையவராக இருந்ததால் அவரை மக்கள் பிளேட்டோ என அழைத்தனர். எனவே அப்பெயர் நிலைத்துவிட்டது. பிளேட்டோ தம் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக "அகடமி" என்ற அமைப்பொன்றை ஏற்ப்படுத்தி நடத்தி வந்தார். இதுவே உலகின் முதல் பல்கலைக்கழகம் என்று கருதப்படுகிறது. தத்துவமேதை அரிஸ்டோட்டிலும் இந்த "அகடமி"யில் பயின்றவர்தான்.

## தேனிலவு

தேனிலவு என்பது ஹனிமூன் எனும் ஆங்கில வார்த்தையின் நேரடி மொழிபெயர்ப்பு. இந்த வார்த்தை நவீன தமிழில் தான் பயன்படுத்தப்படுகின்றது. ஹனிமூன் என்ற ஆங்கில வார்த்தை 'ஹொனி மன்த்' (Honey month) என்கிற பழைய ஆங்கில வார்த்தையிலிருந்து வந்தது. அதாவது 'கலியாணமாகி ஒரு மாதம் தான் தேன் போல இனிக்கும்' என்கிற கருத்து அவர்களிடையே இருந்திருக்கிறது. ஹனி மன்த் என்கிற வார்த்தை 'மோகம் முப்பது நாள்' என்கிற தமிழ்ப் பழமொழியிலிருந்து வந்திருக்கிறதா என்று எவராவது ஆராய்ச்சியில் இறங்காமல் இருந்தால் சரி.

## எனது பழைய டயறி 01

அப்பா ஒரு சர்வாதிகாரி. வீட்டில் அவர் வைத்தது தான் சட்டம்!

ரேடியோ அதிகம் கேட்கமுடியாது. டி.வி அதிகம் பார்க்க முடியாது. சத்தம் போட்டுப் பேச முடியாது. இஷ்டத்துக்கு சுற்றித் திரிய முடியாது. இரவில் நெடுநேரம் விழித்திருக்கவும் முடியாது.

அப்பா இல்லாத வேளைகளில் வீடு வெடிக்கும். அப்பா வந்தாலோ கப்சிப்!

ஒரு நாள் மாலை.

ரூபவாஹினியில் பொன்மாலைப் பொழுது பார்த்துக் கொண்டிருந்தோம். ஏதோ ஒரு டூயட் போய்க் கொண்டிருந்தது.

திடீரென அப்பா வந்தார். கோபத்தோடு டி.வியை அணைத்துவிட்டு, அதை உள் வீட்டுக்குள் மூட்டைகட்டி வைத்துவிட்டார்.

அன்றிரவு ஏதோ சப்தம் கேட்டு கண் விழித்தேன்.

அப்பாதான் டி.வியை எடுத்து, போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

லவ் பேர்ட் என்ற தொடர் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அப்பா மட்டும் டி.வி பார்க்கலாமா? இதென்ன நியாயம்? விடை தெரியாத கேள்விகளோடு தூங்கிப் போய் விட்டேன்.

அப்பா செய்தது தப்பு என்று அன்று தோன்றியது. இன்று, அவர் செய்ததெல்லாம் சரிதான் என்று நியாயப்படுத்த வேண்டிய நிலை எனக்கு வந்துவிட்டது.

காரணம் -

நானும் ஒரு அப்பாவாகிவிட்டதுதான்.

*-ஜே.பாலா*

## வேத நூல் இல்லாதவர்கள்

உலகின் முக்கிய மதங்கள் எல்லாவற்றுக்கும் அதன் தத்துவங்களையும் சட்ட திட்டங்களையும் கூறும் வேதநூல் ஒன்று இருக்கும். ஆனால் ஜப்பானியர்கள் பின் பற்றும் 'ஷின்டோ' எனும் மதத்திற்கு வேதநூல் ஒன்றும் கிடையாது. அதன் பெரும்பாலான கோட்பாடுகள் புத்த, கன்பியூசிய மதங்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவை. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே ஜப்பானிய சக்கர வர்த்தி அம்மதத்தினரின் கடவுளாகக் கருதப்பட்டு வந் தார்.

1945 இல் சக்கரவர்த்தி ஹிரோட்ஹிட்டோ கடவுள் பதவியைத் துறந்து (!) வெறும் மன்னராக மட்டுமே தான் இருக்கப்போவதாக அறிவித்திருக்கின்றார். ஜப்பானில் சுமார் ஒரு கோடி பேர் ஷின்டோ மதத்தைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் ஒரு நிலைக் கண்ணாடியைத் தமது புனிதப் பொருளாகக் கொண்டிருக்கின்றார்கள். சூரிய தேவதை உலகைப் படைத்ததும் இக்கண்ணாடியில் தான் தன்னுடைய முகத்தைப் பார்த்தது என்பது அவர்களது நம்பிக்கை. ஜப்பானின் இஸே என்ற இடத்திலுள்ள ஷின்டோ ஆலயத்திலேயே இக்கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான பேர் வந்து இக்கண்ணாடியை வழிபட்டுச் செல்கின்றனராம்!

## பிரதமரைக் கொன்றவன்

ஹென்ரிக் வெர்வோர்ட் 1958 முதல் 1966 வரை தென் ஆபிரிக்காவின் பிரதமராக இருந்தவர். இன ஒதுக்கல் கொள்கையை நிலைநாட்ட கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தவர். இதனால் கறுப்பர்களுடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டவர். முதல் முறையாக அவரை கொலை செய்ய முயற்சித்தபோது அவர் தெய்வாதீனமாக அதிலிருந்து தப்பிவிட்டார். அவர் தலையில் இரு குண்டுகள் புகுந்துகொண்ட போதும் மருத்துவர்களின் அதீத முயற்சியால் அவர் பிழைத்துக் கொண்டார். ஆனால் அது நிகழ்ந்து ஆறு வருடங்களின் பின்னர் 1966 இல் பாராளுமன்றத்தில் வைத்தே ஒரு வெள்ளையன் கத்தியால் குத்தி அவரைக் கொன்றுவிட்டான். போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த அக்கொலையாளி பாராளுமன்றத்தில் பல காலம் வேலை செய்தவன். அவன் மனநோயாளி என்று கருதப்பட்டதால் மரண தண்டனையிலிருந்து தப்பிக்கொண்டான்.

## மனிதனின் மூதாதையர்


பரிணாம வளர்ச்சியில் மனிதன் குரங்கிலிருந்து உருவானான் என்று சொல்லப்படுகின்றதல்லவா? இந்த இருவருக்குமே மூதாதை லெமூர் என்ற உயிரினம், பூச்சிகளைத் தின்று வாழும் இந்தச் சிறிய விலங்கு மரங்களில் தங்கி இரவில் உணவு தேடும். இது 5 கோடி வருடங்களுக்கு முன்பே தோன்றிவிட்டது என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த லெமூர்கள்தான் பரிணாம வளர்ச்சியில் குரங்குகளாக உருவெடுத்ததாம். இப்போதும் இந்த லெமூர் இனம் மடகஸ்கர் பகுதியில் வசித்துவருகின்றதாம்.

## நெட்டில் சுட்டவை



நான் கண்டுபிடிச்ச விண்டோஸில தப்பிருக்கலாம். அதுக்காக இப்பிடியா செய்யிறது...?

*-பில்கேட்ஸ்*




கெபரே கரட் அழகிகள்



எல்லாரும் பிஸிதான். அதுக்காக.....???



இந்தப் படம் சிரிக்கிறதிக்கில்ல. பெரியவங்க விடுற தப்ப சிந்திக்கிறதுக்கு...!





மப்பு தலைக்கேறினா சுவரென்ன முதுகென்ன?

# அலை கடலுக்கு அப்பால்

## மொனாலிஸா என் மொனாலிஸா

**–செ.சுசீலா–**
**பலாங்கொடை.**

கலை - அறிவியல்! இந்த இரண்டிலும் உலகப் புகழ் வாய்ந்தவர் லியனாடோ டாவின்ஸி.

உலகப் பிரசித்தம் வாய்ந்த "மொனாலிஸா" ஓவியத்தை வரைந்தவரும் இவர்தான்.

கி.பி. 1452ல் ப்ளோரான்டைன் என்ற இத்தாலிய நகரத்தின் அருகிலுள்ள 'வின்சி' எனும் கிராமத்தில் லியனாடோ பிறந்தார். பிரபல வழக்கறிஞரான சேர் பியரோ எண்டோனியோ டாவின்ஸி இவரின் தந்தை. தாயாரின் பெயர் கெதரீனா.

ஓவியக் கலை தொடர்பான நுணுக்கமான அறிவாற்றல் லியனாடோ டாவின்ஸியிடம் பெருகிக் காணப்பட்டது. மிக இளவயதிலேயே காணப்பட்ட இத்திறமையைப் புரிந்து கொண்டார் டாவின்ஸியின் தந்தை. தனது மகன் பெரும் ஓவியராக சர்வதேசமெங்கும் புகழ் பரப்ப வேண்டும் என ஆவல் கொண்டார். அக்காலத்தில் சிறந்து விளங்கிய ஓவியக் கலை ஞானியான என்றியா டெல் எவரோகியோ என்பவரிடம் டாவின்ஸியை ஓவியம் பயில ஒப்படைத்தார்.


இந்தக் கால கட்டத்தில் ப்ளோரன்டைன் நகரில் வாழ்ந்த புகழ் பெற்ற ஓவியக் கலைஞர்களான சென்ரோ, பொடிஷெலி ஆகியோரின் நட்பு டாலின்ஸிக்குக் கிடைத்தது. தனது 26 வது வயதில் ப்ளோரன்ஸ் நகரத்தில் சொந்தமாக கலை நிலையமொன்றை ஆரம்பித்து அதன் மூலம் ஓவியக் கலையில் பிரபலமடையத் தொடங்கினார் இவர்.

டெல் வெரோகியோவிடம் ஓவியக்கலை நிபுணத்துவத்தைக் கற்றறிந்து கொண்டு டாவின்ஸி தனது 30 வது வயதில் மிலான் என்ற நகரத்துக்குச் சென்றார். அங்குள்ள புனித மரியா பெல் கிறேஸ் டொமினியன் கன்னியர் விடுதியில் "இயேசு கிறிஸ்துவின் இராப்போசனம்" எனும் பிரபல ஓவியத்தை வரைந்தார். 28 அடி நீளம் கொண்ட ஓவியத்தை வரைந்து முடிக்க டாவின்ஸிக்கு 3 வருடங்கள் தேவைப்பட்டன.

கி.பி. 1500 ல் பிரான்ஸ் நாடு மிலானுடன் போர் ஒன்றை ஆரம்பித்தது. போரின் முடிவில் மிலான் பிரான்ஸிடம் வீழ்ச்சியடைந்தது. இந்நிலையில் டாவின்ஸி மீண்டும் ப்ளோரன்டைன் நகரத்துக்குச் சென்றார்.

அங்கிருந்தவாறே 1503ம் ஆண்டு மொனாலிஸா ஓவியத்தை வரைய ஆரம்பித்தார். இன்றும் மங்காமல் வரலாற்றில் இடம்பிடித்திருக்கும் மொனாலிஸா ஓவியத்தை வரைந்து முடிப்பதற்கு டாவின்ஸிக்கு நான்கு வருடங்கள் செலவாகின.

பிரான்ஸிஸ்கோவா - கியோ - கொண்டா என்பவரின் மூன்றாவது மனைவியின் உருவம்தான மொனாலிஸா. இருந்தும் மொனாலிஸா ஓவியம் டாவின்ஸியினுடைய உருவம்தான என்றும் சிலர் கருதுகிறார்கள். இதற்குக்காரணம் மொனாலிஸா - டாவின்ஸி ஆகிய இருவரின் முக அமைப்பும் ஒரே மாதிரியாக இருந்ததுதான்.



மிக விரைவாக ஓவியர் டாவின்ஸியின் பெயரும், அவர் வரைந்த மொனாலிஸா ஓவியமும் உலகம் முழுக்க பிரபலம் அடையத் தொடங்கின. டாவின்ஸியின் திறமையைப் பாராட்டி கௌரவிக்க பிரான்ஸ் அரசாங்கம் அவருக்கு சிறப்பு அழைப்பொன்றை விடுத்தது. டாவின்ஸி பிரான்சுக்குச் செல்லும் போது தன்னுடன் மொனாலிஸா ஓவியத்தையும் எடுத்துச் சென்றார். இதன் காரணமாகத்தான் மொனாலிஸா ஓவியம் இன்று பிரான்ஸ் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

ஓவியக் கலை மூலம் உலக அறிமுகத்தை டாவின்ஸி பெற்றிருந்த போதிலும் அவர் இசை, மேடை நாடகம் என்பவற்றிலும் அதிக திறமை பெற்று விளங்கினார். இயற்கையில் மெய்மறப்பதுவே டாவின்ஸியின் பொழுது போக்கு. இயற்கையின் வனப்புகளைப் பற்றி நிறையப் புத்தகங்கள் எழுதினார். ஆனால் அவை அச்சிடப்படவில்லை.

இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் பல்வேறு பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டார். மனித உடலின் உறுப்புகளை ஆராய்ந்து அறிய இறந்த சடலங்களை வெட்டி சோதனைகளும் செய்துப் பார்த்தார்.

புதிய - நவீன கண்டுபிடிப்புகளின் தந்தை என்றும் டாவின்ஸியை அழைக்கிறார்கள். காற்றாடியுடன் கூடிய விமானம், ஹெலிகொப்டர், யுத்த டாங்கி, நீர் மூழ்கிக் கப்பல் போன்றவை டாவின்ஸியின் கற்பனையில் உதித்தவைகள் தான்.

டாவின்ஸியின் கற்பனையில் உதித்த இவற்றைப் பல வருடங்கள் கழித்தே நடைமுறைக்குச் சாத்தியமாக வடிவமைத்தார்கள். இன்றைய நவீன யுத்த தளபாடங்கள் கூட டாவின்ஸியின் யுகத்துச் சிந்தனைகள் தான்.

மொனாலிஸா ஓவியத்துக்கு உயிரூட்டிய மாமனிதர் லியனாடோ டாவின்ஸியின் உயிர் கி.பி. 1519 மே மாதம் இரண்டாம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தது.

## திபெத்திய மூலிகை சிகிச்சை

உலகில் பலவகையான மூலிகை மருத்துவ முறைகள் இருக்கின்றன. இவற்றில் சிறப்புப்பெற்று தனித் தன்மையுடன் விளங்குவது திபெத்திய மூலிகை மருத்துவ முறையாகும். திபெத்திய மூலிகை மருத்துவமானது 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை பொருந்திய பாரம்பரியமிக்க மருத்துவமாகும். இமய மலை அடிவாரத்தை ஒட்டிய திபெத்தில் வாழ்ந்த புத்தமத ஞானிகளான லாமாக்களினால் இம்மருத்துவ முறை பரம்பரையாக கையாளப்பட்டு வந்தது. ஔஷதபுத்தர் என்று அழைக்கப்படும் புத்தபகவானை மூல காரணமாக வைத்து ஆன்மீக உணர்வுடன் புனிதமாக இம்மருத்துவம் செய்யப்படுகிறது. உண்மை, நம்பிக்கை, ஆன்மீக உணர்வு போன்றவைகளும் புத்த பகவானது உள்முக தியானமும் இந்த திபெத்திய மூலிகை மருத்துவம் புரியும் ஒவ்வொருவருக்கும் அவசியமாகக் கருதப்படுகிறது. Dr. Tragowa Rinpoche எனப்படும் திபெத்திய மருத்துவ நிபுணர் ஔஷதபுத்தர் மீது இருக்கும் ஆன்மீக நம்பிக்கையும், அதி அற்புதமான மூலிகை மருந்துமே நோயைத் தீர்க்கும் மருந்தென்று கூறுகிறார்.



பஞ்சபூத தத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகவே திபெத்திய மூலிகை மருத்துவம் விளங்குகின்றது. திபெத்திய மூலிகை மருத்துவத்தில் தேர்ச்சி பெற்று மருத்துவ சேவை செய்பவர்கள் 'அம்சி' என்று திபெத்திய மக்களால் மிகுந்த மரியாதையுடன் வணங்கத்தக்க வகையில் மதிக்கப்படுகிறார்கள். 4ஆம் நூற்றாண்டில் அம்மருத்துவ முறையானது பிரபலமாகத் தொடங்கியது. 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் திபெத்திய அரசு பல தலை சிறந்த மருத்துவ அறிஞர்களை பெர்சியா, சீனா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வரவழைத்து அவர்களது பாரம்பரிய மருத்துவ முறைகளையும் ஆராய்ந்து திபெத்திய மூலிகை மருத்துவத்திலுள்ள சிறப்புகளை உலகிற்கு வெளிக்காட்டியது. பின்பு 11 ஆம் நூற்றாண்டில் மருத்துவ போதனையாக உலகளவில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1998 ஆம் ஆண்டு International Congress of Tibetan Medicine எனப்படும் Dr.Tenzin Choedraks (தலாய்லாமா அவர்களின் தலைமை மருத்துவர்) அவர்களின் தலைமையில் நடைபெற்று உலகளவில் திபெத்திய மூலிகை மருத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்தியது. இப்படிப்பட்ட திபெத்தின் மூலிகை மருத்துவமானது இன்றைய மருத்துவ உலகில் பல தீர்க்க முடியாத நோய்களைக் குணப்படுத்தி சாதனைபுரிந்து வருவதில் ஆச்சரியமில்லை. திபெத்திய மூலிகை மருந்துகளைப் பயன்படுத்தி பல கொடிய நோய்களைக் குணப்படுத்த முடியும் என்பது அனுபவரீதியான உண்மை.

நீர், நெருப்பு, காற்று, மண், ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால்தான் இந்த அண்டமாகிய பிரபஞ்சமும், பிண்டமாகிய உடலும் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. பிண்டமாகிய உடலில் ஏற்படும் நோய் மற்றும் மாற்றங்களுக்குப் பஞ்ச பூதங்களே காரணம் என்றும், அவற்றில் ஒரு காரணி அதிகரித்தாலோ, குறைந்தாலோ நோய் மற்றும் பிணிகள் ஏற்படுகின்றது என்றும் திபெத்திய மூலிகைச் சிகிச்சை நிபுணர்கள் கூறுகின்றனர். அவற்றைச் சரிசெய்ய பஞ்சபூத சக்திகளை உள்ளடக்கிய திபெத்திய மூலிகை மருந்துகள் உட்கொள்வதன் மூலம் அவற்றைச் சமப்படுத்தி மீண்டும் பழைய உடல் ஆரோக்கியத்தைக் கொண்டு வரமுடியும்.

மண்ணிலே முளைத்து, தண்ணீரை உறிஞ்சி, ஆகாயத்தை நோக்கி வளர்ந்து, காற்றை சுவாசித்து வெப்பத்தைச் சமப்படுத்திக் கொண்டு வாழும் தன்மை, தாவர சங்கமமாகிய மூலிகைகளின் சிறப்புத் தன்மையாகும்.

இப்படி பஞ்சபூத சக்திகளைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் தன்மை மூலிகைகளைத் தவிர வேறொன்றிற்கும் கிடையாது. எனவேதான் திபெத்திய மூலிகை மருத்துவத்தில் பஞ்சபூத கொள்கையின் அடிப்படையில் நோய்கள் தீர்க்கப்படுகின்றன. திபெத்திய மூலிகை மருத்துவத்தில் தீர்க்க முடியாது என்ற நோய்களே கிடையாது. மருந்தே இல்லையென மருத்துவ உலகால் கைவிடப்பட்ட பல நாட்பட்ட நோய்களை திபெத்திய மூலிகை மருந்துகள் மூலம் முற்றிலும் குணப்படுத்தி விடலாம் என்பது உண்மை.




## ஆணா பெண்ணா? அற்புத ரகசியம்

# ஜனனத் தொழிற்சாலை

07

**ஆ**ணின் உயிரணுவும், பெண்ணின் சினைமுட்டையும் இணைந்து ஒன்றாக உருவெடுத்த கரு ஒரேயொரு செல்லாக கடுகு சைஸில்தான் இருக்கும். பன்னிரெண்டு மணிநேரத்தில் அந்த செல் உடைந்து இரண்டாகப் பிரிந்து கொத்தமல்லி விதையின் சைஸுக்கு மாறுகிறது. அடுத்த பன்னிரெண்டாவது மணிநேரம் அது நான்கு செல்களாகி மிளகு போல் ஆகிறது. அடுத்தடுத்த நாள்களில் இரண்டு இரண்டு மடங்காக செல்கள் பிரியப் பிரிய ஐந்தாம் நாள் நீர்க்குமிழி சைஸுக்கும், ஆறாம் நாள் நெல்லிக்காய் சைஸுக்குமாய் வளர்ந்து கொண்டு போகிறது அது.

கருப்பையை அடைந்து செட்டாகும்போது குறைந்தபட்சம் நூறு செல்களாகவாவது கரு பிரிந்திருக்கும்.

அதேசமயம் கரு ∴பெலோப்பியன் குழாயிலிருந்து கருப்பையை நோக்கி மெதுமெதுவாக நகரவும் ஆரம்பிக்கிறது. அங்கே கருப்பைதான் அதற்கு சிவப்பு கம்பள வரவேற்புடன் மெத்மெத்தென்ற ஒரு இருப்பிடத்தை ரெடி செய்துகொண்டு காத்திருக்கிறதே.

இந்தப் பயணம் முடிய சுமாராக ஒரு வாரம் ஆகும்! சில பெண்களுக்கு இன்னும் கூடுதலாக சில நாட்கள் பிடிக்கலாம். அதனால்தான் 'இப்போதைக்கு குழந்தை வேண்டாம்' என்று சில பெண்கள் முப்பத்தைந்தாவது நாள் போல 'டி அண்ட் ஸி' பண்ணிக் கொள்ளும்போதே ∴பெலோப்பியன் குழாயிலிருந்து கருப்பைக்கு கரு வந்து சேராமல் போய் கருக்கலைப்பு நடைபெறாமலேயே போய்விட, அப்புறம் நிதானமாக வந்து சேர்ந்த கரு, கருப்பையில் சுகமாகத் தங்கி வளர ஆரம்பித்துவிடுகிறது!.


∴பெலோப்பியன் டியூபில் உருவான கரு சமயத்தில், கருப்பையை நோக்கி நகராமல் அதே இடத்திலேயே தங்கி, அப்படியே வளர ஆரம்பித்துவிடுவதும் உண்டு. இதை Ectopic Pregnancy என்று சொல்வார்கள். ∴பெலோப்பியன் குழாயில் ஏற்படும் தொற்று நோய்கள்தான் இதற்குக் காரணம். சாதாரணமாக கருவால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு தானாக நகர முடியாது! ∴பெலோப்பியன் குழாயின் உட்பகுதி கிட்டத்தட்ட ஒரு மண் புழு போல தசைகளை சுருக்கி விரித்துக் கொடுப்பதால்தான் கரு மெதுவாக நகர்ந்து போகும்! தொற்றுநோய்களினால் பாதிக்கப்பட்ட ∴பெலோப்பியன் குழாய்களுக்கு இந்த சுருங்கி விரியும் தன்மை இருக்காது.

அல்லது ∴பெலோப்பியன் குழாயின் பாதை குறுகி, வழியை மறிக்கலாம்! சில பெண்களுக்கு ∴பெலோப்பியன் குழாயின் அமைப்பே வளைந்து நெளிந்து இருக்கும். நாளொரு சைஸும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு போகும் 'கரு'வின் பயணத்தை இந்த அமைப்பே தடை செய்து விடுகின்றது.

சிலநேரம் உயிருக்கே ஆபத்தாக முடியும் விஷயம் இது! ஒரு நூல் நுழையும் அளவே உள்ள மெல்லிய ∴பெலோப்பியன் குழாயில் கருவளர ஆரம்பித்தால் என்னாகும் என்று நினைத்துப் பாருங்கள்! கருவின் சைஸுக்கு ஏற்ப விரிந்து கொடுத்து தன்னால் முடியும் வரை தாங்கும் ∴பெலோப்பியன் குழாய், முடியாமல் போகும்போது பட்டென்று வெடிக்கிறது! இதுபோன்ற நேரங்களில் கடுமையான வயிற்றுவலியும், ரத்தக் கசிவும் இருக்கும். இதையெல்லாம் தவிர்க்க, கர்ப்பம் தரித்த உடனேயே டாக்டரிடம் சென்று செக்கப் செய்துகொள்வது நல்லது.

∴பெலோப்பியன் குழாய் வெடித்துவிட்டால், பிறகு அந்தக் குழாய் மூலம் கருத்தரிக்கும் சந்தர்ப்பம் அந்தப் பெண்ணுக்கு வாழ்க்கை முழுதுமே இல்லாமல் போகிறது. அப்படிப்பட்ட பெண்கள் மிச்சமிருக்கும் அந்த இன்னொரு ∴பெலோப்பியன் குழாய் மூலம்தான் கருத்தரிக்க முடியும்.

மருத்துவ விழிப்புணர்வு வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில் கூட 'ஆண் குழந்தை பெற்றுத் தரவில்லை' என்று பல கணவன்மார்கள் தங்கள் மனைவியை இம்சிப்பதும், இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. உண்மையில், ஒரு குழந்தை ஆணா, பெண்ணா என்ற விஷயத்தைத் தீர்மானிப்பதே கணவன்தான்! உயிரணுவும், சினை




முட்டையும் சேரும் அந்த நிமிடங்களிலேயே அதன் ஆண், பெண் தன்மை தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது!

சாதாரணமாக மனித உடம்பின் ஒரு செல்லில் இருபத்து மூணுஜோடி (நாற்பத்தாறு) குரோமோசோம்கள் இருக்கும். ஆனால், உயிரணுவிலும், சினை முட்டையிலும் மட்டும் தலா இருபத்துமூன்று குரோமோசோம்கள்தான். செக்ஸில் இணைந்த அந்த இருவரின் ஊதா அல்லது கறுப்பு கண்கள், தோலின் நிறம், சுருட்டை முடி, உயரம் என்று பல குறிப்புகள் அவரவர்களுடைய குரோமோசோம்களின் ஜீன்களுக்குள் ஒளிந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் அந்த இருபத்துமூன்றாவது குரோமோசோம் மட்டும் அந்த கரு ஆணா, பெண்ணா என்று தீர்மானிக்கும் செக்ஸ் குரோமோசோம்!

இதில் பெண்களுக்கு எப்போதுமே 'X' குரோமோசோம்கள்தான் இருக்கும். இது மாறாதது! ஆணிடமிருந்து வெளியேறும் கோடிக்கணக்கான உயிரணுக்களில் பாதி 'X' குரோமோசோம்களாகவும் மீதி 'Y' குரோமோசோம்களாகவும் இருக்கும். அன்று எந்த குரோமோசோம் உடைய உயிரணு, சினைமுட்டையைச் சேர முடிந்ததோ அதுதான் அந்த கரு ஆணா, பெண்ணா என்பதைத் தீர்மானிக்கிறது!

'X' குரோமோசோம் உயிரணு எனில் பெண்ணின் 'X' உடன் சேர்ந்து 'XX' - ஆகி பெண் குழந்தை உருவாகும். 'Y' குரோமோசோம் எனில் 'XY' ஆகி ஆண் குழந்தை! ஆக, இதற்கு கணவனே முழுப் பொறுப்பு!

*(தொடரும்......)*

**டாக்டர்**
**பிரேமாகிருஷ்ணசாமி**
நன்றி:-
**உச்சி முதல் உள்ளங்கால் வரை**

## சுடச் சுடச் சாப்பிடுங்கள்

**ச**மைத்த உணவை சூடு ஆறுவதற்கு முன்பே சாப்பிடுவது நல்லது. அப்போதுதான் அதிலிருக்கும் முழுச் சத்தின் பலனும் நமக்குக் கிடைக்கும். உதாரணத்துக்கு கடைந்த பருப்புக் கீரையை எடுத்துக் கொள்வோம். கீரையில் விட்டமின் 'B'யும் இரும்புச்சத்தும் இருக்கிறது. பருப்பில் புரதம் அதிகம். பருப்பையும், கீரையையும் கலந்து சமைத்தவுடனேயே சாப்பிட்டால் மட்டுமே அச்சத்துக்கள் முழுமையாக நம்மை வந்தடையும். அதை ஒரு மணிநேரம் கழித்துச் சாப்பிட்டால் அதிலுள்ள சத்து கணிசமாகக் குறைந்துபோயிருக்கும். காலையில் சமைத்த உணவை இரவில் சாப்பிட்டால் நிலை என்னவென்று யோசித்துப் பாருங்கள்.

அத்தோடு முட்டை, பருப்பு போன்ற புரதம் அதிகமுள்ள உணவுப் பொருட்களில் கிருமிகள் அதிவேகமாகப் பெருகக் கூடும். எனவே சமைத்தவுடன் சாப்பிடுவதுதான் உத்தமம்.

## நாட்டு வைத்தியர் நல்லதம்பி



காயம் மற்றும் கட்டிகள் உங்களது உடலில் ஏற்பட்டுவிட்டால் கண்ட கண்ட மருந்து வகைகளையெல்லாம் பயன்படுத்தாதீர்கள். அவரை இலையை எடுத்து நன்றாகப் பிசைந்து சாறாக்கிக் கொள்ளுங்கள். பஞ்சொன்றை எடுத்து சாற்றில் தொட்டு மெது மெதுவாக காயத்தில் தடவிவிட்டு பின்னர் பஞ்சை அப்படியே காயத்தில் ஒட்டவைத்துவிடுங்கள். காயக்காய அவரை இலைச்சாற்றை சொட்டுசொட்டாக விடலாம். இப்படியே மூன்று நாட்கள் செய்தால் போதும். காயம் ஆறிவிடும். அவரை இலைச் சாறை கட்டிகளின் மீது தடவினால் விரைவில் அவை உடையும். புண்ணும் குணமாகும்.

## மார்பகப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க எளிய வழிகள்

**35** வயதிலிருந்து 54 வயதிற்குள்ளாக பெண்களைப் பீடித்து உயிருக்கு உலை வைக்கும் கொடிய நோய் மார்பகப் புற்றுநோய். 85 வயது வரை இந்நோய் வரலாம். ஆனால் ஆரம்பத்திலேயே இந்த நோயைக் கண்டுபிடித்துவிட்டால், 90 சதவிகிதம் குணமடைய வாய்ப்புண்டு.

மார்பகப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க எளிய வழிகள் இதோ:

ஒவ்வொரு பெண்ணும் தனது உடலைப் பற்றி - குறிப்பாக மார்பகங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியம். இந்த அறிவும் கண்காணிப்பும் வாழ்நாள் வரை நீடித்திருக்க வேண்டியதும் அவசியம்.

தினமும் மார்பகங்களைக் கவனிப்பது சிறந்த வழி. உடைகளை மாற்றும்போதோ, குளிப்பதற்கு முன்போ ஏதோ ஒரு நேரத்தில் சில நிமிடங்கள் இதற்காகச் செலவிட வேண்டும். இந்தப் பழக்கம் தொடர்ந்து நீடித்தால் உடல்நலம் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஐம்பது வயதிற்கு மேல் ஆன பெண்மணிகள் அவ்வப்பொழுது மார்பகத்தை சோதனை செய்து கொள்வது நல்லது.

சோதிக்க வேண்டும் என்றால் எப்படி - எவற்றை சோதிப்பது? மார்பக அளவு அல்லது அமைப்பில் குறிப்பிடத்தகுந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? ஒரு மார்பகம் இன்னொன்றை விட இறங்கி இருக்கிறதா? தோல் நிறம் மாறி இருக்கிறதா? தோல் சுருக்கம் - மடிப்புகள் இருக்கிறதா? மார்பகக் காம்பு உள் அமுங்கி இருக்கிறதா? இடம் மாறியோ, அமைப்பு மாறியோ இருக்கிறதா? மார்பகம் அல்லது அக்குளில் கட்டி அல்லது கெட்டித்தன்மை ஏற்பட்டிருக்கிறதா?

ஒரு மார்பகம் அல்லது இரு மார்பகங்களிலிருந்து நீர் வடிகிறதா?

மார்பகப் பகுதிகளில் இடைவிடாத வலி இருக்கிறதா? இதில் எந்த ஒன்று இருந்தாலும் உடனே டாக்டரை அணுகுவது நல்லது. மார்பகம் பற்றிய அறிவை அபிவிருத்தி செய்வது இன்றைய மகளிருக்கு இன்றியமையாத விஷயம்.

## முதலுதவி

**ம**ட்டைத்தேள் (பூரான்) கொட்டினால் வலியோடு, சிறிது நேரத்தில் கொட்டிய இடத்தைச் சூழ உள்ள சதைப்பகுதி மிருதுவான தன்மையை இழந்து பட்டை போன்று ஆகிவிடும். இதற்கு (ஜந்துவானது கொட்டியதோடு கொடுக்கையும் வைத்துவிட்டால் முதலில் அதை எடுத்திட வேண்டும்.) அவுரி இலை, வெள்ளை சாரணை இலை இரண்டையும் சம அளவில் எடுத்து நன்கு அரைத்து அதனுடன் தேசிக் காய்ச்சாறு விட்டுக் குழைத்து பாதிக்கப்பட்ட பகுதிக்கு மேல் தடிப்பமாகப் பத்துப்போட குணம் கிடைக்கும்.

*-எம்.எம்.நஸீஹா,*
*ஏத்தாலை.*

## ஆஸ்மாவுக்கு....

குளிரான சூழ்நிலையை விட வெப்ப சூழ்நிலை, ஆஸ்மா நோயாளிகளுக்கு உகந்தது. கடற்கரை ஓரத்தைவிட ஊரின் உட்பகுதி அவர்களுக்கு ஏற்றது. மழையும், மப்பும் மந்தார சூழ்நிலையும் ஒத்துக்கொள்ளாது. தூசு நிறைந்த காற்றும், தொழிற்சாலைக் கழிவுகளும் ஆஸ்மாவை அதிகரிக்கச் செய்யும்.

## வண்ணங்கள்
பக்ஷிராஜா

க.பொ.த. உயர் வகுப்புப் படித்திருந்தாலும் கடந்த ஐந்து வருடங்களாக நான் ஆட்டோ ஓட்டியே சம்பாதிக்கிறேன். எனக்கு மூன்று பெண் பிள்ளைகளும், ஓர் ஆண் பிள்ளையும் இருக்கிறார்கள். ஆட்டோ ஓட்டிக் கிடைக்கும் சொற்ப வருமானத்தில்தான் நான் என் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன்.

இந்த ஐந்து வருட ஆட்டோ ஓட்டும் அனுபவத்தில், என் நெஞ்சிற் பயங்கரமாகப் பதிந்து விட்ட அந்தச் சம்பவத்தை "இடி" வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமென எண்ணியே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

எப்பொழுதுமே காலை ஏழு



## ஓடுகிற ஓட்டோ ஓட...
### பெண்களை நம்பாதே 73

மணிக்கு ஆட்டோவை எடுத்துக் கொண்டு போய்த் தொழில் செய்து இரவு எட்டு மணிக்குத்தான் வீடு வருவேன். அன்றைய தினமும் அப்படியே தான் காலை ஏழு மணிக்குப் புறப்பட்டேன். ஆனால் என்ன கஷ்ட காலமோ, அன்று பகல் முழுவதும் எனக்குச் சரியான ஹயர் எதுவும் கிடைக்கவில்லை.

வெறுங் கையுடன் வீடு திரும்ப மனமில்லாததால், இரவு எட்டு மணி தாண்டியும் ஆட்டோ ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன். நேரம் 9.30 ஆன போது கணவனும், மனைவியும் போன்ற கோலத்தில் இருவர் என்னிடம் வந்தனர்.

அவர்கள் ஆட்டோவை ஹயர் பண்ணத் தான் வருகின்றார்களென அறிந்த நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஏனெனில், இரவு நேரம் வாடகைப் பணத்தையும் கொஞ்சம் அதிகமாகப் பெற முடியுமல்லவா? அதனால்தான்!

அவர்கள் என்னருகே வந்து "பாண்டிருப்புக்குப் போக வேண்டும். எவ்வளவு பணம் எடுப்பீர்கள்?" என்று கேட்டனர். அந்தச் சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்தது போல "முந்நூறு ரூபா தாங்கள்!" என்றேன் நான்.

அதற்கு அவர்கள் "முந்நூறென்ன, ஐந்நூறு ரூபாயே தருகிறோம்! என்று கூறி ஆட்டோவுக்குள் ஏறி அமர்ந்தனர். நானும் மிகுந்த சந்தோஷத்துடன் ஆட்டோவை ஸ்டார்ட் பண்ணிப் புறப்பட்டேன்.

வழமையாகப் பாண்டிருப்புப் போகும் வழியில் நான் போய்க் கொண்டிருக்கும் போது அவர்கள் இன்னொரு வழியைக் காட்டி 'இந்த வழியால் போங்கள். இது குறுக்குப் பாதை. கெதியாகப் போய்விடலாம்!' என்றார்கள். நானும் அவர்கள் காட்டிய வழியிலேயே ஆட்டோவை ஓட்டிச் சென்றேன்.

கொஞ்சத் தூரம் போய்க் கொண்டிருக்கையில் அவர்கள் "ஆட்டோவை நிறுத்து!" என்றார்கள். இவ்வளவு நேரமும் மரியாதையாகப் பேசியவர்கள் இப்போது தரக் குறைவாகப் பேசுகிறார்களே என்று எண்ணி, யோசித்தவாறே நான் ஆட்டோவை அவர்கள் சுட்டிய இடத்தில் நிற்பாட்டினேன்.

ஆட்டோவை விட்டு இறங்கிக் கொண்ட அவர்கள் "ம்... உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்கள்.

"என் பணத்தைத் தாருங்கள்!" என்றேன் நான்.

அதற்கு அவர்கள் "உனக்கு உனது உயிர் வேண்டுமா? அல்லது பணம் வேண்டுமா?" என்று கேட்டார்கள்.

நான் அந்தப் பெண்ணிடம் "நீங்கள் ஒரு பெண் வருகிறீர்கள் என்பதற்காகத்தான், உங்களை நம்பி நான் இவ்வளவு தூரம் வந்தேன். தயவு செய்து எனது வாடகைப் பணத்தைத் தந்து விடுங்கள்!" என்றேன்.

உடனே அவள் தன் கைப் பையைத் திறந்தாள். கைப்பையை திறந்து பணம் எடுக்கிறாள் என்று நான் நினைத்து முடிப்பதற்குள் அவளது கையில் கூரிய கத்தி ஒன்று பளபளத்தது.

"டேய்... காசா வேண்டும் உனக்கு...?" என்று கேட்டபடியே அவள் என்னைக் குத்துவது போல வந்தாள்.

இதற்கிடையில் அவளது கணவன் கையிலும் ஓர் ஆயுதம். "இன்னும் நீ இங்கிருந்தால் உன் உயிர் போய்விடும். எனவே ஆட்டோவை எடுத்துக் கொண்டு ஓடித் தப்பு!" என்றான் அவன்.


எனக்கு வேறு வழி தெரியவில்லை. நான் ஆட்டோவைத் திரும்பிக் கவலையோடும், ஏமாற்றத்தோடும் வீடு வந்து விட்டேன்.

ஆண்கள் தான் மோசமானவர்கள் என்று பார்த்தால், சில இடங்களில் சில நேரங்களில் பெண்கள் கூடப் படு மோசமாக இருக்கிறார்களே என்பதை எண்ணிப் பெரிதும் வேதனைப்பட்டேன்.

எனவே, பெண்ணொருத்தி கூட நிற்கிறாள் என்பதை நம்பி ஆட்டோக் காரர்கள் துணிந்து எங்கும் இரவு வேளையிற் சென்று விடக் கூடாது. எனக்கு நேர்ந்த கதி மற்றவர்களுக்கும் நேரக் கூடாது என்பதற்காகவே இதனைத் தங்கள் பத்திரிகைக்கு எழுதியுள்ளேன்.

# திசைமாறிய பறவைகள்
தருபவர் : மணவை அசோகன்

## ஹஸ்னா சேக்



ஹஸ்னாவின் வங்கக் கண்களும், தங்கநிற மேனியும், பூட்டோவை மட்டுமா- புவியாண்டிடும் எவரையுமே சுண்டியிழுக்காமல் விடாது என்று கராச்சி நகரமே பேச ஆரம்பித்தது.

ஆனால் ஹஸ்னாவின் விஜயம், பூட்டோவின் இரண்டாவது மனைவி நஸ்ரத்தின் நெஞ்சைக் குடைந்தது! புதிய மாளிகையில் குடியேறினாள், ஹஸ்னா! புயல் குடியேறியது நஸ்ரத் நெஞ்சில்!

விழியாலே கதை பேசி!

விடிய விடியப் போராடும் கலையில் தேர்ந்த ஹஸ்னாவால். விழித்துக்கொண்ட நஸ்ரத்தின் விரோதத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சேல் விழியாள் ஹஸ்னா.

சிட்டிகை போட்டாலே சிட்டாகப் பறந்து வரும் பூட்டோ, அவள் அழுதழுது முகம் வீங்கியதைக் கண்டு மனம் பதைத்துப் போனார்!

ஓடோடியும் வந்து ஆதரவோடு அணைத்துக் கொண்டார்!

"என்னை 'வைப்பாட்டி' என்கிறார்களே, ஏளனமாக?" என்று கலங்கினாள், காரிகை

'விம்மிடும் என் நெஞ்சம் உங்களுக்கு விளையாட்டு மஞ்சம். ஆனால் நஸ்ரத் என்றாலோ அச்சம்?' என்று அரற்றினாள். அணைத்தபடி ஆறுதல் கூறினார், பூட்டோ. இரகசியமாக அவளை மூன்றாவது மனைவியாக மணந்து கொண்டார்! விழி நீரைத்துடைத்துக்கொண்ட ஹஸ்னா ஏறிட்டுப்பார்த்தாள்!

தன் வசந்த மாளிகைக்குள்-

பூட்டோ மட்டும் வந்தால் போதுமா?

பூட்டோவின் அரசியலும் வர வேண்டாமா?

நளினமாகக் காய்களை நகர்த்தினாள், நங்கை!

பூட்டோ பிரதமர்.

பூட்டோவின் பிரியநாயகி

### பறவை: 2 சிறகு: 2

ஹஸ்னா!

மாநில முதலமைச்சர்களிலிருந்து கவர்னர்கள் வரை அவளைத் தேடி வர ஆரம்பித்தனர்.

ஹஸ்னா ஒரு புன்னகை புரிந்தால் போதும். மாநில மந்திரியாகி விடலாம்!

ஹஸ்னா கண்ஜாடை காட்டினால் கவர்னர் பதவி காலடியில் வந்து விழும்!

லேசாகப் புன்முறுவல் பூத்தால் வெளிநாட்டுத் தூதுவராகப் போகலாம்!

லட்சக் கணக்கில் வாரிக்கட்டக் கூடிய ஏற்றுமதி- இறக்குமதி லைசன்ஸ்கள் வேண்டுமா?

ஹஸ்னா வீட்டு வேலைக்காரி சொன்னால் கூடப் போதும்- லைசென்ஸ் கதறியடித்துக் கொண்டு வரும்!

ஏனென்றால் பாக்கிஸ்தானின் அதிபர் ஹஸ்னாவின் மடியில்தான் சொர்க்கத்தைப் பார்க்கிறார் என்ற சேதி ஊர் முழுவதும் காட்டுத் தீ போலப் பரவியிருந்தது. பரப்பி விட்டிருந்தாள், பலே கைகாரி ஹஸ்னா!

கேட்கவேண்டுமா, விளைவுகளுக்கு! பணமும் நகைகளும் மலைபோல குவிந்தன.

தன் உறவுக்காரி ஒருத்திக்குத் திருமணம் நடந்தபோது பிரபல சினிமா பாடகி நூர்ஜஹானை விடிய விடியப் பாடச் சொன்னாள், ஹஸ்னா!

பாடகி கேட்ட தொகை ஒரு லட்சம்!

ஹஸ்னா அள்ளித் தந்தது ஐந்து லட்சம்! பாக்கிஸ்தானை ஆண்ட பூட்டோவையே ஆட்டிப்படைத்த அந்த அழகி ஹஸ்னா இப்பொழுது எங்கே?

பூட்டோ பதவியிழந்து சிறைப்பட்டதுமே பறந்தோடி விட்டாள் ஹஸ்னா இலண்டனுக்கு!

பூட்டோ கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கேட்டவர் நெஞ்சம் பதைக்க, கண்கள் குளமாக, நள்ளிரவில் தூக்கிலிடப்பட்ட சேதி அறிந்து ஊரும் உலகமும் துடிதுடித்துப் போன நேரத்தில்--

பூட்டோ தனது பகைவர்களாக நினைத்தவர்கள் கூட இதயச் சூடு தாளாமல் இருண்டு கிடந்த நேரத்தில்-

அந்த ஆற்றல் மறவனுக்காக அவனுடைய உண்மையான மனைவி நஸ்ரத் தன் இதயத்தையே பிழிந்தெடுத்து சோககீதம் பாடி கண்ணீர் வடித்துக் கரைந்து நின்ற நேரத்தில்-

இலண்டனில் திராட்சை ரசத்தில் ஐஸ் துண்டுகளைக் கரைத்து கொண்டிருந்தாள், ஹஸ்னா!

எங்கோ மூலையில் கிடந்தவளுக்கு முடி சூட்டி வைத்தார் பூட்டோ!

அவரை ஆட்டிப்படைத்த அந்த ஓடுகாலியோ, அவர் தூக்கிலிடப்பட்டதற்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கக் கூட இதயம் இல்லாமல் இரும்பாகியிருந்தாள்!

ஹஸ்னா - இவள் விசித்திரப் பிறவி அல்ல, விபரீதப் பிறவி!

பூட்டோவை அறிந்தவர்கள் எப்படி அவரை மறக்க முடியாதோ, அதுபோல ஹஸ்னாவின் சிரிப்பை அறிந்தவர்களும் அதை மறக்க முடியாது.

(தொடரும்......)

## கேட்டால் கிடைக்கும்
தருபவர் : ஸகீ

📖 பெரும்பாலான டாக்டர்கள் எழுதும் கையெழுத்து புரிவதேயில்லையே? ஏன்?

*-சஜித், கொழும்பு 12.*

✍ புரிந்தால் வெளியே உள்ள பார்மஸிகளில் குறைந்த விலையில் மருந்து வாங்க ஓடி விடுவார்களே என்பதற்காகத்தான்.

📖 சில திறமைசாலிகளை நாம் பாராட்டும் போது, ஐஸ் வைக்க வேண்டாம் என்கிறார்களே!

*-இஸ்திகார் ஏ.முஹமட், சாய்ந்தமருது 6.*

✍ நமது பாராட்டு மழையில் அவர்கள் உச்சி குளிர்ந்து விடுவதால், அவர்களை அறியாமலேயே ஐஸ் என்ற வார்த்தை வந்துவிடுகிறது!

📖 மரணம் என்பது விதியா? தண்டனையா?

*-எஸ்.சிவாஜினி, பட்டிருப்பு.*

✍ விதிதான்! தண்டனையென்றால், எல்லா மனிதர்களும் குற்றவாளிகளா என்ன?

📖 ஸகீ... வேலையில்லாப் பிரச்சினையைப் போக்க என்ன செய்யலாம்?

*-சக்திவேல் அரவிந்தன், வவுனியா.*

✍ பாதுகாப்பு அமைச்சரைக் கேட்டால் எல்லோரும் இராணுவத்தில் சேர்ந்து விடுங்கள் என்பார். என்னைக் கேட்டால், கிடைக்கிற வேலைகளை மறுக்காமல் செய்யுங்கள். பிறகு ஒரு சுயதொழில் முயற்சியில் இறங்குங்கள் என்பேன்.

📖 ஸகீ....! ஒரு ஜோக் சொல்லுங்களேன்...

*-எஸ்.எம்.ஜமீல், ஏறாவூர் 2.*

✍ "எங்கப்பா அவரைப் போலவே நானும் டாக்டரா வரணும்னு ஆசைப்பட்டாரு!"
"உங்கப்பா டாக்டரா?"
"இல்லே... அவரும் ஆசைப்பட்டாரு!"



📖 ஜோதிகாவுக்கு இளைஞர்களை விட, சற்று வயதான ஆண்களைத் தான் அதிகம் பிடிக்குமாமே?

*-த.அமிர்தலிங்கம், அன்னமலை.*

✍ கிழட்டு ஆண்களிடமும் சரக்கு இருப்பதை கமல் ஊடாகக் கண்டு விட்டார்! ஆக. புதிய அனுபவம் ஆரம்பித்திருக்கும். விறு விறுப்பான தொடர்கதைதான் இது?

📖 விலை மதிப்பையெல்லாம் மிஞ்சிய கலைப்பொருள் எது?

*-ஆர்.ஜங்ஸ், மண்டூர்*

✍ காதலர்கள் பரிமாறிக் கொள்ளும் பரிசுகள் தான்! அது வைர மோதிரமாக இருந்தாலும் சரி! கைக்குட்டையாக இருந்தாலும் சரி!!

📖 காதலித்து விட்டுக் கைவிடும் பெண்களைப் பற்றி....?

*-ச.ஜீவராஜ், மண்டூர்.*

✍ நன்றி தாய்க்குலமே என்று பெரிய கும்பிடாகப் போட்டு வழியனுப்புவதே சரி! திருமணத்திற்கு முன்பாகவே டாட்டா காட்டுவதையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளலாம். மூன்று முடிச்சு போட்ட பிறகு டாட்டா காட்டினால், முழி பிதுங்க வேண்டியிருக்கும் அல்லவா?

📖 நாட்டைத் துண்டாட விடமாட்டோமென்று ஜே.வி.பியும், சிஹல உறுமயவும் கூறுகின்றனவே?

*ஆர்.அருஷா, லிந்துல.*

✍ பாவம்! ஏற்கனவே நாடு இரு கூறுகளாகி விட்டது தெரிந்தும் தெரியாதது போலப் பேசுகிறார்கள்! இது மாதிரி சிறுபிள்ளைத்தனமாகப் பேசுவோர் தமிழகத்தில்தான் இதுவரை இருந்தார்கள் இப்போது இங்கேயும் வந்து விட்டார்கள்!

📖 ஸகீ...! வாழ்க்கையில் உயர்ந்த இன்பம் எது?

*-ஷகி வேலுப்பிள்ளை, நானுஓயா..*

✍ முதன் முதலாக வயிற்றுக்குள் ஒரு வளர்பிறை வளரும் போது!

📖 வாழ்க்கையில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?

*-ஜமால்தீன் றிபாய்தீன், சாய்ந்தமருது.*

✍ தோல்விகளை வரவேற்க வேண்டும். அடுக்கடுக்காய்த் தோல்விகளைச் சந்திக்கும் போது நாம் வெற்றி இலக்கை அண்மித்து விட்டதாகவே நினைக்க வேண்டும்! அதுதான் நிஜமும் கூட!

மின்னல்

என்.அபிராமி

# இதயத்தில் உயிர்வாழும் யமுனா சர்வானந்தா!

**எம்.சீ.ரஸ்மின்**

பூவுக்குத் தெரியாமல் வாசம் உறங்கிவிட்டது.

அந்த உடற் கூட்டுக்குள்ளிருந்து உயிர்ப் பறவை பறந்துவிட்டது.

கூடு மட்டும் வாடுகிறது; இளங்குயிலைத் தேடுகிறது...

கடலுக்குத் தெரியாமல் அலைகள் ஓய்ந்துவிட்டன.

அந்த வானுக்குத் தெரியாமல் நிலவு தேய்ந்துவிட்டது.

வானம் பதைக்கிறது; காலம் பதைக்கிறது...

ஒலிபரப்புப் பூங்காவில், இலங்கை வானொலி எனும் மரத்தில் தேசிய சேவைக் கிளையில் பூத்த யமுனா எனும் மலர் உதிர்ந்துவிட்டது.

ஒலிபரப்பு எனும் கடலில் சங்கமமான, யமுனா நதி வற்றிவிட்டது.

கடந்த ஜுலை இருபத்தேழாம் சனியன்று வானொலி அறிவிப்பாளர், செய்தியறிவிப்பாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி யமுனா சர்வானந்தா சிவலோகம் சென்றுவிட்டார்.

கலங்குகின்ற கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை;

காயப்படும் நெஞ்சங்களுக்குக் கட்டுப்போட முடியவில்லை;

'வணக்கம்! இளம் சகோதரிக்காக இதயங்கள் பிரார்த்திக்கும் நிகழ்ச்சியிது. யமுனாவுடன் பண்பாகப் பழகிக் களித்த நினைவலைகள் நெஞ்சைவிட்டு நீங்காது, அந்த ஆத்மா உயிருக்குள் ஒரு உயிர்த்துடிப்பல்லவா...

எழுபதுகளில் சிறந்த வானொலி விமர்சகராகத் திகழ்ந்தவர். ஒலி மஞ்சரியை ஒளிமஞ்சரியாக்கியவர்.

கட்டுகஸ்தொட்டையில் பிரபல பிஸ்கட் தயாரிப்பு நிறுவனமொன்றில் மூத்த இலிகிதராக அவர் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு நிகழ்ச்சி ஒலிப்பதிவுக்காக நான் சர்வாவுடன் அங்கு சென்றிருந்தேன்.

அன்று என்முன் பகிரங்கமாக நடந்த அந்தச் சந்திப்பு இவர்களிருவருக்குமிடையே இரகசியமான காதலைத் தோற்றுவித்தது.

காதல் திருமணமானது...

இந்த ஆண் ஜீவனுக்குள் உதிக்கவேண்டும். அதே ஜீவனுக்குள் அஸ்தமனமாக வேண்டும் என்பதால் ஒலிபரப்புத் துறையில் தன்னை வளர்த்துக் கொண்டார்.

நல்லுள்ளம் கொண்ட சகோதரி யமுனாவுடன் சேவையாற்றும் பாக்கியம்தான் கிட்டாமல் போனது...' இவ்வாறு - இருபத்தொன்பதாம் திகதி ஜெயக்கிருஷ்ணா தொகுத்தளித்த இரங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கரைந்துருகினார் ஒலிபரப்பின் தந்தை பி.எச்.அப்துல் ஹமித்...

மகளிர் நிகழ்ச்சிகளில் குரல் கொடுத்து தன்னைப் பட்டை தீட்டி சிறந்த அறிவிப்பாளராக அவர் படைத்த நிகழ்ச்சிகள், அவர் நடித்த நாடகங்கள், இதய அலைவரிசையில் காலமெல்லாம் ஒலிபரப்பாகிக் கொண்டே இருக்கும்.

1977ம் ஆண்டுகளில் யமுனா பொன்னம்பலம் எனும் பெயரில் பல ஆக்கங்களை அவர் வானொலிக்கு எழுதியுள்ளார்.

மிருதுவான நடை, உறுதியான மனம்...

பாராட்டுச் சொல்வதில் கலையகத்தில் யமுனா ஒரு ரகம்.

திரும்பி வராது இனி, அந்த இனிமையான யுகம்.

கடந்த பத்து மாதங்களாக புற்று நோயின் பிடிகளுக்குள் சிக்குண்டு, நிம்மதியாக ஒரு பெருமூச்சு விடத் துடித்தபோது எமதர்மன் வென்றுவிட்டான். மருத்துவம் மதிகெட்டு தோற்றுவிட்டது.

அன்று இருபத்தொன்பதாம் திகதி சனிக்கிழமை 5.30 மணிக்கு தென்றல் வானொலி இரங்கியழுதது.

வான் அலைகளில் அறிவிப்பாளர்கள் உரைத்த கண்ணீர் வாசகங்கள் உள்ளத்தை உறைய வைத்தன.

'அவர் எனக்கு, அக்கா, அவர் எனக்குத் தோழி, அவர் எனக்குத் தாய்... எல்லோரும் யமுனா என்ற ஒரு அறிவிப்பாளரை இழந்து விட்டார்கள். ஆனால் நான்.. என் உலகையே இழந்து விட்டேன்'

இப்படி இரங்கியவர் கலிஷ்ட்ரா லூக்கஸ்.

அந்தப் பூதவுடலை சுவர்க்கலோகம் வழியனுப்ப நாமும் சென்றிருந்தோம்.

யமுனா நதிக்கரையில் வைதேகி சாய்ந்திருந்தாள்.

வைதேகி...?

சர்வானந்தா யமுனா தம்பதிகளின் ஏக புதல்வி....

பிரதி சனிகளில் சின்னத்திரையில் தரிசனம் தரும் வண்ணமுகம்.

அன்று வதங்கி, வாடி வற்றிக் கொண்டிருந்தது.

முகத்தில் கவலைத்தீ பற்றிக் கொண்டிருந்தது...

நாம் ஆறுதல் சொல்லச் சென்றபோது அந்த சர்வா எமக்கு ஆறுதல் சொன்னார்.

ஆயிரம் ஆண்டுகள் ஆண்டவனாம் தசரன் இறந்துபோகவில்லையா...?


மதுரை எரித்த கண்ணகிதான் இறந்துபோகவில்லையா...?

உயிர் கூட்டுக்குள் உயிரை விட்டவன் அதை எடுத்துவிட்டான்.

அழுதென்ன பயன்..,

அறிவிப்பாளர் சீத்தாராமன் "அவர் எனக்கு உற்சாகமளித்தார்.. உபதேசம் சொன்னார்... ஜீரணிக்க முடியவில்லை" என்றார்.

"இது கானம்பாடிய குயில், இன்ப பறவை... காலம் அதைக் காவுகொண்டு விட்டது" என்றார் தென்றல் பிரதிப் பணிப்பாளர் சிவராஜா.


கணவருடன் யமுனா

"அம்மா கை கோர்த்து நடை பழகிய ஞாபகமே...

தனியே நடைபழகி நான் தொலைந்தது ஞாபகமே!",

"காலைத் தென்றலில் நான் ஒலிபரப்பிய பாடலில் இடம்பெற்ற இந்த வரிகளைக் கேட்டுவிட்டு 'இந்தப் பாட்டும், வரிகளும் எனக்கு மிகவும் பிடிக்கும்...' என்று சொன்னார் சகோதரி யமுனா" என்று கலங்கினார் நாகபூஷணி.

யமுனா விட்டுச் சென்ற எச்சங்கள் விருட்சங்களாகும்.

மறைந்த ஒலிபரப்பாளர் யமுனாவின் ஆன்மா சுவர்க்கலோகம் காணவேண்டும்.

தமிழ்பேசும் நேயர்களின் சார்பிலும் இடி பத்திரிகை நிறுவனத்தின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

## வித்தியாசமான வெளியீடு

கடந்த சனிக்கிழமை (27.07.2002) கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் வித்தியாசமானதொரு நூல் வெளியீடு இடம்பெற்றது. சூரியன் எப்.எம் பிரதம செய்தி ஆசிரியர் நடராஜா குருபரன் அவர்கள் எழுதிய "தமிழில் வானொலிச் செய்திகள் யாருக்காக? எப்படி?" என்ற நூல் வெளியீட்டு விழா பல்சுவை நிகழ்வுகளுடன் சிறப்பாக அமைந்திருந்ததைப் பலரும் பாராட்டினார்கள். இலங்கையின் பெரும்பாலான ஊடகவியலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். தனியே நூல் வெளியீடு, உரைகள் என்ற அறுவைகள் இல்லாமல் ஆடல், பாடல் என்பனவற்றுடன் கூடிய வித்தியாசமான உரைகளுடன் விழா கலகலப்பாகவும், சுறுசுறுப்பாகவும் அமைந்திருந்தது. சூரியன் எப்.எம், சக்தி எப்.எம் ஆகியவற்றில் முன்னர் பணியாற்றிய எஸ்.முகுந்தன் அற்புதமாக நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். எஸ்.மகிந்தகுமாரின் 'ஹார்மணி' இசைக்குழுவினரின் 'இசைப் புரட்சி' வித்தியாசமான பாடல் தெரிவுகளுடன் சுவாரஸ்யமாக அமைந்திருந்தது. சிறப்பு வைபவமாக இடம்பெற்ற பரத நாட்டியம் அருமை. மொத்தத்தில் புதுமைகள் நிறைந்த ஜனரஞ்சகமான நூல் வெளியீட்டுவிழாவைக் காணக்கிடைத்ததில் நெஞ்சுக்கு நிறைவு. இருப்பினும் சூரியனின் மகுடத்திற்காகப் பாடுபட்டவரின் விழாவுக்கு சூரியன் உறுப்பினர்கள் வருகைதராதது ஒரு குறையாகத்தான் இருந்தது.

-அனு

## பரிதாப நிலையில் சக்தி

ஆஹா... ஓஹோ... என்றிருந்த சக்தி எப்.எம் கடந்த நான்கு மாதங்களுக்கும் மேலாக ஒருவிதமான சோர்வு நிலையை அடைந்திருக்கிறது. முன்பெல்லாம் 'வணக்கம் தாயகம் நிகழ்ச்சி' களைகட்டி கலகலப்பாக ஒலிபரப்பாகும். லோஷன் விலகிச்சென்ற பிறகு அந்நிகழ்ச்சியில் எதுவித விறுவிறுப்புமே இல்லை. சக்தி டி.வியின் நிலையும் இதேமாதிரிதான். "சின்னச் சின்ன ஆசைகள்" நிகழ்ச்சிகளில் கஜனும், "ஹிட் லிஸ்ட்" நிகழ்ச்சியில் பிரேமும் ரொம்பத்தான் அலட்டுகிறார்கள். சக்தி எப்.எம்மில் தமிழோடு ஆங்கிலத்தைச் சேர்த்துக் குழப்புகிறார்கள். இந்நிலைமைகளை மாற்றியமைத்து சக்தியின் தனித்துவத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், மேன்மைப்படுத்துவதற்கான பங்களிப்பும் சக்தியின் அறிவிப்பாளர்களிடமே இருக்கிறது. புதிதாக இணைந்துள்ள அறிவிப்பாளர்கள் இதனைக் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும்.

-பிருந்தா, கம்பளை.

## மெருகேறும் இதயராகம்

சக்தியின் நிகழ்ச்சி மாற்றங்கள் பல நேயர்களை சக்தியை விட்டும் பிரிய வைத்திருக்கின்றது. என்றாலும் இதயத்துக்கு இதம் தரும் 'இதயராகம்' மட்டும் நேயர்களை வசீகரித்துக்கொண்டே இருக்கிறது. வானலை சூப்பர் ஸ்டார் எஸ்.ரி.றவூ.்.ப் வித்தியாசமான முறையில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் விதம் 'இதயராகத்'துக்கு மேலும் மெருகேற்றுகிறது. இதயராகத்தில் ஒலிக்கும் ஒவ்வொரு பாடலுக்கும் அர்த்தமுள்ள கவிதைகள் மூலம் றவூ.்.ப் விளக்கமளிக்கிறார். இதமான இரவு நேரத்தில் இதய சுமைகளை இறக்கிவைத்து இமைகளை மூடவைக்கும் இதயராகத்தின் இதய நாயகன் - வானலை சூப்பர் ஸ்டார் றவூ.்.ப்புக்கு வாழ்த்துக்கள்.

-கே.எம்.அனீஸ், புதியகாத்தான்குடி-06.

## மலையகத்தில் சக்தி

கடந்த ஜுன் 30ம் திகதி முதல் மலைநாட்டிலும் சக்தி எப்.எம் ஒலிபரப்பைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. தனியார் வானொலிகளில் தரத்துக்கு முன்னுரிமை வழங்கும் சக்தி எப்.எம்மின் அனைத்து நிகழ்ச்சிகளையும் இப்போது கேட்டு ரசிக்க முடிகிறது. மலையக மக்களின் ரசனையறிந்து அதற்கேற்றாற்போல் புதிய நிகழ்ச்சிகளையும் சக்தி எப்.எம் வழங்குமானால் மலையகத்தில் சக்தியின் தேவையை எந்த வானொலியாலும் அசைக்கவே முடியாது. சேவையை விஸ்தரித்துத் தந்ததில் பெரும்பங்காற்றிய எஸ்.எழில்வேந்தன், அபர்ணாசுதன் ஆகியோருக்கு நன்றிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

-புவனேஸ்வரி குமரகுரு,
அக்கரப்பத்தன.

## இதுதான் உண்மை

ஜுலை 07-13, 2001 இடி இதழின் 'மின்னல்' பகுதியில் இடம்பெற்ற சக்தி எப்.எம் அறிவிப்பாளர் கஜனின் பேட்டி தொடர்பாக ஒரு தவறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "சூரியன் எப்.எம்மில், 'மெய் மறப்போம், பொய் கறப்போம்' நிகழ்ச்சியை கஜன் வழங்கிய போது அதன் சுவையை இன்றுகூட மறக்க முடியவில்லை" என்ற தகவல் பிழையானதாகும். 'மெய் மறப்போம் பொய் கறப்போம்' நிகழ்ச்சி எஸ்.முகுந்தன், வெள்ளையன் ஆகிய இருவரின் காலகட்டத்திலேதான் மிகவும் சிறப்பாக சூரியனில் ஒலிபரப்பானது. முகுந்தன் - வெள்ளையன் ஆகியோர் சூரியனைவிட்டு விலகிச் சென்ற பிறகுதான் கஜன் அந்நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தார். கஜனுடைய காலகட்டத்தில் 'மெய் மறப்போம் பொய் கறப்போம்' நிகழ்ச்சி சோபை இழந்து காணப்பட்டது என்பதே உண்மையானதாகும்.

-எஸ்.எல்.ராதிகா, சிலாபம்.

## ஓ... போடு

இலங்கை, மற்றும் தென்னிந்திய சினிமாக் கலைஞர்கள் பங்கேற்ற 'ஓ... போடு' இசை நடனக் களியாட்ட நிகழ்ச்சி கடந்தவாரம் (28-07-2001) சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்றது. K.T.பிரசாத், S.பகீரதன் ஆகியோர் நிகழ்ச்சி அமைப்பை மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள். பாடகர் கார்த்திக், மாணிக்கவிநாயகம், ஓ போடு ராணி ஆகியோரும் பங்கேற்றனர். இலங்கையின் இசைச் சக்கரவர்த்திகளான 'அக்னி' இசைக் குழுவினரின் புயல் வேக இசையில் எம்.சிவகுமார், நிலுக்ஷி, ஜோர்ஜ் ஸ்டான்லி, சுஜீவா, டொக்டர் முபாரிஸ் ஆகியோர் இன்பராகம் இசைத்தார்கள். ஆடல், பாடல், துள்ளல் நிறைந்த 'ஓ போடு' நிகழ்ச்சி மூலம் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களைத் திருப்தியுறச் செய்த நிகழ்ச்சி அமைப்பாளர்களான K.T.பிரசாத், S.பகீரதன் ஆகியோருக்கும் அக்கினி இசைக்குழுவுக்கும் ஓர் "ஓ....." போடலாம்.

## நிகழ்ச்சி பிடித்ததா?

அன்று சக்தி எப்.எம்மில் ஒலிபரப்பான 'இதயராகம்' கானங்களை மட்டுமல்லாமல் திரையுலக சாதனைத் தகவல்களையும் சுமந்திருந்தது. 'இதயராகம்' என்ற தாலாட்டுப் புத்தகத்தின் ஒரு பக்கத்தை சினிமாத் தகவல்களைக் கொண்டு எஸ்.ரி.றவூ.்.ப் சிறப்பித்த விதம் அப்பப்பா... நெஞ்சை இன்னும் ஸ்பரிசிக்கிறது. மிக அரிதான, பயன்படக்கூடிய பல தகவல்களை றவூ.்.ப் தேடித்தந்தார். ஸ்ரீரியோ என்ற நுண் ஒலியமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட பாடல்கள் முதன்முதலில் 'ப்ரியா' என்ற தமிழ்ப்படத்தில்தான் இடம்பெற்றன. இந்தத் தகவல் 'இதயராகம்' தந்ததுதான். தந்த தகவல்களுக்கிடையே பொருத்தமான பாடல்களைத் தனது ஸ்டைலில் றவூ.்.ப் ஒலிபரப்பியது இனிமையான இன்பம். 'மாவீரன்' படப்பாடலான 'நான் கொடுத்தத திருப்பிக் கொடுத்தா' என்ற சித்ராவின் அற்புதமான பாடலை ஒலிபரப்பியபோதுமட்டும் குறுக்கீடுகளைச் செய்து றவூ.்.ப் பாடல் தந்த சுகத்தைக் கெடுத்துவிட்டார். பாடல்களுக்குள் அத்துமீறும் ஹிட்லர் போக்கு இனிமேல் வேண்டாம். நல்லதை, கருத்துள்ள இனிமையான பாடல்களை மாத்திரமே தரவேண்டும் என்பதற்காக றவூ.்.ப் கடினமாக உழைப்பது புரிகிறது. இத்தனை அருமையாக இதயராகத்தை ஒலிபரப்பிவிட்டு "இந்நிகழ்ச்சி உங்களுக்குப் பிடித்ததோ? பிடிக்கவில்லையோ? தெரியாது" என்று கேட்பதுதான் ஏனென்று தெரியாமலிருக்கிறது. மிஸ்டர் றவூ.்.ப்! வானலைகளின் சூப்பர் ஸ்டார் நீங்கள்தான்.

-என்.அபிராமி



'சொல்லமறந்த கதை' சேரன் –ரதி

## விஜய்யின் வாரிசு

நடிகர் விஜய்யின் தம்பி சஞ்சய்குமார் கதாநாயகனாக அறிமுகமாகும் படம் 'சின்னா'. இப்படத்தின் கதை, கும்பகோண த்தில் வாழ்ந்த பிரபல ரவுடியின் வாழ்க் கையை மையமாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். 'அன்புடன்' படத்தின் கதையாசிரியர் ஸ்ரீ. அவருக்கு இது முத ல்படம். இப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சிகள் ஐயாயிரம் ஜூனியர் ஆர்ட்டி ஸ்ட்களை உபயோகித்து எடுக்கப்பட இருக்கிறதாம். ஒரு வித்தியாசமான கி ளைமாக்ஸை 'சின்னா'வில் எதிர் பார்க்கலாம்.

## நீ கிடைத்தால் போதும்

தேவ் கதாநாயகனாக அறிமுகமாகும் படம் "நீ கிடைத்தால் போதும்". கடந்த 2001 ல் சிறந்த சென்னை மாடல் நம்பர் ஒன் இடத்தை வென்றவர் தேவ். இவரது ஜோடியாக பம்பாயிலிருந்து ஆனந்தி, சாந்தனா அறிமுகமாகிறார்கள். குஜராத்தி, கன்னட படங்களில் நடித்து சிறந்த நடிகை விருதைத் தட்டிச் சென்ற ஆனந்தி ஒரு சிறந்த நடன கலைஞரும் கூட தேவ், கருணாஸ், பிரமிட் நடராஜன், சார்லி, பொன்னம்பலம் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.இப்படத்திற்கு திரைக்கதை அமைத்து இயக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார் டி.ஷிவராம். இவர் டி.பி.கஜேந்திரன், எஸ்.ஏ. சந்திரசேகரன், வின்செண்ட் செல்வா போன்றவாகளிடம் இணைய இயக்குனராக பணிபுரிந்தவர்.மனோஜ் பட்நாகர் இப்படத்தின் கதை எழுதி இசை அமைக்கிறார். சுபா சந்தீப் இப்படத்தைத் தயாரிக் கிறார். இதன் பாடல் பதிவு கடந்த ஏழாம் திகதி ஆரம்பமாகி[illegible]. 15ம் தி[illegible] முதல் படப்பிடிப்பு தொட ங்கியது. தொடர்ந்து ஒரே கட்ட படப் பிடிப்பாக நடைபெறும். மூன்று பாடல் காட்சிகள் 'பாங்கொக்கில்' படமாக் கப்படுகிறது.

## நானும் அப்பாவும்

நடிகர் தியாகராஜன் எழுதி இயக்கி நடிக்கும் பிரம்மாண் டமான படம் 'ஜெய்' இந்தப் படத்தில் பிரசாந்தும் அவரும் முதன்முறையாக இணை ந்து நடிக்கிறார்கள். அப்பா கதை, வசனம் என்றாலும் நான் கதை கேட்டபின்பே ஒத்துக் கொண்டேன் என்று கண் சிமிட்டிச் சிரிக்கிறார் பிரசாந்த்.

## தர்மக் குடும்பம்

நடிகர் அஜீத் சினிமா உலகத்தைச் சேர் ந்த பலரின் படிப்புக்கும், மருத்துவ செலவுக்கும் மிகப் பெரிய உதவிக ளைச் செய்து வருகிறார். அவர் மனைவி ஷாலினியும் இதில் சளைத்தவர் அல்ல. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் வீட்டில் உபயோகிக்கும் உடைகள், அவரது பெற்றோர் வீட்டில் உபயோகிக்கும் உடைகள், என அனைத்து துணிமணிக ளையும் சேகரித்து, அனாதை ஆசி ரமங்களுக்கு வழங்கி வருகிறார். அவை களில் பெரும்பாலனவைகள் புத்தம் புதிதாகவே இருக்கும்.

## என்னோட ஃபேவரெட்

நடிகை ரம்பா ஒரு விநாயகர் பக்தை. கோவிலுக்குப் போனால் நண்பர்களிடம் பேசுவதைப் போல கடவுளுடன் பேசும் பழக்கம் உள்ளவர். பார்ப்பவர்கள் பை த்தியம் என்று நினைக்கும் அளவுக்கு பேசிக் கொண்டிருப்பேன் என்கிறார்.

## கிசுகிசு

- தேவயானிக்கு ஓய்வு கிடைத்தால், தன் கணவருக்குப் பிடித்த முட்டைக்கறி செய்து, மணக்க மணக்க படைத்து சாப்பிட வைப்பாராம்.
- துள்ளும் நடிகை ஏற்கனவே ஒரு மேட்டர் படத்தில் நடித்துள்ளார் என்ற செய்தியை கேள்விப்பட்டதும் பதறிப்போய்விட்டாராம். அதன் பிறகு தமிழ் சினிமாவில் எப்பொழுதுமே இப்படித்தான் கவலையில்லாமல் உங்கள் வேலையை கவனியுங்கள் என்று இரட்டை இயக்குனர்கள் தெரிவித்ததும் கப்சிப் ஆனாராம். ஆனாலும் இந்த நியூஸ் பரப்பியது தன் முதல் இயக்குனர் என அறிந்து குமுறுகிறார் நடிகை.
- கதை கேட்காமல் படம் பண்ணவே மாட்டேன் என்று அடம்பிடித்து வந்த காதல் மன்னன் தனது அடுத்த படமான 'ஆன்ட்டி ஹீரோ'விற்கு கதையே கேட்காதது பலருக்கும் ஆச்சர்யத்தைக் கொடுத்திருக்கிறது. தொடர்ந்து தோல்விப் படங்களாக அமைந்த இவருக்கு இது மெகா டைரக்டர் படம் என்பதால் எப்படியும் ஹிட் செய்து விடுவார் என்ற நம்பிக்கையில் தான் கதை கேட்கவில்லையாம்.
- சமீபத்தில் விபச்சார வழக்கில் நடிகை பிடிபட்டதையொட்டி இதே மாதிரி தொழில் செய்யும் பல நடிகைகள் உஷாராகி விட்டார்களாம். அடுத்த ஒரு மாதத்திற்கு பிஸினஸ் வேண்டாம். நிலைமை ஆறியபிறகு தொடரலாம் என்பது அவர்கள் திட்டமாம். இந்த விஷயமும் போலீஸுக்குத் தெரியவர அவர்களும் பதுங்கியபடி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள்.
- ஒரு லட்சம் வாங்குகிறார்கள் காமெடி நடிகர்கள் என்று வெளிப்படையாக அழகி பட இயக்கனர் கருத்து தெரி வித்ததால் இனிமேல் அவர் இயக்கும் படத் தில் நடிக்கப் போவ தில்லை என்று சப தமெடுத் திருக் கிறார் விவேக மான காமெடி நடிகர்.
- கமலின் "அன்பே சிவம்" படத்தை இயக்குவது மலையாள டைரக்டர் பிரியதர்ஷன் என்று கூறப்பட்டது வெறும் பொய்யாம். உண் மையில் "அன்பே சிவம்" படத்தை சுந்தர்.சி இயக் குகிறார்.



'சமஸ்தனம்' சரத்குமார் – தேவயானி

- தமிழ்த்[illegible] திரைப்பட[illegible] வரலாற்றில் அதிககால[illegible] தென்-இந்தியத் திரையர ங்கில் 'காண்பிக்கப்பட்ட படம் எது? –எம்.ஆர்.எம்.சில்[illegible]
- ஒரு தீபாவளிக்குத் திரையிடப்பட்டு [illegible] வரை காண்பிக்கப்பட்ட "ஹரிதாஸ்"
- நடிகை சுகன்யாவின் முகவரி[illegible] –தே.அனி[illegible]
- Suganya,
4/5 Ooruralcot,
5th Avenue,
Besant House,
Chennai-600 090
- சம்யுக்தாவர்மாவின் முதல் [illegible] எது? –எம்.எஸ்.நவ[illegible]
- தென்காசிப்பட்டணம்.
- சுப்பர் ஸ்டாரின் "பாபா" தி[illegible] நடைபோடுமா? –கே.சுதாகர், [illegible]
- ஓ .... போடும்.
- "என்ன விலை அழகே" படத்[illegible] யார்? –து.க[illegible]ந்திர[illegible]
- பிரசாந்த்
- சுப்பர் ஸ்டாருடன் போட்டி போ[illegible] செய்வது சரியா? –ரஜினிப் பிரிய[illegible]
- அரசியலிலும், சினிமாவிலும் [illegible] எதிர்கொள்ள கப்டன் தயாராகிவிட்டார். நல்லது தானே.
- விவேக்குக்கு அடுத்தபடியாக [illegible] கொடி கட்டிப் பறக்கப் போவது [illegible] –எம்.அபிராமி, [illegible]
- இப்போதைக்கு விவேக் காட்டில்தா[illegible]
- இயக்குனர் பாஸிலின் முகவரி[illegible] –எஸ்.மஹ[illegible]
- Fazil,
24, Ram Colony,
West Mambalam,
Cennai-600 0[illegible]
- "யூத்" படம் எப்படி? –கே.ராகவ[illegible]
- விஜய் தரப்பு உற்சாகமாக இருப்பதா[illegible]
- அரசியல் போன்று சினிமாவிலு[illegible] ஆதிக்கம் அதிகமாக இருக்கிறதே[illegible] –என்.கபில[illegible]
- அரசியலைப் போன்று இங்கு ஊழல்[illegible] முடியாது. திறமை இல்லை என்ற[illegible] போகவேண்டியதுதான்.

## ஸ்ரீகாந்தின் வேண்டுதல்

தன்னோடு 'ஏப்ரல் மாத த்தில்' என்ற படத்தில் நடித்த சினேகாவுக்கு விபத்து ஏற்பட்ட தற் காக, ஹீரோ ஸ்ரீகா ந்த் பல வேண்டுதல், அபிஷேகங்களைச் செ ய்து வருகிறார். ஏன்? தன் னுடன் நடித்துக் கொ ண்டி ருக்கும் ஹீரோயின் வெகு விரைவில் குணமடைய வே ண்டும் என்பதற் காக வாம்...?

## கெஸ்ட் ரோல்

'ராஜா', 'திரில்' படத்தில் ஒரு பாட்டுக்கு நடனமாடும் மந்த்ரா, காலையில் எழு ந்தவுடன் முன்னணி ஹீரோக்களுக்குப் போன் பண்ணி சான்ஸ் கேட்டு வருகிறார். ஒரு நடனக் காட்சி இல்லாவிட்டாலும் பரவாயில்லை கெஸ்ட் ரோலில் கூட நடிக்கத் தயார் என்று சொல்லி வருகி றார்.

## புரியாத புதிர்!!

ரவளி, தன் அண்ணனை ஹீரோவாக வைத்து தானே படம் தயாரிப்பதாக இருந்தார், ஹீரோயினாக ரக்ஷனாவை ஒப்பந்தம் செய்தார்கள். அட்வான்ஸ் வாங்கிவிட்டு கல்கத்தா சென்றவர்தான், ஏனோ இன்னமும் திரும்பி வரவில்லை.



'வில்லன்' அஜித் – கிரன்

## அலி 'பாபா' குகை

நகைச்சுவை நடிகர் வடிவேலு வின் வீடு சாலி கிராமத்தில் நான் காவது தெருவில் உள்ளது. சுமார் பதினைந்து, இருபது அடி உயரத் துக்கு காம்பவுண்ட் சுவர், அதே உயரத்துக்கு கதவுகள் போடப்பட் டுள்ளது. அக்கம் பக்கம் உள்ள வர்கள் 'அலி பாபா குகை' என்று இவர் வீட்டை விமர்சனம் செய்கி றார்கள். காரணம் குழந்தைகளோ, அல்லது வீட்டில் உள்ளவர்களோ வெளியே வருவதில்லை. மற்ற குழந்தைகளைப் போல இவர் வீட்டுக் குழந்தைகள் வெளியே வந்து விளையாடுவதும் இல் லை.



நக்மா

## நக்மா மும்மா[illegible]


நக்மாகான் என்பதுதான் மும்தாஜின் நிஜப்பெ[illegible] நடன உதவியாளர் ஒருவர் இருந்திருக்கிற[illegible] பெயர் மாற்றியவர் டி.ஆர். இப்போதும் இவர[illegible] நெருங்கிய நண்பர்கள் நக்மா என்றுதான் [illegible]

## போதும்

படம் "நீ கிடைத்தால்
ன்னை மாடல் நம்பர் ஒன்
ஜோடியாக பம்பாயிலிருந்து
கள். குஜராத்தி, கன்னட-
விருதைத் தட்டிச் சென்ற
ம் கூட தேவ், கருணாஸ்,
னம்பலம் மற்றும் பலர்
தை அமைத்து இயக்கும்
இவர் டி.பி.கஜேந்திரன்,
ல்வா போன்றவாகளிடம்
வர்.மனோஜ் பட்நாகர்
மைக்கிறார். சுபா சந்தீப்
டல் பதிவு கடந்த ஏழாம்
ம்பமாகியது. 15ம் தி...
பிடிப்பு தொட ங்கியது.
ஒரே கட்ட படப் பிடிப்பாக
. மூன்று பாடல் காட்சிகள்
கில்' படமாக் கப்படுகிறது.

## ன்னோட பேவரெட்

பா ஒரு விநாயகர் பக்தை.
நப் போனால் நண்பர்களிடம்
போல கடவுளுடன் பேசும்
ள்ளவர். பார்ப்பவர்கள் பை
றாறு நினைக்கும் அளவுக்கு
பசிக் கொண்டிருப்பேன்
ன்கிறார்.


'தீயுமானவன்' சரவணன் –பிரேமா

## கேள்வி பதில் சினிமா மடி

தமிழ் ... திரைப்பட
...றாற்றில் ... அதிககால...
ன்-இந்தியத் திரையர
ல் 'காண்பிக்கப்பட்ட
எது? **–எம்.ஆர்.எம்.சில்மி,** மடவளை பஸார்.
ஒரு தீபாவளிக்குத் திரையிடப்பட்டு மூன்றாவது தீபாவளி
ர காண்பிக்கப்பட்ட "ஹரிதாஸ்"

நடிகை சுகன்யாவின் முகவரி என்ன?
**–தே.அனிதா,** தம்பிலுவில்-01.

Suganya,
Ooruralcot,
Avenue,
ant House,
nnai-600 090

சம்யுக்தாவர்மாவின் முதல் தமிழ்த் திரைப்படம்
?
**–எம்.எஸ்.நஸீஹா,** ஏத்தாலை.

தென்காசிப்பட்டணம்.

சுப்பர் ஸ்டாரின் "பாபா" திரைப்படம் வெற்றி
டபோடுமா?
**–கே.சுதாகர்,** அக்கரைப்பற்று-09.

ஓ .... போடும்.

"என்ன விலை அழகே" படத்தின் கதாநாயகன்
?
**–து.க...ந்திரன்,** மல்வத்தை-02.

பிரசாந்த்

சுப்பர் ஸ்டாருடன் போட்டி போட கப்டன் முயற்சி
ய்வது சரியா?
**–ரஜினிப் பிரியன்,** கொழும்பு-05.

அரசியலிலும், சினிமாவிலும் சுப்பர் ஸ்டாரை
ர்கொள்ள கப்டன் தயாராகிவிட்டார். போட்டி இருந்தால்
லது தானே.

விவேக்குக்கு அடுத்தபடியாக நகைச்சுவையில்
டி கட்டிப் பறக்கப் போவது யார்?
**–எம்.அபிராமி,** திருகோணமலை.

இப்போதைக்கு விவேக் காட்டில்தான் மழை.

இயக்குனர் பாஸிலின் முகவரி என்ன?
**–எஸ்.மஹ்ரூப்,** வெலிகம.

Fazil,
Ram Colony,
est Mambalam,
nnai-600 0...

"யூத்" படம் எப்படி?
**–கே.ராகவன்,** மட்டக்களப்பு.

விஜய் தரப்பு உற்சாகமாக இருப்பதாக அறியமுடிகிறது.

அரசியல் போன்று சினிமாவிலும் வாரிசுகளின்
திக்கம் அதிகமாக இருக்கிறதே?
**–என்.கபிலன்,** யாழ்ப்பாணம்.

அரசியலைப் போன்று இங்கு ஊழல் செய்து ஜெயிக்க
டியாது. திறமை இல்லை என்றால் வீட்டுக்குப்
ாகவேண்டியதுதான்.

## நக்மா மும்மானார்

ாகான் என்பதுதான் மும்தாஜின் நிஜப்பெயர். அந்த பெயரில்
உதவியாளர் ஒருவர் இருந்திருக்கிறார். மும்தாஜ் என்று
ர் மாற்றியவர் டி.ஆர். இப்போதும் இவரனது அம்மாமற்றும்
ருங்கிய நண்பர்கள் நக்மா என்றுதான் அழைக்கிறார்கள்.

## கவிதாலயாவின் 'ஆல்பம்'

கே.பாலசந்தர் வழங்கும் கவிதாலயாவின் ஆதிபகவன் பிலிம்ஸ் தயாரித்து வரும் படம் 'ஆல்பம். ஜீவாவின் முற்போக்கு சிந்தனை, ஜீவாவின் அமைதி, கண்ணியம், நடை உடை அத்தனையையும் ரசிக்கிறாள் விஜி. தோழிகளுடன் விளையாடச் செல்வதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்த விஜி, நேராக ஜீவா நடந்த வருவதைப் பார்த்து அவர் அருகே போய் நிற்கிறாள்.

என்ன உம்மனசுல நினைச்சிட்டிருக்க... எப்பப் பார்த்தாலும், உம்-ன்னு வெச்சிட்டிருக்கேன்னா பரவாயில்ல... அதென்ன உன் நண்பர்களுகிட்ட மட்டும் நல்லா வீரபாண்டிய கட்டபொம்மன் மாதிரி வீரவசனம் பேசுற... அதுவும் எட்டு ஊருக்கும் கேட்கிறமாதிரி... என்ன பார்த்தா மட்டும் ஏன் உனக்கு இந்த அமைதி... என்று படபடவென பேசிகிட்டே போக... அவளையே முறைத்தப் பார்த்துக் கொண்டிருக்க.

சரி... சரி... இப்ப நான் விளையாடப் போறன்.. அதுக்காவது 'பெஸ்ட் ஆப் லக்'ன்னு சொல்லக் கூடாதா என்று வெட்கத்தில் கேட்க... 'பெஸ்ட் ஆப் லக்' என்று ஜீவா சொல்ல... ஆனந் தத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் விஜி ஓட... இப்படியொரு காட்சி 'ஆல்பம்' படத்திற்காக படமாக்க ப்பட்டது. இதில் ஜீவாவா ஆரியன் ராஜேஷ், விஜியாக ஸ்ருதிகா நடித்தார்கள்.

## செந்திலின் தோட்டம்

நடிகர் செந்தில் படப்பையில் ஒரு தோட்டம் வைத்திருக்கிறார். விவசாயத்தில் லாபம் இல்லாவிட்டாலம் கூட, தன் குடும்பத்தினருடன் ஓய்வுக்காக இங்கே போய்த் தங்குகிறார். வீட்டில் சமைத்துச் சாப்பிடும் சாப்பாட்டை விட, இந்த தோட்டத்தில் சாப்பிடும் போது ஒரு தனி டேஸ்ட் என்கிறார். இங்கே போய் தங்கும்போது மகிழ்ச்சியாக இருப்பதால், இத்தோட்டத்தைப் பாதுகாத்து வருகிறார்.

## அடிக்கடி கேட்கலாம்

இதுவரை சினிமாவில் பாடாமலே மேடைக் கச்சேரிகளில் முழுக்கவனம் செலுத்தி வந்த, சுதா ரகுநாதன் 'இவன்' படத்தில் இளையராஜா இசையில் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பிரபல பாடகியும், நடிகை ஸ்ரீவித்யாவின் அம்மாவுமான எம்.எல்.வந்தகுமாரியின் சிஷ்யை. 'இவன்' ரிலீஸுக்கு முன்பே, வேறு இரண்டு படப்பாடல்களை பாடிவிட்டார். இனிமேல் ரெக்கார்டிங் தியேட்டர்களில் சுதா ரகுநாதன் குரலை அடிக்க கேட்கலாம்.

## வேளை வரும்போது படத்தை இயக்குவேன் -விஜய-



**தமிழன் படம் உங்களுக்குத் திருப்தியைத் தந்தா?**

'தமிழன்' படம் இன்றைய சமூகத்துக்கு நல்ல மெசேஜ் தந்த படம் என்று எல்லோரும் விமர்சனம் செய்திருக்கிறார்கள். மீடியாக்களில் பாராட்டுக்களும் அப்படத்துக்குக் கிடைத்தன. எனக்கும் மாறுபாடான பாத்திரம். வழக்க'மான விஜய்யை இப்படத்துல நாங்கள் சந்திக்கவில்லை என்பது ரசிகர்களின் அபிப்பிராயமாக இருந்தது.

**'யூத்' படப்பிடிப்பின் சில இடைவெளியில் சில காட்சிகளைத் தனியாக கேமரா மேனை வைத்து இயக்கிய நீங்கள் எப்போது இயக்குநராவதற்கான அறிவிப்பைத் தருவீர்கள்?**

படத்தை இயக்க வேண்டும் என்பது எனது லட்சியம். அதற்கான வேளை இன்னும் வரவில்லை. நடிகராகவே படத்துக்குப் படம் எதிர்பார்ப்பு கூடிக் கொண்டேவருகிறது. டைரக்ட் பண்ணுவதாக அறிவித்தால் அது மேலும் எதிர்பார்ப்புகளை அதிகப்படுத்தும். அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் நான் இயக்கப் போகும் படம் இருக்க வேண்டும். அதற்கெல்லாம் இன்னும் காலம் ஆகும்.

**புதுப்புது நடிகர்கள் அறிமுகம் ஆகிறார்கள். இளம் நடிகர்களின் படங்கள் நன்றாக ஓடுகின்றன. இத்தகைய போட்டிகளை எப்படி சமாளிப்பீர்கள்?**

நாம் தனியாக ஓடினால் கொஞ்சம் தூரம்தான் ஓட முடியும். இதையே ஓட்டப் பந்தயம் என்று அறிவித்து ஐந்து பேர் ஓடினால் சளைக்காமல் போட்டி போட்டுக் கொண்டு அதிக தூரம் ஓடலாம்.

எல்லோருடைய படங்களும் ஓட வேண்டும். அப்போதுதான் இன்டஸ்ட்டிரி நன்றாக இருக்கும். நானும் ஒரு புதுமுகமாக மக்களுக்கு அறிமுகமானவன்தான். மக்கள் என்னை 'நம்ம வீட்டு ஹீரோவாக' ஏற்றுக் கொண்டார்கள்.

**நடிகர்கள், தொழிநுட்பக் கலைஞர்கள் நிறைய பேர் வருகிறார்கள். ஆனால், தயாரிப்பாளர்கள் குறைந்துவிட்டார்களே?**

அப்படிச் சொல்ல முடியாது. சில நிறுவனங்கள் படத்தைத் தயாரிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருககலாம். அதை காம்பன்சேட் பண்ணுவது மாதிரி புதியவர்கள் வந்து படத் தயாரிப்பில் ஈடுபடுகிறார்களே?

**புதுப்புது இயக்குநர்கள் படங்களில் நடித்தும் வெற்றிகளைக் கொடுக்கிறீர்கள். பாலசந்தர், மணிரத்னம், ஷங்கர் போன்ற டைரக்டர்களிடம் நடிக்கவில்லையே?**

அதுபோன்ற வாய்ப்புகள் இன்னும் கைகூடவில்லை

**'யூத்' படத்துக்காக70 அடி உயரத்திலிருந்து குதித்தீர்கள். இத்தகைய ரிஸ்க் தேவைதானா?**

மக்களுக்கு இன்று தொழில்நுட்ப அறிவு வளர்ந்துவிட்டது, எது நிஜ சாகசம். எது கம்ப்யூட்டர் கிரா..பிக்ஸ் என்பது பற்றி எளிதில் பகுத்துணர்கிறார்கள். அதே நேரத்தில் நடிகர்களே செய்த சாகசம் எது, எது டூப் என்றெல்லாம் விவாதிக்கிற அளவுக்கு மக்கள் தெளிவடைந்து விட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாமாக ஏதாவது ரிஸ்க் எடுத்து ஆக வேண்டும், உயரத்திலிருந்து குதிப்பதைத் தயாரிப்பாளர், இயக்குநர், ஸ்டண்ட் மாஸ்டர் யாரும் முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. நான் வற்புறுத்தி நடித்தேன்.



**அரசியல் ஈடுபாடு உண்டா?**

அரசியல்வாதியாக வேண்டும் என்றால் மிகுந்த பொறுமையும், சகிப்புத்தன்மையும், உழைப்பும் வேண்டும். இன்று தலைவர்களாக உயர்ந்து நிற்பவர்கள் பின்னணியில் உழைத்த உழைப்பை நினைத்துப் பார்க்க வேண்டும். எனக்கு அரசியல் வேண்டாம். என்னாலான உதவிகளை ஏழை எளியவர்களுக்கு செய்வதிலேயே எனக்குத் திருப்திக் கிடைத்துவிடுகிறது.

**என்ன அளவுகோல் வைத்து கதை கேட்கிறீர்கள்?**

என் அளவுகோல் கதை. அது சரியாக அமைந்துவிட்டால், மற்ற விஷயங்கள் தானாக அமைந்துவிடும். அப்படி இருந்தும் சில படங்கள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறாமல் போகலாம். ஆனால், நடிக்கும் போதும் வெற்றி பெறவேண்டும் என்றுதான் பாடுபடுகிறோம்.

**அடிக்கடி வெளிநாட்டுக்குப் போய் வருகிறீர்கள்? வெளிநாட்டில் இருக்கும்போது இந்தியா உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?**

அங்கு வானுயர்ந்த கட்டடங்களைப் பார்க்கும்போது கட்டடம் உயரமாகத் தெரிகிறது. ஆனால் நம் தமிழ் மண்ணின் கலாசாரம் உயரமாகத் தெரிகிறது.

## நடிகராகும் சேரன்

தங்கர் பச்சான் இயக்கத்தில் "சொல்ல மறந்த கதை" படத்தில் "கதையின் நாயகனாக" நடித்து வருகிறார் பிரபல இயக்குநர் சேரன். கடந்த சில நாட்களாக இப்படத்தின் இடைவேளை சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டன. அப்போது சோகமயமான காட்சியில் மிகவும் யதார்த்தமாக நடித்த சேரனைப் பாராட்டிக் கைதட்டிய ஆயிரக் கணக்கான பொதுமக்கள், இப்போதே அவருக்கு ரசிகர் மன்றம் தொடங்க அனுமதி கேட்க ஆரம்பித்துவிட்டனர். இதையெல்லாம் பார்த்த சேரன் உணர்ச்சிவசப்பட்டு அழுதுவிட்டார்.

## சிரிக்க நீங்க ரெடியா?

படிப்பறிவற்ற ஒருவர் முல்லாவிடம் வந்து பக்கத்து ஊரில் உள்ள தன் உறவினருக்குக் கடிதம் ஒன்று எழுதித் தருமாறு கேட்டார்.

'மன்னிக்க வேண்டும். என் கால் வலிக்கிறது. அதனால் கடிதம் எழுதித்தர முடியாது' என்றார் முல்லா.

'கடிதம் எழுதுவதற்கும், கால் வலிப்பதற்கும் என்ன சம்பந்தம்?' என்று வியப்போடு கேட்டார் வந்தவர்.

'என் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். எவராலும் அதைப் படிக்க முடியாது. எழுதிய என்னால் கூடப் படிக்க முடியாது. நீ சொல்லும் கடிதத்தை நான் எழுதி முடித்தாலும் 'எழுதியதைப் படியுங்கள்' என்று நீ கேட்பாய். அப்பொழுது நான் உன்னையும் அழைத்துக் கொண்டு அதை வாசிக்கத் தெரிந்த ஒருவரைத் தேடி ஊரெல்லாம் அலைய வேண்டியிருக்கும். அப்பொழுது என் கால் வலிக்காதா?' என்று வினவினார் முல்லா.

கடிதம் எழுதிக் கேட்டு வந்தவர், வாயடைத்துப்போய் பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டார்.

## கொத்து ரொட்டி



ரவி கருணா

| | |
|---|---|
| வயது | : சவால் விடும் வயது |
| பொழுது போக்கு | : மேடத்தைச் சீண்டுவது |
| வாய்விட்டுச் சிரிப்பது | : ஸ்ரீமணியைப் பார்த்து |
| கற்ற வித்தை | : துண்டுகள் இருக்கும் லேடீஸ் கைப்பைகளை கண்டுபிடிப்பது |
| அஞ்சுவது | : நீல வர்ண பாதாள உலகக் கோஷ்டிக்கு |
| அஞ்சாதது | : துண்டிக்கப்பட்ட பிணங்களின் தலைகளுக்கு |
| பிடித்த படம் | : நான் அடிமை இல்லை |
| பிடித்த பாடல் | : அல்லி ராணியே எனக்கு கப்பம் கட்டு நீ......... |
| பிடித்த பழமொழி | : பெண் புத்தி பின் புத்தி |
| எழுதப்போகும் சுயசரிதை | : ஜனாதிபதிகளை ஆத்திரமூட்டுவது எப்படி? |
| கூறவிரும்புவது | : மேடம்... பதவியிலிருந்து என்னை தூக்குவதற்கு முன்னாடி உங்க பதவியை காப்பாத்திக்க வழியைப் பாருங்க... |

கற்பனை: சுபி

## இடர்தான் நீங்குமா

– காத்தான்குடி அனு –

பிறந்தது நானும் மண்ணில்
பிழையென ஆகிப் போச்சு!
நிரந்தரத் தொழிலு மில்லை
நீர்த்துளி கண்ணில் கொள்ளை!
இரந்திடாக் குறைதான் மிச்சம்
இல்லையே பணமும் சொச்சம்!
பரந்திருக் கிறது பஞ்சம்
பசியுடன் நானும் தஞ்சம்!

வந்தது 'பேர்த்டே' யுந்தான்
வசதியோ கையில் இல்லை!
நொந்திருப் பார்நண் பர்கள்
நிலையினை என்ன சொல்ல?
எந்தநே ரங்கூ டத்தான்
என்னிடம் காசு தங்கா
மந்திரம் என்ன வாமோ?
மடையனோ ஐயோ நானும்?

கடன்களோ இலட்ச மாச்சு
கவலையால் இளைத்தும் போச்சு!
உடன்பிறந் தாரும் இல்லை
ஒவ்வொரு நாளுந் தொல்லை!
தொடர்கிற தரித்தி ரங்கள்
தூரவும் போவ தில்லை!
இடர்து நீங்கிப் பணமும்
என்கரம் சேர்வ தென்றோ?

## நோகுதே நெஞ்சம்

பலரதும் கண்ணீர் துடைத்த அருளாசான் அவர்கட்கு,

எனக்கு வயது 18. நான் க.பொ.த உயர்தரம் கலைப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறேன். மிகவும் வசதியான குடும்பம் எனது. என்னுடைய தந்தை கொழும்பில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். ஒரு வாரம் பகலிலும் மறு வாரம் இரவிலும் அவருக்கு வேலை. அவர் கொழும்புக்குப் போனால் ஒரு வாரத்திற்கொரு முறை அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை தான் வீட்டுக்கு வருவார்.

எனது தாய் வயதானவர். தந்தை கொழும்புக்குப் போனால் நானும் தாயாரும் மட்டுமே வீட்டில்.

இரவு நேரங்களில் நான் கண் விழித்துப் படிப்பதுண்டு. ஆனாலும் தாய் தூங்கிவிட்டால், அதற்குப் பிறகு தனியே இருந்து படிப்பதற்கு மிகவும் பயமாக இருக்கும். எனது தந்தை வீட்டில் இருக்கும் போது நான் படித்து முடியும் மட்டும் அவர் விழித்திருப்பார். அதனால் பிரச்சினையில்லை. ஆனால் வயதான தயார் அப்படியில்லை.

சில வேளைகளில் நான் படித்து முடியும் மட்டும் விழித்திருங்கள் என்று தாயாரிடம் சொன்னால் 'உன்னாற் படிக்க முடிந்தால் தனியே இருந்து படி; இல்லையென்றால் போய்த் தூங்கு!' என்று சொல்லிவிட்டு அவர் படுத்துவிடுவார். எனவே அவர் தூங்குவதோடு நானும் தூங்கிவிடுவேன்.

அடுத்த வருடம் பரீட்சை. எப்படியும் கண் விழித்துப் படிக்க வேண்டும் என்ற தாகம் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது.

எங்கள் வீட்டின் மேல் மாடியில் வெளியூர் மாணவன் ஒருவன் தங்கிப் படித்துக் கொண்டிருக்கின்றான். அவனும் என்னைப் போல் அடுத்த வருடம் பரீட்சை எழுதுபவன். எனவே வேறு சகோதர, சகோதரிகள் இல்லாத நான் அவனோடு சேர்ந்து படிக்கலாமென முடிவெடுத்தேன்.

ஒரு நாள் அவனிடம் என் விருப்பத்தைச் சொன்னேன். அவ



னும் சம்மதித்தான். நாங்கள் இருவரும் ஒன்றாய்ச் சேர்ந்து படித்து வந்தோம். படித்து முடித்த பின் அவன் அவனது அறையிற் படுத்துக் கொள்ள நான் எனது அறைக்குப் போய்த் தூங்கிவிடுவேன்.

இவ்வாறு ஒரு வாரம் கழிந்தது. அதன் பிறகு ஒருநாள் அந்த மாணவன் "நானும் உங்களது அறையில் நித்திரை செய்யலாமா?" எனக் கேட்டான். இதுவரையில் நல்ல குணமுடையவனாக நடந்து கொள்ளும் அவனைப் பற்றி வித்தியாசமாக எதுவும் எண்ணாமல், நானும் சரியென்றேன். இதனால் எனது அறையிலேயே அன்று அவன் படுத்துக் கொண்டான்.

இடையில் நான் நித்திரை விட்டு எழுந்தபோது முழு நிர்வாணமாகக் கட்டிலிற் கிடந்தேன். அதன் பின்னர்தான் எனது கற்பு சூறையாடப்பட்டதை உணர்ந்தேன். நல்லவனாக நடித்து அவன் என்னை ஏமாற்றிவிட்டானென்பதை அறிந்து அழுதேன். என் அழுகையைக் கண்ட அவன் "போயும் போயும் இதற்கு அழுகிறீர்களே. நான் உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன்!" என்றான். நானும் அழுகையை நிறுத்திப் பேசாமல் மீண்டும் உறங்கிவிட்டேன்.

விடிந்த போது அவனைக் காணவில்லை. அதன் பின் அவன் எங்கள் வீட்டுப் பக்கமே வரவில்லை. பெட்டி படுக்கையோடு எங்கோ போய்விட்டான்.

ஐயா! பரீட்சை முடிந்ததும் எனக்குத் திருமணம் நடைபெற உள்ளது. என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் கணவர் நான் கற்பிழந்தவள் என்பதைக் கண்டுபிடித்து விடுவாரோ என்று எண்ணி ஒரே பயமாக இருக்கிறது. 24 மணித்தியாலமும் பய பீதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். தற்கொலை செய்து கொள்ளலாமா எனவும் அடிக்கடி யோசிக்கிறேன்.

ஐயா! தயவுசெய்து உங்கள் மேலான ஆலோசனையை எனக்கு வழங்குமாறு வேண்டி, இக் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அவனுடன் தூங்கியவள்,
(24.07.2002.)

## ஆலோசனை : அருளாசான்

அன்புள்ள சகோதரி!

எந்த ஒரு மூடப் பெண் கூடச் செய்யாத ஒரு காரியத்தைச் செய்துவிட்டு இப்போது மூக்கால் அழுதபடி என்னிடம் ஆலோசனை கேட்டிருக்கிறீர்களே, உங்களை என்ன செய்வது?

வீட்டில தனியாக உட்கார்ந்து படிப்பதற்குப் பயப்பட்ட நீங்கள் அந்த மாணவனோடு ஒன்றாகப் படித்தது வரை தப்பு இல்லை. ஆனால் ஒன்றாகப் படுப்பதற்குப் பயப்படாத காரணம் என்ன?

க.பொ.த உயர்தரம் படிக்கும் ஒரு பெண்ணுக்கு, அந்நிய ஆடவன் ஒருவனுடன் ஒரே அறையிற் தூங்குவது தவறென்று தெரியாமற் போய்விட்டதா? அவனுடன் ஒரே அறையில் இரவைக் கழிப்பதற்கு எப்பொழுது நீங்கள் விருப்பங் கொண்டீர்களோ, அப்பொழுதே நீங்கள் உங்கள் மனதாற் கெட்டுப் போய்விட்டீர்கள் என்றுதான் நான் கூறுவேன்.

உங்கள் ஆடைகளைக் களைந்து, உங்களோடு உடலுறவு கொள்ளும் வரை நீங்கள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்ததாகச் சொல்வதை என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. அப்படியும் ஒரு பெண் உணர்வற்றுத் தூங்குவாளா? புதினம்தான்!

ஒருவேளை, உங்களுக்கு ஏதாவது மயக்க மருந்து தந்து, உங்கள் மயக்க நிலையில் அவன் தன் கைவரிசையைக் காட்டிவிட்டானோ, என்னவோ!

சரி... இனி அழுதென்ன பயன்? விடயத்திற்கு வருவோம்!

நீங்கள் கற்பிழந்தவர் என்பதை உங்கள் வருங்காலக் கணவனால் மட்டுமல்ல, எந்த ஒரு நபராலும் கண்டுபிடிக்கவே முடியாது. எனவே திருமணத்தைப் பற்றிய எவ்வித அச்சமுமின்றி, தைரியமாக இருங்கள்.

தங்களையும் அறியாமல் நடந்துவிட்ட இந்தச் சம்பவத்திற்காக இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள். தங்களை மணம் முடிக்கும் கணவரிடம் இது பற்றி மூச்சு விடாதீகள். அதற்குப் பதிலாக உங்கள் உயிரளவு அந்தக் கணவனை நேசித்து, அவருக்குப் பணிவிடை புரியுங்கள்.

இனிமேலாவது ஆண்கள் விடயத்தில் அப்பாவியாக இராது, கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கப் பாருங்கள்.

கடவுள் உங்களுக்குக் கருணை செய்வாராக!

## தூறல்...

*நூர்ஷிதா மர்சூர், பாண்டிருப்பு.*

வித்தியாசங்கள் என்ன? மூளைக்கு வேலை முடியுமா, சொற்குளித்தல் போட்டி என்பன சுவாரஷ்யமாக அமைந்துள்ளன. இடியை வாசித்தால் நேரம்போவதே தெரிவதில்லை. அபிமான இடிக்குப் பாராட்டுக்கள்.

*முஷர்ரீபா மன்ஸூர், கண்டி.*

இடி சுமந்து வரும் அத்தனை ஆக்கங்களும் சுப்பர். நோகுதே நெஞ்சம், காத்திருக்கிறேன் ஆகியவை மிகவும் சுவையான விடயங்களாகும். முற்றுப்பெற்ற வண்ணக் கண்ணீர் என் இதயத்தையே நனைத்திருந்தது. 'இடி' மேலும் வளர்ச்சி பெறவாழ்த்துக்கள்.

*எம்.மோகன், கம்பளை.*

நான் "இடி" பத்திரிகையை ஆரம்பம் முதல் வாசித்துவரும் வாசகன். முதலாவது இடியை விட தற்போது வெளிவரும் "இடி" பத்திரிகைகள் முற்றிலும் வேறுபட்ட விதத்தில் வெளிவருகிறது. இடியில் தொடர்கதைகள், சிறுவர் பகுதி, பேனா நண்பர் பகுதி, அரசியல், சினிமா, வைத்தியம், மாதர் பகுதி, கேள்விபதில், இலக்கிய பக்கம், கதைகள், ஆடுகளம், கவி முழக்கம், மின்னல் பகுதி, சோதிடம், அலைகடலுக்கு அப்பால், வண்ணங்கள் பகுதி, இளைய வானம் போன்ற விடயங்கள் மிகவும் நன்றாக உள்ளது. உண்மையிலேயே இப்போது வெளிவரும் பத்திரிகைகளை விட முதல் இடத்தில் உள்ள ஒரே பத்திரிகை "இடி" என்றுதான் சொல்லவேண்டும்.

*சு.அ.கா.நியாஸ், புத்தளம்.*

என் கண்மணிகள் போல் இடியை ஒவ்வொன்றும் சேகரித்து வைத்துள்ளேன். இடி தாங்கிவரும் அம்சங்கள் யாவும் புதுமையிலும் புதுமை. இடி என்கரம் கிடைக்கப் பெறாவிட்டால் இடி விழுந்ததாய் சோகத்தில் ஆழ்ந்துவிடுவேன். இவ்வேளை சொற்குளித்தல் போட்டிக்குரிய பகுதியை தபால் அட்டையில் கத்தரித்து விண்ணப்பத்தை முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புமாறு கேட்டுள்ளீர்கள. அதுவே என் உடலிலிருந்து உயிரை பிரிப்பதாக நான் உணர்கிறேன்.

*-வை.பவானி, கட்டுக்கரைச்சேனை-01.*

சவால்களை எதிர்கொண்டு சமூக விரோதிகளுக்கு சவுக்கடி கொடுப்பது 'இடி' பத்திரிகைதான். இடியின் ஒவ்வொரு இதழும் சுவாரஷ்யமாக அமைந்திருக்கின்றன. 'இடி' எனும் மலர் வாடாதிருக்க என் வாழ்த்துக்கள்.

# இமயம் தாண்டும் இணையற்ற கிரிக்கெட் வீரர்கள்

## டொன்பிரட்மன் (1908 – 2001)

தொடர் 02





**த**லைமுறைகள் வென்ற வெற்றியாளன் டொன் பிரட்மன். கிரிக்கட்டின் வித்தகன், அகராதி என்றெல்லாம் இவ்வீரனை புகழாத நாவில்லை. அடக்கமான அற்புதமான வீரர். கிரிக்கட் துறையில் இவரால் உருவான விதிமுறைகள் ஏராளம். இவரை ஒரு முறையேனும் தன் பந்து வீச்சினால் ஆட்டமிழக்கச் செய்யவேண்டும் என்பதில் பலரும் தவம் கிடந்தனர். ஆடுகளத்தில் பிரட்மன் நுழைந்தால் எதிரணி வீரர்கள் சலிப்படைந்துவிடுவர். "றப்பர் கேஸ்" என நாம் அழைப்போம் அல்லவா? ஆனால் ரசிகர்கள் பாடு கூத்தும் கும்மாளமும் தான். பெண் ரசிகைகள் இவர் மைதானம் நுழையும் போதே முத்தமழை பொழிந்துவிடுவர். பலரின் தூக்கம் கலைத்த உலக நாயகனாக பிரட்மனின் இளமைக்காலம் கழிந்தது. இங்கு 669 இன்னிங்ஸில் 50,731 ஓட்டங்களைப் பெற்றார். 211 செஞ்சரிகள் பெற்றார். அதிகூடிய ஓட்டமாக 452 ஆட்டமிழக்காமல் பெற்றார். 107 தடவைகள் ஆட்டமிழக்காமல் தொடர்ந்தும் களத்தில் இருந்தார். 338 முதற்தர போட்டிகளில் 43 முறை ஆட்டமிழக்காமல் 28,067 ஓட்டங்கள், 117 செஞ்சரிகள். சராசரி 95.14. அதிகபட்ச ஓட்டங்கள் 452. இரண்டாந்தர போட்டிகள் 331 இல் 22,664 ஓட்டங்கள். அதிகூடிய 320 ஆட்டமிழக்காமல் பெற்றார்.

டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பின்பு இவர் மொத்தமாக 80 இனிங்ஸ்களில் ஆடினார். 10 தடவைகள் ஆட்டமிழக்காத சந்தர்ப்பங்கள் 334 அதிகூடிய ஓட்டங்கள். 6,996 ஓட்டங்கள். சராசரி 9.94. கடைசிப் போட்டியில் மேலும் 4 ஓட்டங்களை பெற்றிருந்தால் சராசரி 100ஐ அடைந்திருப்பார். 29 செஞ்சரிகளின் சொந்தக்காரன். பிரட்மனின் 29 செஞ்சரிகள் என்ற அதிகூடிய சாதனை கடந்த மாதம்தான் டெண்டுல்காரினால் முறியடிக்கப்பட்டது. பிரட்மனின் டெஸ்ட் சராசரியை எந்தவொரு வீரராலும் முறியடிக்க முடியாது என்பதே பலரின் வாதமாகும். முறியடிக்கமுடியாத சாதனைகள் பலவற்றின் உரிமையாளன் டொன் பிரட்மன்.

இந்த அற்புதமான வீரர் மிலேனிய ஆண்டில்தான் எம்மைவிட்டும் மறைந்தார். டொன் பிரட்மனின் நினைவாக அருங்காட்சியகம் கூட அவுஸ்திரேலியாவில் உள்ளது. ஒருமுறை மார்க் டெயிலர் முன்னூறு ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை டொன் பிரட்மனின் துடுப்பாட்ட சாதனையை முறியடிக்கும் அபூர்வமான வாய்ப்பை பெற்றிருந்தார். என்றாலும் காலம் உள்ளவரை அவுஸ்திரேலிய சாதனையாக டொன் பிரட்மனின் சாதனைதான் இருக்க வேண்டும் என மார்க்டெய்லர் கருதினார். எனவே சுய விருப்பத்தின் பேரில் மார்க்டெய்லர் அவ்வாய்ப்பை நழுவவிட்டார். அந்தளவுக்கு கிரிக்கட் உலகம் மதிக்கும் கிரிக்கட் மேதை டொன் பிரட்மன். அநேகமாக டொன் பிரட்மனின் அணியானது இரண்டாம் முறை துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பெறுவதில்லை. ஏனெனில் முதலில் அதிகூடிய ஓட்டங்களை எதிரணிக்கு வழங்கிவிடும். எனவேதான் டொன்பிரட்மன் குறைந்த டெஸ்ட் இனிங்ஸில் ஆடவேண்டிய நிலைக்குள்ளானார். இல்லாவிடின் டெஸ்ட் போட்டிகளில் எவருமே நெருங்கமுடியாத பெரும்சாதனையை அவர் படைத்திருப்பார் என விஸ்டன் சஞ்சிகை செய்தி வெளியிட்டிருந்தது. ஒரு நாளில் 300 ஓட்டங்களைப் பெற்றதும் பிரட்மனின் சாதனைதான். 10 தடவை இரட்டைச் சதம் அடித்துள்ளார். இரு தடவை முச்சதமடித்துள்ளார். கப்டனாக 15 டெஸ்ட்களில் தொடர் வெற்றிகளைப் பெற்றார். என்னதான் பிரட்மனின் சாதனைகளை எவர் முறியடித்தாலும் அவரது டெஸ்ட் சராசரியை எட்டிப்பிடிப்பதென்பது முடியாத காரியமாகத்தான் இருக்கும். படைவீரராக கடமைபுரிந்த காலத்தில் இவரின் உடல் பலத்தைப் பலரும் வியந்திருக்கின்றனர். இவர் சிட்னி ரேடியோ 2UE நிலையகத்தில் அறிவிப்பாளராக கடமை புரிந்திருக்கின்றார். ஓட்டப் போட்டிகளில் பல பதக்கங்களைப் பெற்றுள்ளார். அக்காலத்தில் மிகப் புகழ் பெற்ற பிலியட் வீரரான வால்ட்டர் லின்டரமுடன் பிலியட் போட்டிகளில் சிறப்பாக ஆடியுள்ளார். அற்புதமான இசைக்கலைஞன் பியானோ வாசிப்பதில் வல்லவர். தன் மனைவி மீது அதிக அன்பு கொண்டிருந்தார். மனைவி ஜெஸி இவர் பற்றிக் குறிப்பிடும் போது ஒரு பரிபூரண மனிதக் குணம் நிரம்பிய மனிதரோடு நான் குடும்பம் நடத்தியதை இட்டு பெருமை கொள்கிறேன் என்றார். பிற்காலத்தில் ஓய்வொழிச்சல் இல்லாமல் பிரட்மன் போட்டிகள் என்று சென்ற காலங்களில் ஜெஸிக்கும் இவருக்கும் இடையில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றியதுண்டு. கோல்ப் விளையாட்டில் இவரின் நுணுக்கங்களை தற்போதைய ஹிரோ டைகர் ஆட்ஸ் பெருமையுடன் கைக்கொள்கிறார். வேட்டையாடுவதில் வல்லவர் பிரட்மன். கங்காரு வேட்டையாடுவதை இவர் பொழுதுபோக்காகக் கருதியிருந்தார். டென்னிஸில் இவர் புலி. போலிங் விளையாட்டிலும் மல்யுத்தத்திலும் கொடிகட்டிப் பறந்தவர். விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றபின்தான் தெரிந்தது அற்புதமான ஒரு எழுத்தாளன் என்று. சகாப்தமாய் வாழ்ந்து மறைந்த டொன் பிரட்மன் பற்றி இன்றும் எத்தனையோ சுவையான அம்சங்களை எழுதலாம். விரிவஞ்சி முடிக்கின்றோம்.

அடுத்தவாரம் மற்றுமொரு வீரருடன் உங்களை சந்திப்போம்.


மனைவியுடன் பிரெட்மென்

## மெய்வல்லுனர் போட்டியில் சாதனை

ண்மையில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை 17 வயதுப் பிரிவின் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றதுடன் கூடுதலான வெற்றிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

திருகோணமலை மக்கேஸர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 24 கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய பாடசாலைகள் கலந்து கொண்டன.


மொத்தமாக பதினொரு(11) போட்டிகளில் கலந்து கொண்ட இக்கல்லூரி மாணவர்கள் 1 முதலாம் இடத்தையும், 2 இரண்டாம் இடங்களையும், 2 மூன்றாம் இடங்களையும், 2 நான்காம் இடங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளதுடன் எம்.எஸ்.எம்.பிர்னாஸ், எம்.எம்.எம்.றியாஸ், ஏ.ஆர்.எம்.நிம்னாஸ், ஏ.ஆர்.எம்.பஸ்லூன், ஏ.எஸ்.எம்.அஷ்ரஃப் ஆகிய மாணவர்கள் அகில இலங்கைப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரி வரலாற்றிலேயே அகில இலங்கைப் போட்டிக்குக் கூடுதலான மாணவர்கள் கலந்து கொள்வது இதுவே முதல் தடவை என்று கூறிய கல்லூரி அதிபர் அல்-ஹாஜ் ஏ.எம்.முஸ்தபா அவர்கள் கல்முனை கல்வி மாவட்டத்தில் 30 பாடசாலைகள் கலந்து கொண்ட போட்டிகளில் கூடுதலான வெற்றிகளைப் பெற்றுக் கொண்டதும் கல்முனை ஸாஹிராக் கல்லூரிதான் எனவும் தெரிவித்தார்.

-ஏ.எம்.நியாஸ்

# ஆடுகளம்

செய்யித் இர்பான் மௌலானா



## உலக சாதனை நோக்கி முன்னேறும் முரளி

**இ**ங்கிலாந்து சுற்றுப் பயணத்துக்கு முன்பிருந்தே இலங்கை அணிக்குள் கடும் பனிப்போர் நிலவுவதாகவும் அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இடையில் கடும் முறுகல் நிலை எந்நேரமும் வெடிக்கலாம் என இடி "இன்வஸ்டிகேசன்" செய்திகள் வழங்கியதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக முரளி பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றார் எனவும் குறிப்பிட்டிருந்கோம்.

தன் கிரிக்கட் குருநாதர் தரத்தில் மதிக்கும் முன்னாள் வீரரும் இந்நாள் அரசியல்வாதியுமான அர்ஜுனாவின் வேண்டுகோளை தட்ட முடியாமல் தனியார் ஊடகமொன்றில் உள்வீட்டுப் பிரச்சினைகளை போட்டுடைத்துள்ளார். முரளி மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்க விருப்பதாக கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. முரளியின் திறமைமிகு பந்து வீச்சின்றி இலங்கையணி சோபிக்கும் என்ற நம்பிக்கை இல்லாததால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கட்டுப்பாட்டுச் சபையும், விளையாட்டமைச்சும் கடுமையான முடிவுகளை எடுக்க முடியாத நிலையில் தவிக்கின்றது. உலக சாதனை நோக்கி முன்னேறும் சிறுபான்மையின வீருக்காக நாம் பிரார்த்திப்போம். முரளியும் நிதானப் போக்கில் மற்றவரின கருத்துக்களை அனுசரித்து இப்பிரச்சினையில் இருங்கு மீளவேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

## நான் ஓய்வு பெறுகின்றேன் என்னைத் தடுக்காதீர்கள்

–கிரஹம் தோர்ப்

**இ**ங்கிலாந்தின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரரான கிரஹம் தோர்ப் திடுமென கிரிக்கட் விளையாட்டில் இருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளார்.

எனது வயது 32. இன்னும் நான் ஆடிக்கொண்டிருந்தால் இங்கிலாந்து அணிக்காக ஆடுவதற்காக காத்திருக்கும் இளைஞர்களின் நிலை என்னாவது. கிரிக்கட்டில் இருந்து விலகுவது என்பது எனக்கு கஷ்டமான காரியம் என்றாலும் சகல விளையாட்டுக்களில் இருந்தும் ஒதுங்கி இயல்பு வாழ்க்கை நடாத்தவே நான் விரும்புகிறேன் என கிரஹம் தோர்ப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எனக்கு இரண்டு குழந்தைகள். திருமணம் முடித்த நாள் தொடங்கி இன்றுவரை எனது மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ எதுவும் செய்யாதது போன்ற குற்றவுணர்வில் இருக்கிறேன். அதேநேரம் நாட்டுக் கும், சரே அணிக்காவும், சக வீரர்களுக்காகவும் பல சந்தோஷங்களை வழங்கியிருக்கிறேன். குடும்ப வாழ்க்கை என்பது தெளிந்த நீரோடை போன்றது. அதில் நான் பல விதிமுறைகளை மீறி வாழ்ந்திருக்கிறேன். என் மனைவிக்கு நான் ஆடும் கிரிக்கட்டை விட என்னைத்தான் ரொம்பவும் பிடிக்கும். என் குழந்தைகள் இருவருக்கும் கிரிக்கட் வீரனாக இல்லாத கிரஹம் தோர்ப் என்ற தகப்பனைத்தான் பிடிக்கும். புகழ் பணம் நாட்டுப்பற்றுக்காக இது வரை நான் சாதித்த சாதனைகளும் சோதனைகளும் போதுமென்று நினைக்கிறேன். ஒரு நாள் ஆட்டங்களில் இனி நான் ஆடவே மாட்டேன். டெஸ்ட்டில் ஆடும்படி பல வற்புறுத்தல்கள். அதையும் பரிசீலிக்கவுள்ளேன். என் உடல் நலம் நன்றாகவும், நான் சிறப்பாகவும் இருக்கும் வேளை ஓய்வு பெறுவதே மரியாதையானது என நம்புகிறேன். இவ்வாறு கிரஹம் தோர்ப் தனது ஓய்வுக்கான காரணத்தை விளக்கிக் கூறினார். இவரின் திடீர் ஓய்வினை மீள் பரிசீலிணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு இவரது பல்லாயிரக்கணக்கான ரசிகர்களும், சக வீரர்களும் அடம்பிடிக்கின்றனர்.

தோர்ப் இதுவரை 77 டெஸ்ட் ஆடி 5109 ஓட்டங்கள் பெற்றுள்ளார். சராசரி 42. கடைசி டெஸ்டில் முதலாம் இரண்டாம் இன்னிங்ஸ்களில் முறையே 4, 1 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.



# சொற்குளித்தல் போட்டி -இல.11

**முடிவு திகதி 24~08~2002**

ஆழக் கடலில் மூழ்கி முத்தெடுத்தலுக்கு முத்துக் குளித்தல் என்பர் ஆன்றோர். இங்கேயும் ஒரு சதுரக் கடல் உள்ளது. இதில் மூழ்கி நீங்கள் சொற்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதனாலேயே இது 'சொற்குளித்தல் போட்டி' எனப்படுகிறது.

நடுவில் பெரிதாக இருக்கும் எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டே எல்லாச் சொற்களும் இருக்கும். இம்முறை நடுவிலுள்ள பெரிய எழுத்து "ந". உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் தரவுகளுக்கேற்ப அவ்வச் சொற்களைக் கண்டுபிடித்து எமக்கு எழுதி அனுப்புவதுதான் உங்கள் பணி. கேள்விகளுக்கான இலக்கத்தை எழுதி எதிரே விடையை மட்டும் எழுதினால் போதும்.

*உதாரணம் : 1. நகை*

முற்றிலும் சரியான விடையை எழுதுவோரில் அதிர்ஷ்டசாலியான வாசகருக்கு ரூ.500/- பரிசாகக் கிடைக்கும். பாராட்டுக்குரிய ஏனையோரின் பெயர் முகவரிகள் இடமிருக்கும் வரை பிரசுரமாகும்.

ஒருவர் எத்தனை போட்டிப் படிவங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு படிவமும் இங்குள்ள முகவரிக் கூப்பன் ஒட்டப்பட்ட தபால் அட்டையிலேயே அனுப்பப்பட வேண்டும்.

சரி போட்டிக்கு வருவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ப | ந் | ர் | ர | ம் |
| ய | த | ன் | ண் | கை |
| ங் | கை | சு | க | ன |
| த் | ப | **ந** | ம் | ங் |
| ண் | தி | ம் | வ | கூ |
| டு | ஞ் | ரி | தா | ன |
| ந் | ம் | ண் | க | ல் |

*தரவுகள் :*

01. பெண்கள் விரும்பி அணிவது.
02. பூந்தோட்டம்.
03. இயேசு பிறந்த தினம்.
04. பாம்பின் பல்லில் உள்ளது.
05. விரலுடன் இணை பிரியாதிருப்பது.
06. மத்தியானம்.
07. கண்.
08. கால் உள்ள கடலுணவு.
09. கப்பல் நகராமல் இருக்க நீருக்குள் இறக்குவது.
10. சிநேகிதன்.
11. பல்லவரின் சின்னம்.
12. இளம் பெண்.
13. தந்திரமான மிருகம்.

*அனுப்ப வேண்டிய முகவரி :*

**சொற்குளித்தல் போட்டி ~ இல.11**
**மே/பா இடி**
**417/2, Galle Road,**
**Colombo-03.**

## சொற்குளித்தல் போட்டி இல – 08 இற்கான சரியான விடைகள்

| | | |
|---|---|---|
| 01. வலை | 02. வயது | 03. வலம்புரி |
| 04. வட்டி | 05. வல்லாரை | 06. வல்லூறு |
| 07. வயோதிபம் | 08. வணங்காமுடி | 09. வல்லரசு |
| 10. வங்கி | 11. வரி | 12. வதந்தி |

## சொற்குளித்தல் போட்டி இல–8 இல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**த.தயாநந்தி**
இல164, 1ம் குறுக்குத் தெரு,
வவுனியா.

### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்:~

01. எஸ்.ஏ.சி.நியாஸ், நஜாத் ஸ்டோர்ஸ், புத்தளம்.
02. ஜெயந்தி சிதம்பரம், 5ம் ஒழுங்கை, புத்தளம்
03. எம்.என்.எப்.நப்லா, கொட்டாரமுல்லை.
04. வே.கணேஷ், கண்ணாட்டி, பூவரசம்குளம்.
05. எஸ்.எச்.முஜீபுர் ரஹ்மான், வவுனியா.
06. ஆ.விமலராஜினி, களுவாஞ்சிக்குடி.
07. ஏ.எம்.சிராஜ் முஹம்மத், பொத்துவில் 02.
08. என்.எம்.ரம்ஸின், அட்டாளைச்சேனை 07.
09. ஏ.எஸ்.எம்.பௌமி, கொழும்பு 10.
10. க.அனுஷா சிவப்பிரியா, பாம்காடன், இரத்தினபுரி.
11. கே.மேஷாக் பிறேம்சாந்த், எழுத்தூர், மன்னார்.
12. என்.சிவலிங்கம், கல்முனை 01.
13. புஸ்ஹரா பிஸ்றுன், கொகிலகெதர, குருநாகல்.
14. எம்.எம்.அறபாத், சாய்ந்தமருது 02.
15. அஸ்மியா அஷ்ரப், சாய்ந்தமருது 07.
16. இ.நாகபூசணி, பாண்டிருப்பு 01, கல்முனை.
17. திருமதி.சங்கீதா தர்மரஞ்சன், கோமாரி 01.
18. எம்.பி.எம்.சமீர், 45 ராகுல வீதி, மாத்தறை.
19. எஸ்.எல்.நதீர், அக்கரைப்பற்று.
20. எம்.எஸ்.ஜலீலா, தம்பேத்தனை, ஹப்புத்தளை.
21. ஆ.அனுஷியா, எபல்மோறல், அக்கரப்பத்தனை.
22. செல்வி.எம்.சத்தியமலர், பண்டாரவளை.
23. முத்துசாமி பரந்தாமன், வெளிமடை.
24. கே.அரசேஸ்வரன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
25. எம்.டீ.அஸ்லம், பெண் பாடசாலை வீதி, ஏறாவூர்.
26. ஞா.விராஜ், 5E காலி வீதி, தெஹிவளை.
27. ஈ.நாகேஸ்வரி, ஓ.ஆர்.சி காம்ப், பேசாலை, மன்னார்.
28. நிஸ்பானு நிஸார், சுங்காவில.
29. எஸ்.நீரஜா, 14/37 பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.
30. கா.சுபாஷ், தரவளை, டிக்கோயா.

# இலக்கங்கள் பூர்த்தி செய்யும் இலட்சியங்கள்! ~ 40

## விவாகப் பொருத்தங்களும் மணவாழ்க்கைக்கான குறிப்புகளும்

***பொருத்தங்கள்:*** 1 எண்ணின் கீழ் பிறப்பவர் தன்னிஷ்டப்படி நடப்பவராதலால் 1 எண்ணின் கீழ் பிறந்தவரை மணப்பது விசேஷமல்ல. பிடிவாதம் எவ்வளவு பெரிய மனஸ்தாபத்தில் முடியுமோ! 2, 4, 1 திகதிகளில் பிறந்தவரை மணக்கலாம். 8 எண் குறிக்கும் திகதியில் பிறந்தவரையும் மணக்கலாம். இப்படி இல்லாவிடில் கூட்டு எண்ணுக்குப் பொருத்தமான திகதியில் பிறந்தவரை மணக்கலாம். 1 எண்ணில் (திகதி மாத்திரம்) பிறப்பவருக்கு, 4, 8 எண்ணின் கீழ் பிறப்பவர்கள் அடங்கி நடப்பார்கள். 1 எண்ணும் 4 எண்ணும் காந்தமும் இரும்பும் போல; 1 காந்தம், 4 இரும்பு, மிக அன்னியோன்ய தம்பதிகளாக வாழ்வர். 8-ந் திகதியில் பிறந்தவரை மணந்தாலும் சுகமும் சௌக்கியமும் உண்டு. ஏனெனில் 8 எண்காரர் 1 எண்ணுடையவரை இதய பீடத்தில் வைத்துப் போற்றுவர். சொல்லுகிறபடியெல்லாம் நடந்து திருப்திப்படுத்துவார்கள். 1 எண்காரரும் 8 எண் உடையவரை ஆதரவுடன் போற்றுவர். கொடி கிளையைப் பற்றிப் படருவதுபோல் 8 எண்காரர் 1 எண்காரருடன் வாழ்வர். பொதுவாகவே 1 எண் சூரியனைக் குறிப்பதால் இவர்களது விவாக வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படுவது சகஜமே. மனைவியரை இழத்தல், ஸ்திரீயானால் புருஷனை இழத்தல் உண்டு எனலாம். ஆனால் முகூர்த்த தினம் அதிர்ஷ்டகரமானதாக இருந்தால் இப்பலன் நடக்காதபடி நிச்சயம் செய்யமுடியும். துரதிர்ஷ்ட தினத்தில் விவாகம் நடந்தால் பலன் சீக்கிரமே நடைபெறக்கூடும். 1 எண் உடையவர்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டு. எல்லா சுகங்களும் உண்டாகும். எண்ணின் பலன் அதிகரித்து பிரகாசம் விருத்தியானால் மனைவியரை அது ஓரளவு பாதிக்கும்.

1 எண்ணுடையவர் 3, 5, 6 எண்களில் பிறந்தவர்களை மணந்தால் சுகமாக வாழ்வர். ஒருவரையொருவர் காதலிப்பர். கடந்த 12 வருஷங்களாக ஆயிரக்கணக்கான காதல் வசப்பட்டவர்களைக் கண்டிருக்கிறேன். அவர்களது எண்களைக் கவனித்ததில் இந்த உண்மையைத்தான் அறிந்தேன். காதல் சரீரக் கவர்ச்சியையே கொண்டது. ஒருவருக்குத் தன்னைப் போன்றவர்களையும், தனக்கு ஒத்தவர்களையும் காணும்போதுதான் காதல் உண்டாகிறது. கதைகளில் அழகானவர்களாகக் காதலர்களை வர்ணிப்பார்கள். அது கதைதான், வாழ்க்கையிலோ அழகற்றவர்கள்தான் அதிகமாகக் காதலில் ஈடுபடுவதைக் காண்கிறோம். அழகு வேறு, சரீரக் கவர்ச்சி வேறு என்பதைக் கவனிக்கவும். இது போதுமானது. இனி உங்கள் ஆராய்ச்சியைத் தொடங்கலாம்.

2 எண் குறிக்கும் திகதிகளில் பிறக்கிறவர்கள் 7 எண் உடையவர்களையே மிகவும் விரும்புவர். ஒருவருக்கொருவர் கவர்ச்சி இருக்கும். சற்புத்திரர்களைப் பெற்று வாழ்வர். 3, 6, 4, 8 எண்களில் பிறந்தவர்கள் இவர்களை சீர்திருத்துவார்கள். 2 எண் உடையவர் ஆணானால் 7 எண் உடைய பெண்ணை மணக்கலாம்.

*(அதிர்ஷ்டம் தொடரும்.......)*

# இந்த வாரம் எப்படி?



**11-08-2002** *தொடங்கி* **17-08-2002** *வரைக்கும்*

*சோதிட மனோதத்துவ ஆலோசகர்* **பி.கே.சாமி கங்காதரன்**

### – மேடம் –
வருவாய் அதிகரித்தாலும், செலவுகளும் அதிகரித்த வண்ணமே இருக்கும். உடல் ரீதியில் அதிக கவனம் தேவை. குடும்ப சூழ்நிலையால் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும். அந்நியரின் உதவியால் பிரச்சினைகள் குறையும்.

### – இடபம் –
இதுவரை ஏற்பட்ட சிக்கல்கள் மறையும். புதிய தெம்பும் உற்சாகமும் பிறக்கும். உடல் ஆரோக்கியம், பொருளாதாரம் சிறந்து காணப்படும். நீண்ட நாள் திட்டங்கள் நிறைவேறும். புகழ்ச்சி சிறந்தோங்கும்.

### – மிதுனம் –
குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். திருமணத் தடைகள் அகலும். தொழில் வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். அரசாங்க அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். ஆரோக்கியத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

### – கடகம் –
மனதில் குழப்ப நிலை தோன்றும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். இருந்தபோதிலும் நண்பர்களுடன் கவனமாக பழகிக் கொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். புதுமனை வாங்குவதற்கான வாய்ப்புண்டு.

### – சிங்கம் –
திடீரென்று அதிர்ஷ்டங்கள் தேடிவரும். செல்வம், செல்வாக்கு உயரும். தொழில் வியாபாரத்தில் சிறிது மந்த நிலை காணப்படும். ஆரோக்கியத்தில் கூடிய கவனம் தேவை.

### – கன்னி –
அயலவர்களுடன் நிதானமாக நடந்து கொள்ளவும். அரசாங்க அதிகாரிகளின் உதவி கிட்டும். செலவுகள் ஓரளவு கட்டுக்கடங்கி இருக்கும். தல யாத்திரை செல்ல வாய்ப்புண்டு.

### – துலாம் –
சில சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் பழைய பிரச்சினை தலை தூக்கும். சிலருக்கு நண்பர்களின் உதவியினால் பிரச்சினைகள் ஓரளவு கட்டுப்பாட்டில் இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

### – விருட்சிகம் –
திடீர் வெற்றி வாய்ப்புகள் தேடி வரும். அந்நியோர் நட்பு கிட்டும். குடும்பத்தின் மத்தியில் கருத்து வேறுபாடுகள் அகலும். உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கப் பெறும். முடிவுகள் எடுக்கும்போது ஆலோசித்து எடுக்கவும்.

### – தனு –
மனதில் குழப்பநிலை தோன்றும். தொழிலில் மந்தநிலை காணப்படும். எதிர்பார்த்த காரியங்களை நிறைவேற்றுவது கடினம். குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றி மறையும்.

### – மகரம் –
உத்தியோகத்தர்களுக்குப் பதவியுயர்வு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும். ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். சொத்துக்கள் வாங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

### – கும்பம் –
அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிட்டும். ஸ்தல யாத்திரை செல்ல வாய்ப்புண்டு. எதனைச் செய்தாலும் சிந்தித்து செயற்பட்டால் சிறந்த முன்னேற்றமுண்டு.

### – மீனம் –
வேலைப் பளு அதிகரிக்கும். எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறுவது கடினம். இழுபறி நிலை தொடரும். உடல் ஆரோக்கியத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டும்.

# கவிதை முத்துக்கள்

### புனிதம் காத்திடும

நட்பில் மாற்றங்கள்
நம்பிக்கையில்லா
மனங்களுக்குத்தான்
உறுதியாய் உரிமையாய்
ஊன்றிய நட்புப்பாதத்தினை
தடம் மாற்றி
தாழ்த்திக் கொள்ளாதே
உன்னை
இருபால் இணைந்த இனிதான
நட்பினை
இழிவுபடுத்தி இம்சிக்காதே
ஆயுள் முழுவதும்
ஆட்கொள்ளும் உறவாய்
நட்பின் புனிதம்
நாளும் காத்திடு!

***–தேவி கணேசன்,***
*கலஹா.*

### அன்பு

மனங்களில் மலர்ந்து
மணம் வீசிடும்
மாசற்ற மலர்
பிரதிபலன் பாராது
பிறரிடம் கொண்டுள்ள
பிரிக்க முடியாத
பிணைப்பு
ஆத்மாவின் அந்திமம் வரை
அகன்றிடாத
அருமையான உணர்வு

***–எம்.எஸ்.நஸீஹா,***
*ஏத்தாலை.:*

### மாறலாமா?

மனதால் மணந்து
மனதுக்குள் மலர்ந்த
என் மொடல் அழகியே
மலரும் மணமும் மறையலாம்
நம் மனதில் மலர்ந்த
காதல் மட்டும்
மாறாது,
மறையவும் மாட்டாது...

***–ஞா.வதனராஜ்,***
*பாண்டிருப்பு 02.*

### பிரிவு

பாடித் திரிந்தோம்
பறவைகளாக
சுற்றித் திரிந்தோம்
மேகங்களாக
நேசித்துப் பழகினோம்
ஆழ்கடலைப் போல
எங்கிருந்தோ வந்து
வீசியது பிரிவுப் புயல்
நீயொரு கரையில்
நானொரு திசையில்

***–எஸ்.பிரியதர்ஷினி,***
*ஆமர்வீதி.*

### காதலிக்கு(ம்) கவிதை

ஒரு கவிதையாய்
உன்னை எழுதி
வைத்துக் கொள்கிறேன்
மீண்டும் மீண்டும்
உன்னோடு பேசுவதாக
நினைத்து!

***–அ.சுபாஜினி,***
*தம்பிலுவில் -01.*

### சம்மதிக்கின்றேன்

நீ...
மரணிக்கச் சொன்னால்
மறு பேச்சேயின்றி
சம்மதிக்கின்றேன்
ஆனால்...
உன்னை மறக்க மட்டும்
சொல்லாதே
மறப்பது என்பது
மரணிப்பதை பார்க்கிலும்
கொடுமையானது...

***–செ.சுசீலா,***
*பலாங்கொடை.*

### அறிவுரை

வார்த்தை முரண்பாடுதான்
வாழ்க்கையை
பிணக்காடாக்கின,
முரண்பாடுகள் முளையிட்டால்
விளைவது துன்பங்கள்தான்!
உனக்கு...
பிடிவாதம் முன்னிருப்பதால்
முன்னுக்கு வரமுடியாது!
முற்றிலும் அது இல்லையேல்
முதல் தரமனிதன் நீ!

***–தமிழ்ப்பிரியன்,***
*யாழ்ப்பாணம்.*

# இலக்கியப் பக்கம்

செ. யோகநாதன்

## முதுசொமாக...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறை உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றும் வதிரி. இ.இராஜேஸ்கண்ணன் எழுதிய 10 சிறுகதைகள் "முதுசொமாக..." என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

இந்தச் சிறுகதைத் தொகுதியில் நடமாடும் சிங்களக் கந்தப்பு, வீரசிங்கம், சாமந்தி மச்சாள், வல்லினாச்சி, விசுவப்பா, செல்லச்சிவம் மாமி, தெய்வானை, ஜானகி அக்கா, தியாகர், சனத் ஆகிய பாத்திரங்களுடன் நிக்ஷன் என்ற நாயும் மனதை விட்டு அகலாது உள்ளது.

கதை ஓட்டமும், பாத்திரப்


**-ரமணி-**

படைப்பும் தெளிவான நீரோடை போல் செல்வதால் எதுவித தடங்கலுமின்றி கதை முழுவதும் வாசகனின் மனதில் பதியும் வகையில் அமைத்து தனது கற்பனைத் திறனை வெளிக்காட்டியுள்ளார்.

"இளமை உதிர்ந்து போகும் நேரம்", "முற்றமெல்லாம் பால் வார்க்கும் நிலாவொளி", "காற்றுக் கூட காதைப் பொத்திக் கொண்டது", "தெய்வானை அப்புவாச்சியின் வார்த்தைகள் கிபீர் குண்டுகளாக என் இதயத்தினுள் வெடிக்கும்", "புகைப்படங்கள் கூட இல்லையென்றால் இந்த உலகத்திலே இரத்த உறவுகள் கூட முகம் தெரியாது முடிந்துவிடும்", "நிலைகளும் கதவுகளும் இடிக்கப்பட்ட நிர்வாண வீடு" போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் வாசகனைக் கதைக்குள் மூழ்கடிக்கும் விதமாகக் கையாளப்பட்டுள்ளன.

"மூன்றாம் தலைமுறை", "பித்து மனங்கள்", "மாரீசம்", "இடைவெளி" ஆகிய சிறுகதைகள் வெளிநாட்டுத் தொடர்புகளையும் அவற்றின் பாதிப்புகளையும் புடம்போட்டுக் காட்டுகின்றன. "மூன்றாம் தலைமுறை"யில் வரும் கந்தப்பு வாத்தியார் பேரப் பிள்ளைகள் தன்னை "அப்பையா" என அழைக்காமல் "கிறான்பா" என அழைப்பதால் ஏற்படும் சங்கடத்தை வெளிக்காட்டுகிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே வியாபாரம் செய்பவர்கள் தமக்குப் பிள்ளை இல்லாத போது சிங்கள அல்லது மலையகப் பிள்ளையைத் தத்தெடுத்து தனது சொத்துக்கு வாரிசாக்குவது வழமை. அக்குழந்தை அந்த முதலாளிக்குப் பிறந்தது என ஊரில் கதை பரவுவதும் வாடிக்கை. இதனையே "காவோலைகள்" என்ற கதையில் சிங்களக் கந்தப்புவாக வெளிப்படுத்தி இருக்கிறார் வதிரி



இ.இராஜேஸ்கண்ணன்.

"அப்பாவின் கிளார்க் சம்பளம் நான்கு பிள்ளைகளை வளர்த்து படிப்பித்து எடுக்கக் காணாது போய் துண்டு விழும் வேளைகளிலெல்லாம் குறை நிரப்புச் செய்யும் மத்திய வங்கியாக அந்தக் கிழடுகளின் வருமானமே இருந்து வரும் வழக்கம் அண்ணா வெளிநாடு செல்லும் வரை வாலாயமாகவே இருந்தது" என்பது "முதுசொமாக..." என்ற கதையில் வரும் கிளார்க்கின் ஏழ்மையைத் துலாம்பரமாக வெளிக்காட்டுகிறது.

குறி சொல்வதில் பிரபல்யமடைந்த மிருசுவில் காளி அம்மன் கோயில் இடம்பெயர்ந்து வடமராட்சி புளியடி அண்ணமார் கோயிலில் குறி சொல்வதாக வரும் வரிகள் மூலம் யுத்தம் காரணமாக மனிதர்களுடன் தெய்வங்களும் இடம்பெயர்ந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

"மனிதம் மட்டுமல்ல..." என்று சிறுகதை நிக்ஷன் என்ற பெயருடைய நாய் விமானக் குண்டுவீச்சுக்குப் பயந்து பங்கருக்குள் ஒளிவதன் மூலம் மனிதன் மட்டுமல்ல மிருகங்களும் விமானச் சத்தத்தைக் கேட்டால் பங்கருக்குள் பதுங்குகின்றன என்பதைக் கருப் பொருளாக்கி உள்ளார்.

தென் மராட்சியை நோக்கி இராணுவம் செல்ல, உயிர் தப்ப வடமராட்சியை நோக்கி தென்மராட்சி மக்கள் ஓடினார்கள். உறவினர், நண்பர்கள், வீடுகளில் இருந்தவர்கள் போக வசதியானவர்கள் பெரும்தொகைப் பணம் கொடுத்து வாடகை வீட்டில் தங்கினார்கள். வறுமையில் வாடும் குடும்பங்கள் அகதி முகாமைத் தஞ்சமடைந்தனர்.

அகதி முகாமில் தங்கியிருந்த உயர் சாதித் தியாகரின் மகளுக்கான சம்பந்தக் கலப்புக்கு கடைக்காரத் தம்பு தன் வீட்டில் வசதி செய்து கொடுத்தார். தம்பு தாழ்ந்த சாதி என்பதால் மாப்பிள்ளை வீட்டார் திருமணத்தை நிறுத்திவிடுகிறார்கள் என அகதி வாழ்விலும் சாதிப்பேய் இருப்பதை "அகதி அந்தஸ்து" என்ற கதை வெளிக்காட்டுகிறது.

யாழ்ப்பாணக் காவலரணில் கடமை புரியும் சிங்கள இராணுவ வீரனின் மன உணர்வுகளை "லீவு போம்" என்ற கதை அப்பட்டமாகத் தெரியப்படுத்துகிறது. யாழ்ப்பாணத்தைக் காக்கச் சென்ற இராணுவ வீரன் தனது வீட்டிற்குச் செல்ல லீவு எடுப்பதற்காக சிங்கள லீவு போம் இல்லாது திண்டாடுவதன் மூலம் சிங்கள இளைஞனின் மனநிலையை ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார்.

கைவசம் இருந்த இரண்டு சிங்கள லீவு போம்களைக் கையளித்தும் லீவு கிடைக்காது மூன்றாவதாக ஒரு லீவு போமை அனுப்பமுடியாது தவிக்கும் இராணுவவீரனின் மனநிலையை சிங்கள மக்கள் அறியும் வகையில் உள்ள இச்சிறுகதையை சிங்களத்தில் மொழி பெயர்த்தால் சிறப்பாக இருக்கும்.

மானுட உணர்வுகளை துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கும் வதிரி இ.இராஜேஸ்கண்ணன் இலங்கை தமிழ்ச் சிறுகதை உலகில் "முதுசொமாக..." விளங்குவார் என்பது திண்ணம்.

*வதி.ரீ.இ.இராஜேஸ்கண்ணன்,*
"சாத்வீக பிரஸ்தம்"
தனகத் தோட்டம்
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி,
விலை ரூபா 110/-



ஏ.எஸ்.எம்.நவாஸ் எழுதிய 'களத்தூர் முதல் தெனாலி வரை' நூல் வெளியீட்டு விழா பிரைட்டன் ஹோட்டலில் நடைபெற்றபோது முதல் பிரதியை புரவலர் ஹாஷிம் உமர் பிரதம அதிதி, அல்ஹாஜ் அஸீஸிடமிருந்து பெற்றுக் கொள்வதையும், விழாத் தலைவர் ராஜ ஸ்ரீகாந்தன், கௌரவ அதிதி செய்யது ஓமவுலானா, நூலாசிரியர் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படப்பிடிப்பு:- லியாகத் அலிகான்)*



**சமாதானம் 10**

ஆசிரியர்:- ஈழபாரதி மருதூர் வாணர்,

ஈழபாரதி மருதூர்வாணரின் குறுநாவல், மரபுக் கவிதை, புதுக்கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்ற மூன்று கவிதைகள், ஒலுவில் அமுதனின் நூல்கள் பற்றிய ஆய்வுகள் என்பன சஞ்சிகையை அலங்கரிக்கின்றன.

201/ஏ, அல்ஹம்றா வீதி,
மருதமுனை - 05.
விலை ரூபா 50/-

### புதிய வருகை




**கரும்பு**
ஜூலை 2002
எம்.ஸாலிஹ் அஸீம்,
23/1, ஜே.பி. வீதி,
புத்தளம்.
விலை ரூபா 20/-



**மல்லிகை**
ஜூலை 2002
ஆசிரியர்:-
டொமினிக் ஜீவா,
201 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
விலை ரூபா 20/-

# கண்கள் சொல்லும் கவிதைகள்

இவரது பல பாடல்கள் கண்கள் பற்றிய கதையைப் பேசி நிற்கின்றன.

நித்தியானந்தனின் மலையாளக் கவிதையான கண்களின் வகைகள் என்ற கவிதையிலே கவிஞர் கண்களை அழகாகப் பட்டியலிட்டுக் காட்டிச் சென்றுள்ளார்.

"நான் பார்த்திருக்கின்றேன்.." என்று தொடரும் கவிதையின் சில வரிகள் இவை.

ரோஜாவின் சின்னமான காதலுக்காக

உறுதி வாய்ந்த இதயக் கோபுரங்கள் மீது

பறக்கும் காதலியின் கண்கள்..." என்று ஒவ்வொருவருடைய கண்களைக் கொண்டும் சிறப்பாக கவிதை வடித்திருக்கிறார் கவிஞர்.

"இது ஒரு கவிஞனின் காதல்
விபத்துக் கவிதை -
காதல் சாலையில்
இரண்டு விழி வாகனங்கள்
நேருக்கு நேர்
மோதிக் கொண்டதில்
இரண்டு இதய
டிரைவர்களுக்கும்
காதல் மயக்கம்"

**~கார்த்திகா~**

இது கண்கள் சொல்லும் புதுக் கவிதை. வித்தியாசமான உவமையும் கூட. அண்மையில் அமெரிக்காவின் உலகவர்த்தக மையம் தாக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே. அந்த அனர்த்தத்தை பெண்ணின் கண்ணுக்கு ஒப்பிட்டு அத் தாக்குதலால் ஏற்பட்ட அழிவைவிட பேரழிவு ஏற்படுத்தியது அவளுடைய கண்களே என்கிறான் ஒரு காதலன்.

"ஒசாமா பின்லேடன்
தாக்குதலால்
இரு பெரிய மாடிக் கட்டிடங்கள்
மட்டும் தரைமட்டமானது.
பெண்ணே!
உன் கடைக்கண் பார்வையால்
வெடித்துச் சிதறுகிறது
எத்தனையோ இதயங்கள்
எப்போது நிற்கும் இந்தப்
பேரழிவு?"

காதலுக்கும் கண்களுக்கும் உள்ள முக்கியத்துவம் கண்களுக்கும் கவிதைகளுக்கும் இருக்கிறது என்றால் அது மிகையில்லை. அது பற்றி ஏராளமான கவிஞர்கள் சிறப்பாக கவியியற்றியுள்ளனர்.

இனி திரையிசைப் பாடல்கள் கண்கள் பற்றி என்ன பேசுகின்றன என்பதை நோக்குவோமா?. அலைகள் ஓய்வதில்லை படத்தில் வைரமுத்துவின் வரிகள் இவை. காதலியின் உறவை இப்படிச் சொல்கிறார்.

"விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவே"

உயிரில் கலந்த உறவுகளுக்




கெல்லாம் வழி அமைத்துக் கொடுத்தது விழிகளே!

கண்ணுக்கு கொள்ளையடிக்கவும் தெரியும் என்கிறார் இந்தக் கவிஞர். அப்படிக் கொள்ளையடித்தால் என்ன அர்த்தம். இதோ...

"கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் காதல் என்று அர்த்தம்." கண்கள் இருந்தால் கட்டாயம் கனவுகள் வரத்தான் வேண்டுமா? இல்லை கண்களில் வலிகள் இருந்தால் கனவுகள் வருகிறதாம். இதோ கவிஞரின் வேதனை மிகுந்த வரிகள் கண்ணில் ஒளி கொள்ளும் என்று சொன்ன வைரமுத்து இப்படியும் சொல்கிறார் "கண்ணுக்குள் நூறு நிலவா இது ஒரு கனவா" நூறு நிலாக்களின் ஒளி கண்ணுக்குள் தெரிகிறதாம். காதல் வந்தால் இதயம்தான் தொலைந்துவிடும் என அறிந்தோம். ஆனால் கண்ணும் தொலைந்துவிடுமா. கண்ணைத் தொலைத்துவிட்ட பெண் பாடுகின்றாள். "கண்ணாளனே எனது கண்ணை நேற்றோடு காணவில்லை. என் கண்களைப் பறித்துக் கொண்டு ஏனின்னும் பேசவில்லை" நேற்றுத்தான் அவனைப் பார்த்தாள் உடனேயே கண்களைப் பறித்துக் கொண்டு போய்விட்டான் அவன்.

*(தொடரும்....)*

# பொங்கும் தமிழில் புதுக் கவிதை

அல் அஸூமத்

KF

அவையிரண்டுக்கும் பொதுவாக நாம் ஒன்றைக் கூறலாம் :-

விமர்சகர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக ஆசிரியர்கள் படைக்கலாம்! அது ஆசிரியனின் திறமையைப் பொறுத்ததாகும்.

சரியான விமர்சனத்தின் ஆழப் போக்கையே நாம் மனத்திற் கொண்டு மேற்கண்ட கவிதையை நோக்குவோம்.

அவளின் உடலை நிலவுக்கு ஒப்பிடும் கவிஞர், அவள் உடுத்த வேண்டிய ஆடையை மேகத்துக்கு ஒப்பிடுகிறார். வறுமையான ஓர் அழகியைப் பற்றிய கவிதை இது. எடுத்த எடுப்பிலே பார்க்கும்போது படிமம் அழகாகவே காணப்படுகிறது. சற்றே கூர்ந்து கருத்தைப் பார்த்தோமேயானால் -

## கவிதை பற்றிய வழிகாட்டித் தொடர் 59

மேகம் மறைக்கும்போது நிலவின் ஒளி குன்றும். நிலவை ரசிக்க முடியாது. மேகம் மறைக்கப்பட்ட நிலவைவிட மறைக்கப்படாத நிலையில் தான் நிலவு ரசிக்கப்படுகிறது. அதைப் போல், அவள் ஆடை உடுத்தப்படாத நிலையில்தான் அழகாக இருக்கிறாள் என்றோ அப்போதுதான் அவள் ரசிக்கப்பட வேண்டும் என்றோ கவிஞர் பொருட்படுத்துகிறாரா? அப்படியானால், ஆடையின்றி அவள் இருப்பதைத்தான் கவிஞர் விரும்புகிறாரா? ஆசிரியர் அப்படிக் கருதவில்லை! ஆனால் அந்தக் கருத்து இங்கு விழுந்திருப்பதன் காரணம் அவர் சிறிது கவனம் தவறியதால்தான். எனினும் கவிதையின் பிற்பகுதியில் அவர்கள் எப்படி இருப்பதன் காரணமாக அவர்கள் விலை போகிறார்கள் என்று குறிப்பிட்டதன் மூலம், ஆசிரியரை அறியாமலே அவரது கவித்துவம் அவருக்குக் கைகொடுத்தது கவிதையிற் பிழையில்லை என்றும் வாதிட வைக்கிறது. பிற்பகுதி அவ்வாறு அமையாது விட்டிருந்தால், கவிஞரின் உள் நோக்கத்தில் சந்தேகம் விழுந்திருக்கும்!

இதை ஏன் இங்கு இவ்வளவு வலியுறுத்துகிறேன் என்றால், படிமம் சரியான முறையிற் கையாளப்படாவிட்டால் அது கவிஞரை விழுத்திவிடும் என்பதை வலியுறுத்தத்தான்.

*(தொடரும்......)*

# கதைகள்

# மெசினே மெசினே நீ வேண்டும்!

-காத்தான்குடி பாத்திமா-

படுக்கையில் பக்கம் பக்கமாகப் புரண்டு தூங்க முயற்சிக்கின்றேன். வாழ்க்கையில் ஏற்பட்ட சுமைகளினாலும் இழப்புத் துயரங்களினாலும் எனது நிம்மதியான தூக்கத்தை எப்போதே தொலைத்து விட்டிருந்தேன். எனினும் நடுநிசிக்குப் பின்னர் தூக்கம் சற்று என்னை ஆட்கொள்வதுண்டு. இதனால் ஸ"பஹ"த் தொழுகையைக் கூடத் தவற விடுவதுண்டு. எனினும் அந்தத்தூக்கம் கூட என்னை விட்டு நீங்கி விட்டதே.

எனது இருப்பிடமான ஒலுவிலில் இருந்து தினமும் காத்தான்குடி பிரதேச செயலகத்துக்குப் பயணம் செய்து "இலிகிதர்" கடமை செய்து வருகின்றேன். இன்று காரியாலயத்தில் வரவைப் பதிவு செய்யும் இயந்திரத்தைச் செயற்படுத்தப்போவதாக அறிவித்திருந்தார்கள். இவ்வளவு தூரப்பயணத்தில் நான் அந்த இயந்திரத்திற்குமுன் எப்படி எனது வரவைப் பதிவு செய்து கொள்ளப் போகின்றேன் என்ற கவலை மேலிட இரவுத் தூக்கத்தைத் தொலைத்து விட்டேன்.

"இஞ்சருங்கோ... பாங்கு கூடச் சொல்லியாகிவிட்டது. ஒ.்.ப்பிஸ"க்குப் போற ஐடியா இல்லப்போல..." என் இதயத்தரசி.. முழங்கினாள்.

"ஓண்டியம்மா, இன்டைக்கு நேரத்தோட போகணும். எங்கட ஒ.்.ப்பிஸில இன்டையிலிருந்து 'டைம் றெக்கோடிங் மெசின்' போடுறாங்க..... எல்லாத்தையும் கெதிபண்ணு" எனது அதிகாரம் என் மனைவியிடம் மட்டும்தான்.

"இஞ்சாருங்கோ, அப்ப இதுவரைகாலமும் உங்கட ஒ.்.ப்பீஸில மணிக்கூடு இல்லியோ? இன்டைக்குத்தானா சுவரில கொழுவப் போறாங்க" மனைவியின் அறியாமையும் அப்பாவித்தனமும் எனக்குச் சற்று நகைப்பை உண்டாக்கியது.

"மரமண்ட..... 'டைம் றெக்கோடிங் மெசின்' எண்டா மணிக்கூடு இல்ல. ஒ.்.ப்பிஸ"க்கு வாற போற நேரத்த எங்கட பேருள்ள கார்ட் மூலம் அது பதிவு செஞ்சி தரும். பொய் நேரம் போட ஏலாது..."

"அப்ப மாட்டிக்கிட்டீங்க... பத்தரை மணிக்குப் போய் ஒம்பதெண்டு எழுதறதுதானே உங்கட வேல... பத்து வருஷமா காத்தான்குடி எண்டு வேல செய்யுறீங்க. நம்முட ஊருக்கு ஒரு ட்ரான்ஸ்பர் எடுக்க எம்பீட்டப் போங்கண்ணு எத்தினதரம் உங்ககிட்ட சொல்லிட்டன். காத்தான்குடியில அப்பிடி என்ன சொகத்தக் கண்டீங்க.."

"பேத்தனமா கதையாத, நினைச்ச உடன ட்ரான்ஸ்பர் தர எம்பியென்ன உன்ட வாப்பாவா... விட்டுத் தள்ளு"

பரபரக்க ஓடிவந்து குட்டி வேன் ஒன்றில் ஏறிக் கொள்கின்றேன். அது நகர்ந்து ஊர்ந்தது. ஸீற் இல்லை. அடுக்கிய நெல்மூடைகளுக்கு மேல் குந்திக் கொள்கின்றேன். சரியாக ஏழு மணியைக் காட்டியது கல்முனை பஸ் ஸ்டான்ட்.

காலையில் எதுவுமே சாப்பிடவில்லை. சாப்பாடே இல்லை. இரவு மிஞ்சிய சோற்றை எனது இல்லறக் கேடயங்களான நான்கு குழந்தைகளுக்கும் தண்ணீரும் உப்பும் இட்டு எனது சகதர்மினி பங்கு வைப்பாள்.

சேர்ட் பாக்கெற்றில் ரூபா இருபது மட்டும் என்னைப் பார்த்துச் சிரித்தது. வயிறே உன்னை வஞ்சிக்கிறேன்... அல்சரே உன்னை வரவேற்கிறேன். காரணம்... நானொரு ஏழைக் குமாஸ்தா. நான் செய்கின்ற இந்த இலிகிதர் தொழிலை எனக்குப் பின் ஏழேழு தலைமுறைகளும் பெறக்கூடாது என்பது எனது பிரார்த்தனை.

நாட்டு நிர்வாகத்திலே முதுகெலும்புகளான இலிகிதர்கள் வெறும் கௌரவப் பிச்சைக்காரர்களே. சேவைக்கும் உடல் உள உழைப்புக்காகவும் வளர்க்கப்படும் கால்நடைகள். இலிகிதர்கள் மனிதர்களாகவே மதிக்கப்படுவதில்லை. எட்டு மணி நேர உழைப்பில் எட்டாத உயரக் கடன்பளுவில் திளைக்கின்ற கௌரவமான கால் நடைகள். எடுக்கின்ற சம்பளம் பதினைந்து நாளைக்கூடத் தாண்டாத... போதாக்குறைக்கு பொருளாதாரம் ஒருபுறமிருக்க அவர்களது உளரீதியான சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் 'டைம் றெக்கோடிங் மெசின்' வேறு.

கல்முனையிலிருந்து வேறு பஸ் பிடிக்கவேண்டும். கிடைத்தது எயார் பஸ்... இல்லையில்லை இறவல் பஸ். ஏறி அமர... பஸ்ஸ"ம் நகர.... கருவாட்டுக் கூடை ஏற்றப்படுகிறது. அதிலொரு பத்துநிமிடம் கழிகிறது. இடையில் நீலாவணையில் சாமான் பெட்டி.

செக்கிங் பொயின்ட் இல்லாவிட்டால் என்ன..., இருக்கவே இருக்கிறது ஏற்றமும் இறக்கமும்.. பஸ் நடக்கிறது. என் மனமோ பதறுகின்றது. இன்று டைம் றெக்கோடிங் மெசின் ஆரம்பிக்கும் நாள்... பிந்திவிடுவேனோ...

இடையே களுதாவளையில் வெங்காயக்கூடை ஏற்றப்பட, ஏற்கனவே இருந்த கருவாட்டுக் கூடையின் நறுமணத்துடன் - வெங்காய மணமும் சேர்ந்து பலன்ஸ் பண்ணுகிறது.

இடையில் ஸ்கூல் மாணவர்களின் சல்லடை. தொடர்ந்து வெற்றிலைக் கூடை.... ஆண்டவனே என் மனம் பதறுவது இந்த சனநெரிசலில் உனக்குக் கேட்கவே இல்லையா?

கிளார்க் வேலையென்றால் பதறலும் சிதறலும் தானா... இப்போது வேலைப்பளுவுக்கு மத்தியில் காலாறக் கையாற அனுபவித்த சிறிதளவு சுதந்திரமும் இந்த 'டைம் றெக்கோடிங் மெசினால்...

கின்னஸ் சாதனையென்று... பெயர் பொறிக்கப் போவதான பெருமிதத்துடன் காத்தான்குடியை அடைகின்றேன். கடிகாரத்தைப் பார்த்துப் பார்த்து கடிகாரமும் தேய்ந்து பார்வையும் ஓய்ந்து.....

ஓடிவருகின்றேன் என்ன சாதனை புரிய... டைம் றெக்கோடிங் மெசினில்... சரியான நேரம் பதிய... நேரம் ஒன்பதுக்கு மூன்று.. ஒன்பதுக்கு இரண்டு... மனக்கணக்கு-

நடுங்கும் கரங்களால் எனது கார்ட்டைப் போடுகின்றேன்... "கடக்" சத்தம் இழுத்துப் பார்க்கின்றேன். அழகான சிவப்பு மையால் ஒன்பது ஏழு ஐயஹோ... எனது கடிகாரம்... ஐந்து நிமிடத்துக்கு முன் பெற்றரி வீக்காகி செயலற்றிருந்தது.



இந்த கிளார்க் மனம் இருக்கின்றதே, எவ்வளவோ சோதனைகளைத் தாங்கிய மனம்... தோல்விகளுக்கெல்லாம் வேலியடைத்த மனம்... துயரங்களை உயரங்களாக்கிய மனம்... காதலில் தோல்வியடைந்தும் தாடி வளர்த்துத் தண்ணியடிக்கப் பழகிக்கொள்ளாத மனம். எல்லாவற்றையும் டேக் இட் ஈஸி... ஆனால் இந்த டைம் றெக்கோடிங் மெசினுக்கு முன்னால் எல்லாம் தவிடு பொடியாகி...

சிவத்த மார்க்கைக் கண்டு சிலிர்த்தது...

ஏன் இப்படி....

இது காலச் சுழற்சியின் மாற்றமா....

அல்லது பலவீனத்தின் செயற்பாடா.... விரக்தியின் விளிம்பா....

அல்லது எனது வெள்ளைக்கார உத்தியோகத்தின் வெளிப்பாடா...

ஏய் - டைம் றெக்கோடிங் மெசினே...

எங்களது கஷ்டம் உனக்குத் தெரியும்.

நீ கடமையைச் செய்... ஆனால் காலதாமதமாகச் செய்

அப்பனே எங்கள் மீது கருணை காட்டு.

வயிற்றுப் பசியோடு கிளார்க் வேலை செய்யும் எங்களுக்கு உனது றெட் மார்க்கால் தீனிபோடாதே!

காலம் காட்டு - "கடார்" சொல் கூடவே கருணையும் காட்டு. உனது சிவப்பு மையை ஒழித்துவிடு - உன் ஊசிகளைப் பின் தள்ளு.

உன் இதயத்தை நன்கு துடிக்கச் செய்.

ஆனால் உன் சரியான துடிப்பால்... பல மைல் தூரம் பரிதவிக்க ஓடிவந்து பச்சைத் தண்ணி கூட இல்லாது படியேறும் எங்களுக்கு உன் சிவப்புக் கரங்களை நீட்டாதே!

எடுக்கின்ற சம்பளம்... எல்லாம் பற்றாக்குறை.

மளிகைக் கடைக்காரனுக்கும் மறைந்து வாழும் மனிதர் நாங்கள். பால்காரன் தொடக்கம் அனைவருக்கும் ஸலாம் போட்டு பல்லிளிக்கும் பரிதாபம்... பற்றாக்குறை வாழ்க்கை... இத்தனைக்குள்ளும் நாளாந்த பஸ் செலவு நாற்பது. இடர்களுக்குள்ளும் பழஞ்சோற்றை எனது தர்ம பத்தினி ஆற அமரக் கரைத்துத்தர அதைக்குடித்து விட்டு பஸ்ஸெடுத்து ஆறுதலாக வர இயலாத அவசரம்.

டைம் றெக்கோடிங் மெசினே.. நீ துணை புரியவேண்டும். உனக்குள்ளும் ஒரு இதயம் வாழ வேண்டும்.

மெசினே மெசினே நீ வேண்டும்..

*(யாவும் கற்பனை)*



# காத்திருந்து

-அளவையூர் சுதாகரன்-

அன்றுதான் அவர்கள் சந்தித்த நாள். முன்பின் அறிமுகமாகாதவர்கள் கோவில் திருவிழாவில் தண்ணீர்ப் பந்தல் அருகே சந்தித்தனர். கூட்டம் அதிகம் இருந்தமையால் தனியாக விலகி நின்று தண்ணீர்ப் பந்தலை ஏக்கத்துடன் வினோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

தாகம் அவளை வாட்டியது. அதை அவதானித்தவனாக குமார் முதலில் உதவும் மனப்பாங்குடனே அருகில் சென்று "என்ன நீர் மோர் வேணுமா? நான் வாங்கித்தரவா?" என்றான்.

"எனக்கு யாரும் உதவிசெய்யத் தேவையில்லை" நெத்தியடியாகப் பதில் வந்தது.

'சரி' என ஒதுங்கிச் சென்றான் குமார். ஆனாலும் நெடுநேரம் வினோ நீர்மோரைப் பெற்றுக் கொள்ளாது தவிக்கவே கூட்டத்துள் புகுந்து ஒரு கப் நீர்மோருடன் அவள் முன்னே வந்து நின்றான்.

புன்சிரிப்போடு வாங்கியவள் 'நன்றி' என்று கூறிய வார்த்தைகளில் உண்மையான அன்பு தொனித்தது. அவள் குமார் மீது வைத்த அன்புதான் முதலில் அப்படி நடக்கவைத்தது. விரைவாகவே ஒருவரையொருவர் புரிந்து கொண்டு கோவிலிலே சந்திப்புக்கள் தொடர்ந்தன. இருவீட்டாரும் படித்தவர்கள் என்பதால் அவர்கள் காதலுக்கு "வில்லன்" என்று யாரும் இருக்கவில்லை. காலம் தன்வேலையைக் காட்டத் தொடங்கியது. சிட்டுக் குருவிகளாய் சிறகடித்தவர்கள் வாழ்க்கையில் புயல் தோன்ற ஆரம்பித்த நேரம்.

வேலையேதுமில்லாதிருந்த குமார் வெளிநாடு செல்ல வேண்டிய நிலையிலிருந்தான். அவனையே எதிர்பார்த்து, நோய்வாய்ப்பட்ட பெற்றோர்கள், திருமணவயதில் இரண்டு தங்கைகள் என அவன் மீது பொறுப்புகள் பாறாங்கல்லாயின.

"முகவர் மூலம் குறைந்த செலவில் பயணிக்கலாம்" என்ற ஏஜன்ஸிக்காரனின் வார்த்தைகள் அவனுக்கு மேலும் தைரியத்தைக் கொடுத்தது. பயண ஆயத்தங்கள் பூர்த்தியாகி விட்ட நிலையில். தன் தாயகத்தை விட்டுப் புறப்பட வேண்டியவனாகக் குமார்.

குமாரின் பிரிவை வினோவால் இலகுவில் ஜீரணிக்க முடியவில்லை. கண்ணீர் மழையால் நனைந்தாள். ஆறுதல் சொல்லத் தெரியாதவனாகக் குமார்.

"என்ன வினோ... சின்னப் பிள்ளை போல... நான் தொலை தூரமா போகிறேன்? அடிக்கடி கடிதம் போடுவன். ரெலிபோன் எடுப்பன் தைரியமாயிரும். கெதியில எங்கட கலியாணம் நடக்கும்" எனக் கூற, வினோ.

"நீங்கள் வரும்வரை நான் எத்தனை வருஷமும் காத்திருப்பேன். உங்கட குடும்பமும் என்ற குடும்பத்தப் போலத்தான். மாமா மாமியை அடிக்கடி போய்ப் பார்க்கிறேன். கவலைப்படாமப் போய் வாருங்கோ All the best" என்றாள் மனதுக்குள் சோகத்துடன். விமானமும் புறப்பட்டுவிட்டது.

பணத்தாசை பிடித்த முகவரால் இடையிலேயே பெயர் தெரியாத தீவில் இறக்கப்பட்டான் குமார். அவன்போல அங்கே பலர். முயற்சிகள் பல செய்தும் அவர்களால் அங்கிருந்து வெளியேற முடியவில்லை. இறுதியில் சிறிய படகுமூலம் மற்றொரு நாட்டுக்குள் நுழைய எண்ணினார்கள். அலைகளின் திடீர் ஆரவாரிப்பால் கடல் கொந்தளிக்க ஆசைக் கனவுகளுடன் சென்றவர்கள் அநாதைப் பிணங்களாயினர்.

பதில் கிடைக்கும் என்றும், அவன் திரும்பி வந்து வாழ்க்கையைப் பசுமையாக்குவான் என்றும் கனவுகளில் வினோ... தினமும் தபால்காரனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். காற்றுக்கூட தனக்குள் அழுதுகொண்டது. பேசத்தெரிந்திருந்தால் உண்மையைக் கூறியிருக்கும் வினோவிடம்....!

சிறுகதை

# முரண்பாடு

-ஒலுவில் சொல்லன்பன்-



வெப்பம் தாளாத வேப்பந் தோப்புகள் இலையுதிர்ந்து, நிர்வாணமாகி, வெட்கம் கொள்கையில் ஏக்கம் தாங்காத காபன் குயில்கள் காலைச் சூரியனுக்கு முறைப்பாடு செய்யும் பூபாள வேளையில், பூமி அமைதியில் உறங்கிக் கிடக்க...

தாவூதின் வீட்டு யன்னல் வழியே மழலைக் குரல் ஒன்று மழையாய்ப் பொழிந்து கொண்டு இருந்தது. காரியாலயத்திற்குச் செல்வதற்காக காலைக் கடமையில் மூழ்கியிருந்த தாவூத், குளியல் அறைக்குள் இருந்தவாறே குரல் கொடுத்துக் கொணடிருந்தும், குழந்தை வீரிட்டுக் கொண்டிருந்தது.

சமையல் அறைக்குள் காலை வேளையிலும் வியர்வையில் துவையலாய்ப் போன அவன் தாய் சக்கினா குழந்தையின் குரலால் உருகி நின்று உரத்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள். தன் மகனை 'வெறும் வயிற்றுடன், பாடசாலைப் பருவம் முதல் காரியாலயக் கடமைக்குச் செல்கின்றவரை அனுப்பாத தாய், காலை உணவிற்காக அந்தத் தள்ளாத வயதிலும் அடுப்பங் கரையையே இருப்பிடம் ஆக்கிக் கொண்டாள். வீட்டுக்கு மருமகள் வந்தும் ஓய்வு கிடைக்கவில்லை.

மாமியார் கொடுத்த தேனீரை பெட்காப்பி என்று நினைத்துக் கொண்டு தலைவிரி கோலமாகத் தூக்கமயக்கத்தில் டி.விக்கு முன்னாலே ரசித்துக் குடித்தபடி கதிரையில் உட்கார்ந்து இருக்கும் தாவூத்தின் மனைவி ஜுனைதாவுக்கு இன்னும் தூங்கவேண்டும் போல் இருந்தது. நள்ளிரவு வரை மூன்று படங்களை மொத்தமாகப் பார்த்ததின் அலுப்பு இன்னும் தீரவில்லை. "என்ன ஜுனைதா பல்லுத் துலக்காம தேத்தண்ணி குடிக்கீங்களா? புள்ள ஒரே கத்தா கத்திச்சே?" என்றபடி குளியல் அறையை விட்டு தலையை துவைத்தபடி வந்துகொண்டு இருந்த தாவூத், நேரே தொட்டிலடிக்குச் சென்றான். அங்கே போத்தலைப் பிடித்தபடியே குழந்தை பால் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

போதியளவு தாய்ப்பால் இருந்தும் குழந்தை அழும்போதெல்லாம் புட்டிப்பாலைக் கரைத்து போத்தலில் ஊற்றிக் கொடுப்பதுடன், தனது அழகை இழந்துவிடாமல் பாதுகாப்பதாக நினைத்து குழந்தையை கவனியாதுவிடும் தன் மனைவிக்குத் தாய்ப்பால் கொடுக்கும்படி பக்குவமாக பல முறை எடுத்துச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. ஐந்தறிவு மிருகங்களின் தன்மை கூட இந்த ஆறறிவுப் பெண்ணிடம் இல்லை என்று நினைத்தவனாய் குழந்தையின் கன்னத்தை செல்லமாக வருடிக் கொண்டான். குழந்தையை மறந்து எதிரே டி.வியோடு சங்கமமாகிவிட்ட மனைவியிடம் ஏதாவது சொன்னால் காலையிலே சண்டை வந்துவிடும் என மனதுள் எண்ணியவனாய் தன் அறைக்குள் சென்றான்.

காலைச் சாப்பாட்டை தாயின் அன்புப் பரிமாறலில் முடித்துவிட்டு, காரியாலயம் சென்று அலுவலக அறைக்குள் நுழைந்தவன் இருக்கையில் அமரும் போதே மேசை மணியை பல தடவைகள் அழுத்தியும் தாவூத்தின் பெண் உதவியாளர் தாமதித்தே வந்தாள். "சேர் மன்னிச்சிடுங்க, வெளிக்கிடும் போதே என் குழந்தை அழத்தொடங்கி விட்டது. புட்டிப் பால் எங்கிட்ட இல்லை. தாய்ப்பால் குடுத்துத் தூங்க வைக்கிறதுக்குள்ள பஸ்ஸைவிட்டுட்டன்.. அதான் கொஞ்சம் தாமதிச்சிடிச்சி.." இதழ் மலர்ந்து நாணத்துடன் தலை குனிந்து பவ்வியமாக தன் தாமதத்துக்கான காரணத்தைக் கூறி நின்றவள் மேல் தன் கோபத்தைக் காட்ட முடியாமல் போய்விட்டது தாவூத்துக்கு. சில காகிதங்களை அவளிடம் கொடுத்து முடித்து வரும்படி கட்டளை இட்டதும், மரியாதை உணர்வுடன் காகிதங்களை எடுத்துச் சென்றாள்.

அவள் சென்றதும் தாவூத்தின் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நினைவுகள் மெல்ல மெல்ல உயிர்பெறத் தொடங்கின.

பெற்றோர்களின் அன்புக்கும் ஆஸ்திக்கும் ஒரே வாரிசானவன் தாவூத். தாவூத்தின் நேர்மைக்கும் திறமைக்கும் ஓர் நிறுவனத்தில் உயர் பதவி கிடைத்தபோது நிறைந்த சீதனத்தையும் கொடுத்து தம் பெண்ணையும் கொடுக்கப் பலபேர் காத்திருந்தனர். ஆனால் தாவூத் அதை விரும்பவில்லை. ஒரு ஏழைக் குடும்பத்திலிருந்தே தன் மனைவியைத் தேர்ந்தெடுக்க விரும்பினான்.

தமது ஒரே மகனின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு அதே ஊரிலேயே ஏழ்மையில் வாடிய ஜுனைதாவின் குடும்பத்தாரிடம் சென்ற அவனது பெற்றோர் அவளைப் பெண் கேட்டு நின்றனர்.

ஏழ்மையிலும் செம்மையாக வாழும் அவ ளின் குடும்பத்தினர் தமக் குப் பெரிய இடத்து சம்பந் தம் கிடைத் ததையிட்டு ஒரு பக்கத்தில் சந்தோஷப் பட்டாலும் கட்டிய புடவை யோடு வந்தாலே போதும் என்ற மாப்பிள்ளை வீட்டாரின் வார்த்தைகளில் இருந்து மாப்பிள்ளைக்கு ஏதும் பிரச்சினைகள் இருக் குமோ என்று மறுபக்கம் பயப்படவும் செய்தனர்.

ஏதோ இவர்களின் திருமணம் நல்லபடியாக முடிந்தது. ஆனால் முதலிரவிலேயே கர்ப்பத் தடை மருந்தோடு வந்து எதிரே நின்றவளைப் பார்த்ததும் அவன் அதிர்ந்து போனான். அவன் எத்தனையோ புத்திமதி கூறியும் அவள் கேட்கவில்லை. "இங்க பாருங்க, இப்பவே புள்ளைய பெத்தா என் இளமையெல்லாம் போய் விரைவிலேயே கிழவி ஆயிடுவேன். ஐந்து வருசத்துக்குப் பிறகு பிள்ளை பெத்துக்கலாம்...." என்று பிடிவாதமாய் நின்றாள். அவனுக்குக் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ஏன்டி! இந்த வயசில குழந்தை பெத்துக்காம கிழவியான பொறகா பெத் துக்க முடியும். கொழந்த பெக்கிறதிலயும், பால் குடுக்கிறதிலயும் அழகு கெடுமெண்டு நினைக்கிறது முட்டாள் தனம். நாம மலடு இல்லெண்டு நிரூபிக்கிறதும் கொழந்த பாக்கியம் தானடி. அன்னைக்கு சேய் அழகு எண்டு சும்மாவா சொன்னாங்க" என்று அவளது பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான். கால சுழற்சியில் நாட்கள் கழிய அவளுக்கு குழந்தையும் பிறந்துவிட்டது.

மேசையில் டெலிபோன் மணி அடித்துக் கொண்டிருந்தது. நினைவுகளைத் துரத்திவிட்டு ரிசீவரை காதில் பொத்தி தன்னை அறிமுகப்படுத்திய தாவூதின் முகம் மாற்றம் அடைந்ததுடன் அவசரமும் பயமும் தொற்றிக் கொள்ள... "எந்த ஆஸ்பத்திரி? இதோ வருகிறேன்" என்று ரிசீவரை வைத்துவிட்டு அவசரமாய்ப் புறப்பட்டான். கம்பீரமாய் காட்சி தரும் ஆஸ்பத்திரியின் முன்பக்க பச்சைப் புல் வெளியில் காரை நிறுத்திய தாவூத், கதவு கூட சாத்த மறந்த நிலையில் வேக நடையில் சோகம் இழையோட ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து, விலகி ஓடும் வரண்டாவில் வளைந்து நேர் எதிராய் வரும் நோயாளர்களையும் ஆஸ்பத்திரி ஊழியர்களையும் கடந்து அவசர சத்திர சிகிச்சைப் பிரிவிற்குள் தாவியவனின் கண்கள் செங்குத்தாகி நிலை குத்தி நின்றன.

மனைவியின் கோலம் கண்டு உறைந்து போய் சிலையாய் நின்றான் தாவூத். கண்ணாடி அறைக்குள் டாக்டர் குழு போராடிக் கொண்டிருந்தது. மலர் கொத்தாக தாவூத்தின் தோள்கள் மீது படரும் கரங்களினால் சுயநினைவுக்கு வந்தவன் திரும்பிப் பார்த்தான்.

அவன் தாய் சக்கினா கருணை சொட்டும் முகத்தோடு களையிழந்து நின்றிருந்தாள். விம்மலின் ஊடே தாயின் தோளில் சாய்ந்தான் தாவூத். அவனின் தலையை ஆறுதலாகக் கோதிக்கொண்டே "கவலைப்படா தீங்க மகன். நாம நெனக்கிற தெல்லாம் நடக்கிறதுமில்ல. நடக்கிறதெல்லாம் நாம நெனச்சதுமில்ல. காலையில நீங்க ஒண்டும் பேசாம காரியாலயத்திற்கு வந்ததில அவள்ள மனசில ஏதோ மாற்றம் வந்திருக்கணும்.

எம்மடியில கொழந்தயப் போட்டுப்புட்டு, ஒண்ட புள் ளட, அவள்ட உடுப்பு எல் லாத்தையும் கழுவினவள், பாத்திரங்களெல்லாத்தையும் கழுவி வைச்சிட்டு, புள்ளட பாலுக்கும் அடுப்புல தண்ணிய வைச்சி காஸைப் போட்டுட்டு அடுப்பப் பத்த வைக்க தீப்பெட்டி தேடியி ருக்கா, கெடைக்கல்ல.

புள்ளைய வச்சிக்கிட்டு இருந்த என்கிட்ட வந்து கேட்டதும், தீப்பெட்டி இருந்த எடத்தச் சொன்னன். அதுவரைக்கும் வெளியான காஸைக் கவனியாம குச்சிய பத்தவைச்சிருக்கா"

அதற்கு மேல் பேசுவதற்கு சக்கினாவினால் முடியவில்லை. தாவூத் பார்வையை விலக்கி கண்ணாடி அறைக்குள் செலுத்தினான். அவள் உயிரை வயர் மூலம் பிடித்து வைத்திருந்தார்கள் டாக்டர்கள். தீக்காயங்களால் உடல். விகாரமாக்கப்பட்டிருந்தது. ■

# காத்திருக்கிறேன் 14

சுபா

"பார்க்கப் போகக்கூடாது என்று யார் சொன்னது? போய்ப் பாருங்கள்."


"உன்னை ஜாமீனில் கொண்டு வந்ததற்காக என் முகத்திலேயே அவர் காறித் துப்புவதற்கா?"

"பொய்யை உண்மையாக்கவும், உண்மைகளை பொய்யாக்கவும் உங்களுக்கு சொல்லியா தரவேண்டும்? இருந்தாலும் என் கருத்துக்களை நான் சொல்கிறேன்... உதவுமா என்று பாருங்கள்."

சந்திரமோகன் காப்பியை உறிஞ்சிக் கொண்டே தன் திட்டத்தை விவரித்தான்.

கேட்டில் இருந்த வாட்ச்மேன் பரமேஷ்வரின் காரைப் பார்த்ததும், பரபரப்பாக கேட்டைத் திறந்து விட்டான்.

போர்ட்டிக்கோவில் நிறுத்தியதும் சாவியை ஒரு வேலைக்காரன் வாங்கிக் கொண்டான்.



கிருஷ்ணதாஸின் பர்சனல் செக்ரட்டரி புன்னகைத்தான். "சார் ரூமில் காத்திருக்கிறார்" என்றான்.

பரமேஷ்வர் படிகளில் ஏறி கிருஷ்ணதாஸின் பிரத்தியேக அறைக் கதவைத் தட்டிவிட்டு நுழைந்தார்.

பெரிய மேஜைக்குப் பின்னே சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணதாஸின் முகத்தில் மூன்று இடங்களில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது.

கிருஷ்ணதாஸின் கண்கள் பரமேஷ்வரைப் பார்த்து கனல் கக்கின. எதிர் நாற்காலியைக் காட்டினார் கிருஷ்ணதாஸ்.

பரமேஷ்வர் அமர்ந்தார்.

கிருஷ்ணதாஸின் பக்கத்தில் அவர் மகன் அஸ்வின் இன்னொரு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

"உங்கள் கோபம் நியாயமானதுதான்" என்றார் பரமேஷ்வர். "ஆனால் நான் செய்ததற்கு முக்கியமான காரணம் இருக்கிறது..."

அவருடைய சட்டைப் பாக்கெட்டில் ஸெல்போன் இயக்கப்பட்டு முகம் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் வெளியே காத்திருக்கும் சந்திரமோகனுக்குக் கேட்பதற்காக இந்த ஏற்பாடு. "பேசினால்தானே போனில் உனக்குக் கேட்கும் என்ற அசட்டுத் துணிச்சலில் நீங்கள் எந்தத் தகவலையாவது அவர்களுக்கு எழுதிக் காட்டுவது புத்திசாலித்தனமா, உங்கள் மகளுக்கு ஆபத்தை உண்டு பண்ணும் முட்டாள்தனமா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்" என்று சந்திரமோகன் மிரட்டியிருந்தான். கிருஷ்ணதாஸிற்காக அவசரப்பட்டு அபிதாவின் உயிருடன் விளையாட பரமேஷ்வருக்குத் தைரியம் இல்லை.

"அப்படி என்ன காரணம்?" என்றான் அஸ்வின் பொறுமையில்லாமல்.

"இந்த வீடியோ கேசட்டைப் பாருங்கள்...."

அவர் கொடுத்த வீடியோ கேசட்டைக் குழப்பத்துடன் அஸ்வின் வாங்கினான். வீ.சி.ஆரில் இயக்கினான்.

காதம்பரியின் வீட்டிற்கு அவர் போய் இறங்குவதாக அமைந்த ட்ரெய்லர் காஸெட்.

"யார் இந்தப் பெண்?" கிருஷ்ணதாஸ் பேசியபோது அவர் உதடுகள் வலித்தன.

"காதம்பரி... ஊருக்கெல்லாம் கவனமாய் இருக்கச் சொல்லி நான் உபதேசம் செய்வேன்... கடைசியில் நானே முட்டாள்தனம் பண்ணி மாட்டிக் கொண்டு விட்டேன்... இந்த காஸெட்டை என் மகளுக்கு அவன் அனுப்பியிருந்தான். இது வெறும் முன்னோட்டம்தான் முழு நீள கஸெட்டை தனியார் சானல்களுக்கு விற்றுவிடுவேன் என்று என்னை மிரட்டினான். அந்த மிரட்டலுக்குப் பயந்துதான் அவனை நானே ஜாமீனில் எடுக்க வேண்டி வந்தது... எனக்காக அவன் பேரில் கொடுத்திருக்கும் புகாரை நீங்கள் வாபஸ் வாங்கி விடுங்கள்... இல்லையென்றால் என்னுடன் அவன் இருந்ததாக நான் கொடுத்த அறிக்கை பொய்யாகி விடும்...."

"அந்த காஸெட்டுக்குப் பயந்து அவன் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் ஆடப் போகிறீர்களா?"

"இல்லை... நெருப்பைத் தொட்டவனை நெருப்பு சும்மா விடாது என்று பதிலுக்கு நானும் சவால் விட்டிருக்கின்றேன். ஒரிஜினல் கேஸெட்டை அவனிடமிருந்து எப்படி வாங்குவது, அவனை எப்படி மறுபடி சிறைக்கு நிரந்தரமாக அனுப்புவது என்று என் மூளை யோசித்துக் கொண்டிருக்கிறது...."

"அதற்காக என்னை அடித்தவன் தப்பித்துப் போக நானே வாய்ப்பு தரவேண்டுமா?"

"பொலிஸ் கொடுத்தால் தான் தண்டனையா?" பரமேஷ்வர் இறைஞ்சும் குரலில் பேசினார். அவனுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையை நாமே நேரடியாகக் கொடுக்கப் போகிறோம். அவன் சிறைக்குப் போகும் போது சக்கர நாற்காலியில் போக வேண்டும்..."

கிருஷ்ணதாஸ் சற்றே யோசித்தார், அவருடைய அத்தனை ரகசியங்களும் உள்ளும் புறமும் அறிந்த ஒரு வக்கீல்! கிருஷ்ணதாஸிற்காக எத்தனையோ முறை தன் தொழிலில் ஆபத்தான முடிவுகளை எடுப்பவர்!

"ஆனால் அந்தச் சந்திரமோகனை சீக்கிரம் என்னிடம் ஒப்படைக்க வேண்டும்..." என்று ஒரு வாக்கியத்தில் அந்தச் சந்திப்பை முடித்தார்.

பரமேஸ்வர் நன்றி சொல்லிவிட்டு எழுந்தார்.

"இரண்டு நாட்களுக்கு அந்த சந்திரமோகனை என் பார்வையிலேயே வைத்திருக்கப் போகிறேன். காஸெட் தனியார் சானல்களுக்குப் போய்விடக் கூடாது என்பதற்காக" என்று ஒரு வாக்கியம் சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு பாமேஷ்வர் வெளியேறினார்.

"அடுத்ததாக வேறெங்கே நான் மண்டியிட வேண்டும்?" என்றார் பரமேஷ்வர், ஆத்திரத்தோடு! இயலாமையும், தோல்வியும் அவர் மீது சுமத்தியிருந்த கோபம் கண்டு சந்திரமோகன் புன்னகைத்தான்.

"உங்கள் வீட்டிற்கோ, அலுவலகத்திற்கோ போகிறோம்."

"எதற்கு?"

ஒரு பத்திரம் தயார் செய்ய வேண்டியிருக்கிறது...."

"பத்திரமா? என்ன உளறுகிறாய்?"

"ஒரு சிறந்த வக்கீலால்தான் சிறந்த பத்திரம் தயாரிக்க முடியும்... நீங்கள் தான் சிறந்த லாயர்... சிவில் லாயர் அல்ல.... ஆனால் இதற்காக இன்னொரு லாயரின் மகளையா கடத்திக் கொண்டிருக்க முடியும்?"

"என்ன பத்திரம்? என் சொத்து முழுவதையும் உன் பெயருக்கு எழுதி வைக்க வேண்டுமா?"

"உங்கள் சொத்து இல்லை...."

"பின்னே?"

"நாங்க உங்கள் ஆபிஸில் உட்கார்ந்து பேசலாமே.... அதற்கு முன்.... ஒரு ஐஸ்க்ரீம் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது.... ஏதாவது ஐஸ்க்ரீம் பார்லருக்கு வண்டியை விடுங்களேன்...."

முகமெங்கும் காயமிருந்தாலும் இவனால் எப்படி சிரிக்க முடிகிறது?


பரமேஷ்வர் ஆத்திரத்தோடு கியரைப் பொருத்தினார்.


"என்னதான் கிரேட் கிரிமினல் லாயராக இருந்தாலும் ஒரு முக்கியமான பாயிண்ட்டை கோட்டை விட்டு விட்டீங்களே..."

"என்ன..?"

*(காத்திருப்போம்......)*

## வித்தியாசங்கள் என்ன?





இரண்டு படங்களுக்கும் இடையில் குறைந்த பட்சம் ஆறு வித்தியாசங்கள் காணப்படுகின்றன. கண்டுபிடிக்க முடியாவிடின் 22ம் பக்கம் செல்லவும்.

## காலத்தின் பாடல்


*மெட்டு :* மூங்கில் காடுகளே......

இலங்கை மானிடர்கள்
முகத்தில் பரவசம் பூத்திடுச்சு
யுத்தம் என்ற ஒன்று
எம்மை விட்டும் நீங்கிடுச்சு
கோடி உயிரை கொன்று குவித்து
வெடியின் ஒலியால் செவியை சிதைத்து
மனதில் ரணங்கள் தினமும் புதைத்த
யுத்தம் எங்கோ தொலைந்து, தொலைந்து போச்சு, போச்சு

நிம்மதி எம்மை இன்று நிஜமாய் தொட்டு விட்டதுவே
தொட்டிட்ட நிம்மதியை தொடர்ந்தும் பேணிட முயன்றிடுவோம்
சுதந்திரம் எம்மில் இன்று மலர்போல் மொட்டு விட்டதுவே
பூத்திட்ட சுதந்திரத்தை தொடர்ந்தும் பேணிட முயன்றிடுவோம்
அகதி எனும் சொல் இனி இல்லை
குண்டு வெடிப்பு எனும் சொல் அதுவும் இல்லை
படுகொலை எனும் சொல் இனி இல்லை
உயிர்ப்பலி எனும் சொல் அதுவும் இல்லை
இனங்கள் இணைந்தால் இலங்கை நாடு
சுதந்திரத்தின் சுடராய் ஒளி விடுமே!

துப்பாக்கி ரவைகள், தம் தொழிலிலை மறந்து விட்டனவே,
இரத்தத் துளிகளினை இனி மண் கண்டிட மாட்டாது.
நிலக்கண்ணி வெடி யாவும் உயிரை இழந்து விட்டனவே
வெடி ஒலி எம் செவியில் இனிமேல் கேட்டிட மாட்டாது
ஏ - 9 பாதை திறந்தாச்சு,
அதன் வழியே சுதந்திரம் மலர்ந்தாச்சு,
சமாதானம் இங்கே உருவாச்சு,
இனிபோர் பற்றி இல்லை வாய்ப்பேச்சு
புலியும், அரசும் செய்திட்ட ஒப்பந்தம்
மண்ணில் நீடூழி வாழியவே!

பாடலாக்கம் : **ஷிப்லி**, நிந்தவூர் 18.



'ஆணையிடுங்கள் மன்னா'
'ஆணையிடுங்கள் என்று எனக்கே ஆணையிடுகிறாயா? உனக்கு நூறு கசையடிகள் தண்டனையாக வழங்குகிறேன்'

கவிராஜன்

# கவி முழக்கம்

## காத்திருப்பேன் உனக்காக!

( இடி- முழக்கம் 70 இல்
இடம்பெற்ற 'காத்திருக்கும்
'உனக்கு' என்ற கவிதைக்குப்
பதில் கவிதை.)

உனக்காகவே காத்திருக்கும்
என்னை
உள்ளன்புடன்
இனங்கண்ட
உனக்கே உனக்கு...

மடல்கள் எனக்கெழுதிட
நினைக்கும் உந்தன்
மனம் அறிந்தேன்

மௌனித்து நீ செல்கையில்
நான் அடைந்த மனப்போராட்டம்
ஓய்ந்துபோனது- உன்
சம்மதம்
கிடைத்துவிட்டால்..

உனக்கெனவே ஏங்கும்
என்னிதயத்தில்
நீ தடம் பதிக்கும்
இனிய நாளுக்காய்
உவகையுடன் காத்திருப்பேன்.

சோலைக்கிளியே- உன்
ஒருத்திக்காக
வாழ்நாளெல்லாம்
பாதுகாத்திருப்பேன்
என் மனசை!

—எம்.எஸ். நஸீஹா,
ஏத்தாலை.

## காயங்கள்!

கதிரவன்
காலடி பதிக்கும் மண்ணிலே
சமாதானக் காற்றை
சுவாசித்து
சுபிட்சம் கொண்ட ஜீவன்கள்,
ஒற்றுமையை ஓரங்கட்டி
அமைதி இழந்து
அச்சமுள் வாங்கி வாழ
மீண்டும்
வழியமைத்திட வேண்டாம்!

எம்மண்ணிலே...
மனிதம்
மறக்கப்படவோ,
மனிதவுயிர்கள்
பறிக்கப்படவோ,
இனக்குரோத எரிமலைகள்
எல்லையின்றி
வெடித்தோடிடவோ,
இடமளித்திட வேண்டாம்...!

மூன்றாம் சக்திகளுக்கும்,
பேரினவாதக் கழுகுகளுக்கும்,
மதவாத நாகங்களுக்கும்,
எம்மண்ணும்
மானிடமும்
பலியாவதை
அற்பளவும்
அனுமதித்திட வேண்டாம்...!

ஹர்த்தால்களும்
ஆர்ப்பாட்டங்களும்
அப்பாவிகளை
அவதியாக்க வேண்டாம்...!
அகதிகளாக்கவும் வேண்டாம்!
அதற்காய்
காளையர் உதிரம்
கொதித்திடவுமே வேண்டாம்...!

இனியும்
இன விரிசல்கள் வேண்டாம்...!
அழிவுகளும்தான் வேண்டாம்...!
வரலாற்றுக் காவியங்களுமே
இனி எமக்கு வேண்டாம்...!

—முனையூரான்.

## காதலிக்க வேண்டுமா?

காதலுக்கு அழகு இருந்தால்
போதாது:
அந்தஸ்து தேவை- அந்தஸ்து
மட்டும் போதாது
அல்ல செல்லில் வீடும் தேவை!

தூரம் பார்க்காமல்
துரத்தி துரத்தி காதலித்தது
அந்தக் காலம்
அயலில் பார்த்து
ஆசைப்படுவதே இந்தக்காலம்!

விரும்பு முன்
குடும்பம் பார்
குலம் கோத்திரத்தினை
கேட்டுப்பார்
அம்மாவிடம் கேட்கத்தவறினும்
சின்னம்மாவை கணக்கில்
வைத்துக் கொள்!

பதினெட்டு வயது
பருவ வயது என்றாலும்
காதலிக்காதே - ஏனெனில்
இருபத்தியெட்டுத்தான்
குழந்தைப் பருவம்
என்கிறது குடி!

காதலிக்கு
கிள்ளிக் கொடு
உன் வீட்டாரோ
அள்ளிக் கொடுத்தான் என்று
அப்பட்டமாய் ஒரு
பொய் சொல்வர்!

நீ-
தங்கூசியால்
தாலி செய்- உன்
தாயோ- தந்தையின்
சொத்தையழித்து,
தங்கத்தினால் மாலை
செய்தான் என்பாள்!

ஏசியிலிருப்பவளை
காதலி- உன் பெற்றோரோ
ஓசி மாப்பிள்ளையை
வாசியாக்கி
காசு கறந்து கொண்டாள்
என்றும் கூறுவர்!

நீ-
உள்ளத்தால்
காதலிக்காதே
ஊரறிய -உன் காதலியுடன்
சுற்றிவா- அப்போதுதான்
அது உண்மைக் காதல்
என்று என் உறவினர்
உறுதிப்படுத்திக் கொள்வர்!

—தென்றல்,
ஓட்டமாவடி.

## வாழ்ந்து காட்டு

நீ
பூதான்
உன்னைத் தீண்டும் போது
பூகம்பாய் மாறு!

நீ
தென்றல்தான்
உன்னைச் சீண்டும் போது
புயலாய் மாறு!

ஆத்திர
அக்கினி எரியும் போது
உனக்குள்
பனிமழை
பொழியச் செய்!

நீ
புதுமையாகு
பதுமையாகாதே!

நீ
பணிவில் மலர்
துணிவில் சோலை!

புனிதக் காதலை
இதயத்தில் சூடு
காமப் பேய்களை
விழிகளால் சுடு!

கண்மணி
உனக்காகத்தான்
உலகம்
இன்னும் உயிரோடிருக்கு
வா...
வாழ்ந்து காட்டு!

—ஏ.தாஹிரா தன்சில்,
கந்தளாய்.

## கவி பாடும்

வடிந்திடும் பனித்துளிகளால்
வசந்தகாலம் எழில் கொள்ளும்!
கொட்டும் மழைத்துளிகளால்
கொதிக்கும் வெப்பம்
தகர்ந்துவிடும்!
தென்றலின் தழுவல்களால்
தென்னையோலைகள்
நர்த்தனமாடும்!
உள்ளத்தோடு உறவாடும்
உந்தன் நினைவுகளால் என்
உயிர் கவிபாடும்!


—செ.சுசீலா.



இளைய ஞானம்
—சுபாரஞ்சனி

# கா தலா தலா இதுதான் காதலா?

காதல் தேவையானது. தவிர்க்க முடியாதது. நினைவில் அழியாதது. பருவத்தின் உன்னதமான உணர்ச்சி. "அவள் இல்லாவிட்டால் உலகமே இல்லை" என்று தீர்மானம் செய்து விடுகிறது. அதற்காகவே உள்ளம் வெதும்புகிறது. உருகித் தவிக்கிறது. நிறைவேறாமல் போனால் துன்பம் ஆறாய்ப் பெருக்கெடுக்கிறது.



எம்.எஸ் நஸீஹா,
ஏத்தாலை.

நீ காதலிக்க வேண்டுமா? எந்தத்தடைகளையும் உடைத்தெறிந்து விட்டு ஒரு பெண்ணை மணம் முடிக்க முடியுமானால் துணிவுடன் அவளை நீ காதலிக்கலாம். இல்லாவிடில் 'இவளைத்தான் மணக்கப் போகிறோம்' என்று ஏகமனதுடன் முடிவு செய்து விட்டு காதலிக்கிறேன் என்றால் 'கல்யாணத்திற்கு வாய்ப்பு கிட்டுமா?' என்று சிந்தித்துப் பார்த்துத்தான் காதலிக்க வேண்டும்.


குளிப்பதாகக் கூறி கல்லிலே விழுந்து விட்டு 'தண்ணீர் இல்லை' என்று புலம்பாதே! கல்லில் தண்ணீர் எப்படி இருக்கும்?! குளிக்க வேண்டுமாயின் குளத்தில் அல்லவா விழவேண்டும்.

"காதலுக்கு கண்ணில்லை" என்பது சரிதான். அதற்காக, தரையின் மேடு பள்ளங்களை தன் கோலின் மூலம் உணர்ந்து நடக்கும் குருடனுக்கு இருக்கும் விவஸ்தைகூட இல்லாமல் போய்விடுமா? எனவே 'என் காதல் நிறைவேறும்' என்று நன்றாகத் தெரிந்து கொண்டு காதலைத் தொடங்கினால் தோல்வி இல்லை. என்னவாயினும் கல்யாணம் செய்து காதலிப்பதைப் போல உடலை வருத்தாத வேலை வேறெதுவும் இல்லை.

உன் காதல் உண்மையானது, உறுதியானது என்றால், நீ யாரை காதலிக்கின்றாயோ அவள் உன் வீடு தேடி ஓடி வந்து விடவேண்டும். இல்லையா? ஆகவே திட்டம் தெரிந்து காதலி. தோல்வி இல்லை. அன்றேல் கல்யாணம் செய்து காதலி, தோல்வி வராது. காதல் புனிதமானது. வீணாக அதைக் களங்கப்படுத்தி விடாதே!

காலமெல்லாம் காதல் வாழ்க!

# இக்கரைக்கு அக்கரை பச்சை!



செ. துஷ்யந்தன்,
பாண்டிருப்பு.

ஓர் ஆற்றங்கரையில் நின்று ஆற்றின் மற்றொரு பக்கம் பார்த்தால் நாம் நின்றிருக்கும் கரையை விட எதிரே இருக்கும் மற்றொரு கரை பச்சையாகத் தோன்றும், ஆற்றைக் கடந்து, அந்தக் கரையை அடைந்தால், நாம் விட்டு விட்டு வந்த மற்றப் பக்கம் பச்சையாகத் தோன்றும். இதனையே இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்பார்கள்.


வாழ்க்கையிலும் இப்படித்தான். அக்கம் பக்கத்திலுள்ளவர்களைப் பார்த்து நம்மைவிட அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாக நாம் நினைக்கக் கூடாது. எதிர் வீட்டு ஜன்னலையோ, அக்கம் பக்கத்திலுள்ள ஜன்னல்களையோ பார்த்து, அங்கே அந்த ஜன்னலுக்குப் பின்னால், வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் நம்மைவிட மகிழ்ச்சியுடன் இருப்பதாக நாம் நினைப்பது கண்மூடித்தனமானது. அவர்களும் உண்மையில் நம்முடைய நிலையில்தான் இருக்கிறார்கள்.

அவர்களும் நம்மைப் பார்த்து, பெருமூச்சு விட்டு, பொறாமைப்படுகிறார்கள். கொஞ்சம் மனதை உறுதிப்படுத்திக் கொண்டு எதிர் வீட்டில் வாழ்பவரையோ, பக்கத்து வீட்டில் குடியிருப்பவரையோ கூப்பிட்டு, உங்கள் மனதிலிருக்கும் துன்பங்களை நீங்கள் கொட்டுங்கள். உங்கள் உள்ளத்தைத் திறந்ததும் அவர்களும் தங்களது உள்ளங்களை எரிமலையைப் போல் திறந்து விடுவார்கள். அப்போது தான் வாழ்க்கையில் நமக்குத் தோன்றும் பிரச்சினைகளும், சிக்கல்களும், தொல்லைகளும் மற்றவர்களுக்கும் இருக்கின்றன என்பது பளிச்சென்று தெரியும்.

வாழ்க்கையில் சிக்கல்களை, பிரச்சினைகளை மனிதன் சமாளித்து வாழ வேண்டும் அப்போது தான் அவன் முழு மனிதனாகிறான். வாழ்க்கையில் பிரச்சினை இல்லாதவன் மனிதன் அல்லன். காட்டில் அலைந்து திரியும் மிருகத்திற்குக்கூட வேட்டையாடுபவர்களின் கையில் சிக்கி உயிர் இழக்கக்கூடாதே என்ற பிரச்சினை எப்போதும் இருந்து வருகின்றது. அவைகள் ஓடி ஒளிந்தோ, எதிர்த்து நின்று சண்டை செய்தோ தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்கின்றன. எதையும் எதிர்த்து நின்று போராடும் ஆற்றல் நமக்கு வேண்டும் அப்போது தான் மகிழ்ச்சியின் எல்லையை நாம் காணமுடியும்.

தெரியாதவைகளைத் தெரிந்தவைகளைப் போல் காட்டிக் கொள்வது தவறு. இப்படி நடிப்பது ஒருவனுடைய வாழ்க்கையையே கவிழ்த்துவிடும். தெரியாதவைகளை தெரியாது என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்பவர்களே வாழக்கையில் பெருவெற்றி கண்டு மகிழ்வைக் காணுகின்றார்கள்.

## நாங்கள் பேனா நண்பர்கள்



பெயர் : P. சிறிதாசன்
வயது : 18
பொ. போ. : இடி பத்திரிகை வாசித்தல், சக்தி F.M. கேட்டல்
முகவரி : 59, செட்டியார் தெரு, கொழும்பு - 11.



பெயர் : ஏ.எம். ஆரூஸ்
வயது : சொல்லவில்லை.
பொ. போ. : வழமையானவை
முகவரி : 22 A, மகா குமரகே வீதி, கொழும்பு - 14.



பெயர் : எம்.கே.எம். சஜாத்
வயது : 26
பொ. போ. : பத்திரிகை வாசித்தல் உதைப்பந்தாட்டம்
முகவரி : 1, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.



பெயர் : தவராசா தயாபரன்
வயது : 18
பொ. போ. : இடி பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.
முகவரி : பொது மயான வீதி, மநங்கை நகர், மண்டூர்.

புதிய பெண்மை

ஸ்நேகிதி

# பிரபலமான பெண்



"ஃபெமினா" ஆங்கிலத்தில் வெளிவரும் இந்தியாவின் நம்பர் வண் பெண்கள் பத்திரிகை. "ஃபெமினா" பத்திரிகையைப் பற்றி தெரியாத பெண்களுக்கும் கூட "மிஸ் இந்தியா" அழகிப் போட்டி நடத்தும் பத்திரிகை என்றால் உடனே புரிந்து விடும். மிகப் பிரபலமான இந்த இதழின் ஆசிரியராக இருப்பவர் ஒரு தமிழ்ப் பெண்! அவரது பெயர் சத்யா. கணவர் பெயரான சரண் என்பதை தன்னுடன் இணைத்துக் கொண்டு "சத்யா சரண்" என்ற பெயரில் எழுதிக் கொண்டிருக்கிறார்.

அவரைப் பற்றி சில வரிகள :

இவரது சொந்த ஊர் கும்பகோணம். இவருக்கு சினிமாவில் வைஜெயந்திமாலா மாதிரி பெரிய நட்சத்திரமாக வேண்டும் என்ப்து தான் ஆசை. ஆனாலும், வீட்டில் தனது ஆசையை ஏற்றுக் கொள்ளாததால் அந்த ஆசை நிராசையானது. சரணை காதலித்து திருமணம் செய்து சந்தோஷமாக குடும்பம் நடத்தி வருகிறார். அழகிப் போட்டிகளை வரவேற்கும் இவருக்கும் சிறுகதைகள் எழுதுவதிலும் ஆர்வம் அதிகம் உண்டு. சிறுகதைத் தொகுதியும் வெளியிட்டுள்ளார். தவிர ஃபேஷன் டெக்னாலஜிக்கான இந்திய தேசிய நிறுவனத்தின் (NIFT) நிர்வாகக் குழு ஆளுநர்களில் ஒருவராகவும் பதவி வருகிக்கிறார்.

# நீங்கள் எப்படிப்பட்டவர்கள்?

## இடைகள்

எடையதிகமான பெண்களுக்கு இடையிருப்பதே தெரிவதில்லை. இத்தகைய பெண்களுக்கு வாழ்க்கையில் வசதிகள் இருந்தாலும், உள்ளத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இராது.

மங்கையரின் இடை சிறுத்து உடுக்கையைப் போல் இருந்தால், அத்தகைய பெண்களுக்குச் சகலவித ஐசுவரிய பாக்கியங்களும் உண்டாகும்.

பெண்களின் இடுப்பு அளவுக்கு மீறிப் பெருத்திருப்பது சுகாதாரக் குறைவையும், ஆசார அனுஷ்டானக் குறைவையும் ஏற்படுத்தும்.

இடுப்பு உயரமாக உரோமமுடையதாக இருப்பின் துன்பங்களும் துயரங்களும் உண்டாகும்.

இடையின் முன்புறம் அகன்று, சதை பருத்து, எடுப்பாகவும், மெல்லிய உரோமங்களையுடையதாகவும் பிரதட்சிணச் சுழியுடையதாகவும் இருந்தால், வாழ்க்கையில் சுகபோக சௌகரியங்கள் உண்டாகும். இடை சமமின்றி இடப்புறச் சுழியுள்ளதாக இருந்தாலும், சதையற்று நெருங்கிக் கூனலாக இருந்தாலும் அத்தகைய மங்கை மங்கல நாணை இழப்பாள்.

# பால் கொடுப்பதால் தாயின் மூளை வளர்ச்சியடைகிறது

தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைகளுக்கு தாயுடனான பிணைப்பு அதிகமாகும் என்பது நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் இன்னொரு அதிசயமான மாற்றமும் ஏற்படுகிறது. என்பதை அறியாமல் இருக்கலாம். அதாவது தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் மூளையில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படுகின்றனவாம்.

தாய்ப்பால் கொடுப்பதன் விளைவாக மூளையில் சுரக்கும் ஒக்ஸிடோசின் என்ற ஓமோன் மூளையிலும் ஞாபகசக்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதைக் கண்டறிந்துள்ளது ஜப்பானிய விஞ்ஞானக் குழு. சிக்கலான புள்ளிக் கோலத்தை அங்கங்கு நெளிவு சுழிவுகளுடன் கொண்டு வந்து எப்படி ஒன்று சேர்க்கிறோமோ அதுபோல் நமது மூளையும் சிக்கலான நெட்வோர்க் மாதிரி செயல்படுகிறது. பால் சுரக்கக் காரணமான "பிட்யூட்டரி" சுரப்பி தலையில் உள்ள ஹைப் போதலமஸ் மூளையை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும் செரிபிரல் கார்டெக்ஸுடன் தொடர்புள்ள பகுதி. தாய்ப்பால் வெளிவரும் பொழுது இந்தப் பகுதிகளெல்லாம் சீராக இயங்குகின்றன. முக்கியப் பகுதி சிறப்பாக இயங்கும் போது மூளையின் சக்தியும் அதிகமாகச் செயற்படும். இதனால் தான் தாய்ப்பால் கொடுக்கும் பெண்ணுக்கு மூளை அதிக சுறுசுறுப்பாக இயங்குகின்றது என்கிறார்கள்.

தூக்கம் கெடுத்து அடிக்கடி பால் கொடுக்க வேண்டியிருந்தாலும் தாய் சோர்வடைவதில்லை. அதற்கும் இதுதான் காரணம். குழந்தை சிறிது முணங்கினாலும் உடனே விழித்திருந்து கவனிக்கவும் முடிகிறது. எதனையும் கிரகித்துக் கொள்ளும் தன்மையும் அதிகமாகிறது. எனவே தாய்ப்பால் கொடுப்பதால் அழகு கெட்டு விடும் என்ற மூடநம்பிக்கையில் இருப்பவர்கள் தாராளமாய்த் தாய்ப்பால் கொடுக்கலாம்.

அழகும் கெடாது, அறிவும் கெடாது.

*–கார்த்திகா*

# பாகற்காய் வறுவல்

சிறதளவு எண்ணெய்யில் கடலைப் பருப்பு, கடுகு, வெங்காயம், என்பவறுடன் பாகற்காய், மிளகாய்த்தூள், உப்பு, மஞ்சள்த்தூள் என்பவற்றையும் அதில் போடவேண்டும். வெந்தபிறகு நன்றாக எண்ணெய் விட்டு வறுக்கும் போது இரண்டு தக்காளியை பிசைந்து அதில் போட்டு விட்டால் கசப்பு இருக்காது. சாப்பிடுவதற்கும் சுவையாக இருக்கும்.

# பால் அல்வா

*தேவையான பொருட்கள் :*

பால் 1 லீட்டர், பப்பாளிப் பழம் 1, தக்காளி அல்லது ஆரஞ்சுப் பழம் 3, சர்க்கரை 500 கிராம், நெய் 250 கிராம், முந்திரி 50 கிராம், ஏலக்காய்5.

*செய்முறை:*

பப்பாளிப்பழத்தை தோல் நீக்கி துண்டங்கள் போட்டு பாலில் நன்கு வேகவிட வேண்டும். பிறகு நன்றாக விழுது போல் அரைக்கவும். தக்காளி அல்லது ஆரஞ்சுப் பழங்களிலிருந்து எடுக்கப்பட்ட சாறை பப்பாளி விழுதில் சேர்க்கவும்.

அதில் சர்க்கரை, நெய் சேர்த்து அடிகனமான பாத்திரத்தில் வைத்து கிளறவும், பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் போது முந்திரி, ஏலப்பொடி தூவி இறக்கி வேறு பாத்திரத்தில் ஊற்றி ஆறியதும் துண்டுகளாக வெட்டி பரிமாறுங்கள்.

*–மு.ருக்மணி, தேனி.*

# வியர்க்குரு வந்தால் என்ன செய்யலாம்?

வெயில் காலங்களில் வியர்க்குருவின் தொல்லை தாங்க முடியாமல் இருக்கும் இதன் தொல்லை குறைய காலை, மாலை இருவேளையும் குளிக்கவேண்டும். வெயிலில் வெளியே போகக்கூடாது.

சாப்பாட்டில் காய் கறி, கீரை சேர்த்துக் கொள்ள வெண்டும். பழச்சாறு குடிக்கலாம். ஐஸ்கிறீம் குடிப்பதைத் தவிர்ப்பது நல்லது. குளிரக் குளிர சந்தணம் பூசுங்கள். வியர்க்குரு போய் விடும்.

# சுக்கின் பயன்கள

1. காதுக்குத்து, வயிற்றுக் குத்து, இருமல் என்பனவற்றைப் போக்கும் தன்மை சுக்குக்கு உண்டு.
2. சுக்கு, கற்கண்டு இவைகளை சமமாக எடுத்து பொடி செய்து காலையும் மாலையும் இளநீரில் ஒரு தேக்கரண்டி கலந்து குடித்தால் மேல் மூச்சு வாங்குவதும் நெஞ்சுவலியும் நீங்கும்.
3. சுக்கையும் சாரண வேரையும் சேர்த்து காலையில் உட்கொண்டால் வயிற்றெரிச்சல் நீங்கும்.
5. சுக்கு, கடுக்காய், நிலவேம்பு, வேம்புத்தோல் என்பவற்றை முறையே ஒரு தேக்கரண்டி வீதம் எடுத்து 2 லீற்றர் நீரில் வற்றக் காய்த்து குடித்து வர நச்சு காய்ச்சல் நீங்கும்.

*–எஸ்.எம்.சிசிலியா*
*கொழும்பு-15*

# 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை - 20

ஊற்று பகுதியில் பிரசுரமான 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி கீழுள்ள கூப்பனை வெட்டி ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். கூடுதல் புள்ளி பெறும் மாணவர்களுக்கு அலாரமுள்ள மேசைக் கடிகாரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கூடுதல் புள்ளி பெற்றிருந்தால் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார். பாராட்டுக்குரியோரின் பெயர், முகவரிகள் பிரசுரிக்கப்படும். கூப்பன் இல்லாத விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

## போட்டிக் கூப்பன் ~ 20

பெயர் :..............................................

பாடசாலை முகவரி :..............................................

..............................................

..............................................

*5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பரிசுப் போட்டி - 20*
**417/2, Galle Road,**
**Colombo-3**

## 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை – 17 இற்கான விடைகளும், பரிசு, பாராட்டுப் பெறுபவர்களின் விபரமும்

### போட்டி 17 இற்கான விடைகள்:

35. 1. டில்ஸான் 2. அகிலா 3. பாத்திமா 4. கமலா 5. கவிதா
36. 16.1 கி.மீ 37. 3 1/4 லீற்றர் 38. வைத்திய அறிக்கை
40. Balcony 41. Asylum 42. Carpet
43. Plantain 44. Hiccough 45. Internet
46. Sunflower 47. Peacock 48. Media 49. Pineapple

### மேசைக் கடிகாரத்தினைப் பரிசாக வெல்லும் அதிர்ஷ்டசாலி

**ஐ. இஹ்ஸானா,**
**பு/ஆலங்குடா. அ.மு.வி., ஏத்தாலை.**

*பாராட்டுப் பெறுவோர்கள்*

1. பாத்திமா ருமைஸா நயம், அல்கமர் மத்திய கல்லூரி, பம்மன்ன நாரங்கொட.
2. ஷம்யா நதாஷா ஜோசப், நல்லாயன் கன்னியர் மடம் கொட்டாஞ்சேனை கொழும்பு 13.
3. பாத்திமா இஷ்ரா, மாறை/மின்ஹாத் தேசிய பாடசாலை, யோனகபுர திக்குவல்லை.
4. M.N. Kansha Noor, St. Mary's College, Trincomalee.
5. டிஷானி லோபோ, நல்லாயன் கன்னியர் மடம் கொழும்பு 13.
6. யோ. ஜயந்தா, மட்/உதயபுரம், தமிழ் வித்தியாலயம், பெரிய கல்லாறு.
7. அப்துல் நஜீப் அஹமட் நப்ரீஸ், மட்/அல் ஜுப்ரியா வித்தியாலயம், ஏறாவூர்.
8. எம்.எச்.எ.ஃப். சஜிதா, மட்/அல்முனீறா பாலிகா மகா வித்தியாலயம், ஏறாவூர்.
9. ஆர். டிலானி, புனித அன்னம்மாள் கன்னியர் மடம் கொழும்பு 13.
10. இல்மா சயீட், ஜீலான் மத்திய கல்லூரி, பாணந்துறை.

### ஆறு வித்தியாசங்களுக்கான விடை

1.சுவர்ப்படம் 2.சுவர்ப் படத்தின் நிழல் 3.லாச்சிப் பிடி 4.போத்தல் 5.விளையாட்டுப் பொருள் 6.கிளாஸ்

# சிந்தித்தால் சிறப்பு வரும்

* சுயநலம் என்பது குறுகிய குடிசையைப் போன்றது. பொது நலமோ அரண்மனைக்கு ஒப்பானது.
* தீயவர்களிடம் நியாயம் பேசிப் பயனில்லை.
* நம்பி நடக்கிற ஒருவனின் அந்தரங்க விடயங்களை அவன் உனக்கு ஜென்ம விரோதியாக மாறும்போதும் வெளியில் கூறிவிடாதே.
* நெஞ்சில் தைரியமும் உண்மையும் இருந்தால் தம்மை தாமே தற்காத்துக் கொள்ளலாம்.
* சண்டை போடும் நேரமெல்லாம் உண்மை அதன் சத்தியத்தை இழந்துவிடுகிறது.

*–எம்.எஸ்.நஸீஹா, ஏத்தாலை*



# ஊற்று

-கே.கார்த்திகாயினி-

## இவ்வாரத் தென்றல்

**மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப**
**தன்உயிர் அஞ்சும் வினை**

*-அதிகாரம்-25 குறள்-04*

ஏனைய உயிர்களை எல்லாம் பேணி அவற்றிடம் அருள் கொள்பவனுக்கு தன் உயிரின் பொருட்டு பயந்து வாழும் தீவினைகள் இல்லை என்று கூறுவர் அறிந்தோர்கள். எனவே நாம் பிற உயிர்களிடத்தில் எப்பொழுதும் அன்பு வைப்போமாக.

## கண்டு பிடியுங்கள்: இல.70 பரிசு ரூபா. 100/-

*தம்பி, தங்கைகளே! இங்கேயுள்ள 16 சதுரங்களிலும் ஒருவரிடம் கட்டாயம் இருக்க வேண்டிய நற்குணங்கள் 5 ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து அனுப்புங்கள்.*

முடிவுத் திகதி: 21-08-2002

| | | | |
|---|---|---|---|
| மை | க | ர் | பு |
| ண் | ன் | ஒ | உ |
| க் | கை | அ | நே |
| மை | ம் | ஈ | ழு |

இடியின் முழக்கம் 71 இல் இடம் பெற்ற கண்டுபிடியுங்கள் இல.68 இன் போட்டி முடிவுகள்:

சரியான விடைகள்:

**1. ஆர்ஜென்ரீனா 2. இங்கிலாந்து 3. பிரான்ஸ்**

சரியான விடைகளை எழுதியோரில் பரிசுக்குரியவராகத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலி:


**ப.சுகிர்தா**
*இல.24, குவாரி வீதி,*
*குருநாகல்.*

கண்டுபிடியுங்கள்-70
'இடி'
417/2, காலி வீதி,
கொழும்பு -03.

பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

01. எம்.எஸ்.எம்.ஹிதாயதுல்லா, காலி வீதி, பேருவளை.
02. சு.அ.கா.நியாஸ், கொழும்பு வீதி, ரதமல்யாய, புத்தளம்.
03. ஏ.ஜே.பேனிஸ், லுணுகலை தமிழ் மகா வித்தியாலயம், லுணுகலை.
04. பாத்திமா முர்ஸிதா, கபுறடி வீதி, காத்தான்குடி-02.
05. வி.ஐங்கரன், வவுனியா.
06. எம்.துலக்ஸி, ரஜமல்வத்தை வீதி, கொழும்பு-15
07. எஸ்.தினேஸ்குமார், ஹப்புத்தளை வீதி, பண்டாரவளை.
08. A. A. Raja, Wadakada Road, Potuhera.
09. ச.தினேஸ்கில்ரன், மாவிலங்கேணி, முருங்கன்.
10. காஸிம் வாபா மனாப், பொத்துவில் - 16.

## இடி வர்ணம் தீட்டும் போட்டி - 48



வர்ணம் தீட்டும் போட்டி 46ல் ரூ.50/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**யோ.சிவாஜினி,**
அரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

பாராட்டுப் பெறுபவர்கள்

01. ரி.எச்.எம்.புழைல், ஏறாவூர்.
02. ச.ரமணன், கல்லடி, மட்டக்களப்பு.
03. எஸ்.எல்.எம்.ஸுஹைரி, மக்காமடி, ஏறாவூர்.
04. ஜ.ரிப்னா, மன்னார்.
05. ஸரீனா ஜிப்ரியா, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.

அருகிலுள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி எதிர்வரும் 21-08-2002 இற்கு முன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**'ஊற்று'**
வர்ணம் தீட்டும் போட்டி-48
417/2, காலி வீதி,
கொழும்பு -03.

### தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான சில ஆலோசனைகள்

+ இது ஒரு போட்டிப் பரீட்சை என்பதை மனதிற் கொண்டு நன்றாகப் படியுங்கள்.
+ இப்பரீட்சை வினாக்கள் உங்களது மொழித் திறன், நுண்ணறிவுத் திறன், பொது விவேகம், பகுப்பாயும் திறன் என்பவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களாக அமையப் பெற்றிருக்கும். அதனால் கடந்த கால, நிகழ்கால கண்டுபிடிப்புகள், உலக நிகழ்வுகள் என்பவற்றை அறிந்து கொள்வதோடு, நுண்ணறிவு வினாக்களையும் செய்து பயிற்சி பெறுங்கள்.
+ பரீட்சை வினாக்கள் வினாத்தாள் 1, வினாத்தாள் 2 என வகுக்கப்பட்டிருக்கும்.
+ வினாத்தாள் 1, 40 வினாக்களைக் கொண்டிருக்கும். அவ்வினாக்களுக்கு விடையளிக்க உங்களுக்கு தரப்படும் நேரம் 45 நிமிடங்களாகும். ஆகவே ஒரு வினாவிற்கு விடையளிக்க நீங்கள் ஒதுக்க வேண்டியநேர அளவு ஏறத்தாழ 1 நிமிடமும் 13 செக்கனுமாகும்.
+ வினாத்தாள் 2 ஆனது 77 வினாக்களைக் கொண்டது. தரப்படும் நேரம் 1 மணித்தியாலமும் 15 நிமிடமுமாகும். ஒரு வினாவிற்கு விடையளிக்க நீங்கள் ஒதுக்க வேண்டிய நேரம் 97 செக்கன்களாகும்.
+ ஆகவே முதலில் வினாக்களை நன்றாக வாசியுங்கள். பின்னர் தெரிந்த வினாக்களுக்கு முதலில் விடையளியுங்கள். இதனால் கஷ்டமான கேள்விகளுக்கு விடையளிக்க நேரத்தை செலவு செய்ய முடியும்.
+ தெரியாத வினாவிற்கு விடையளிக்க, அவ்வினாவை மீண்டும் வாசித்து நேரத்தை வீணடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
+ அளித்த விடைகள் சரியானதா? என்பதை மீண்டும் ஒரு முறை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
+ பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சித்தியடைய, குறிப்பாக இடி வாசக மாணவர்கள் திறமையுடன் சித்தியடைய எமது வாழ்த்துக்கள்.

*ஏணி, கீற்று ஆகியவற்றை முந்திக் கொண்டு...*
**3ம் வகுப்புத் தொடக்கம் A/L வகுப்பு மாணவர்கள் வரை படித்துப் பயன்பெறக் கூடிய**

**'கல்விக் களஞ்சியம்'**

*செப்டெம்பர் முதலாம் திகதி முதல் மாதமிரு முறை வெளியாகிறது*

5ம் வகுப்பு புலமைப் பரிசிற் பாடங்களுடன் ஏனைய வகுப்புக்களுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழி, ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றுடன் ஏராளமான பொது அறிவு விடயங்களும் உள்ளன அத்தோடு உங்கள் எழுத்தாற்றலை வளர்க்கும் கதைகள், கவிதைகள், சித்திரத் தொடர்கள் மற்றும் மூளைக்கு வேலை தரும் பல பரிசுப் போட்டிகளும் உண்டு.

*மாணவர்களுக்கென்று இலங்கையில் மாதமிருமுறை வெளியாகும் முதலாவது பத்திரிகை மட்டுமல்ல – முதற்தர பத்திரிகையும் இதுவே! விலை ரூ 20/-*

**வாங்கிப் படிக்கத் தயாராகுங்கள்!**

## உதவுவோம்!

இரங்கும் பண்பு வேண்டும்
இதயம் பணிய வேண்டும்!
கரங்கள் நீட்டிக் கேட்டால்
கனிவாய் உதவல் வேண்டும்!

காக்கும் தலையை தர்மம்
கடைப்பி டிப்போம் அதையே!
போக்கும் லோபித் தன்மை
புரிந்தால் உதவி, மேன்மை!

வாசல் தேடி வந்து
வாயால் உணவு கேட்டால்
நேச முடனே அவரை
நெருங்கி உணவ ளிப்போம்!

உதவும் தன்மை தானே
உலகில் நம்மை உயர்த்தும்!
நிதமும் ஈயும் பழக்கம்
நெஞ்சில் பெருக வேண்டும்!

*-கவிமாமா.*

## ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பரிசுப் போட்டி–20

### 5 ஆம் தர புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் – I

* 11 ஆம் 12 ஆம் வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழ்கோடிடுக.

11. இல்ல விளையாட்டுப் போட்டியிலே "சபா" இல்லம் "ஹிரா" இல்லத்தைவிட அதிக புள்ளிகளைப் பெற்றாலும் "அறபா" இல்லத்தை விட மிகக் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தது. இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற இல்லங்களை வரிசைக் கிரமப்படி குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
    1. சபா, அறபா, ஹிரா 2. அறபா, சபா, ஹிரா
    3. ஹிரா, சபா, அறபா

12. காந்தனின் பூந்தோட்டத்தில் உள்ள பூச்செடிகளில் அதிக எண்ணிக்கையில் உள்ளவை பூக்களாகும். எல்லா பூச்செடிகளிலும் மொட்டுகள் காணப்பட்டன. மொட்டுக்கள் உள்ள பூச்செடிகளில் சில பூக்கள் அல்லாத பூச்செடிகளாகும். இவ்விபரங்களின் படி கீழே காணப்படும் எக்கூற்று சரியானதாகும்.
    1. பூந்தோட்டத்திலுள்ள எல்லா பூச்செடிகளிலும் மொட்டுக்கள் உண்டு.
    2. பூக்கள் இல்லாத செடிகள் சிலவற்றில் மொட்டுக்கள் உண்டு.
    3. மொட்டுக்கள் உள்ள எல்லா செடிகளும் பூச்செடிகளாகும்.

* கீழே ஒரு குறிப்பிட்ட சம்பவம் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. 13 முதல் 16 வரையிலான வினாக்களில் உள்ள அச்சம்பவம் பற்றிய தகவல்கள் பூரணமாக விளக்கமடையும் விதத்தில் தரப்பட்டுள்ள மூன்று சொற்களில் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

சுபாவிற்கு விளையாட நல்ல விருப்பம் அவள் இன்று மாலை

13. 1. பாடசாலைக்கு 2. மைதானத்திற்கு 3. கடைக்கு
    தாமதமாகவே வந்தாள். அவளது நண்பி, இன்று நீ ஏன்?
14. 1. தாமதமாக 2. உற்சாகமாக 3. விரைவாக மைதானத்திற்கு
    வந்தாய் என்று கேட்டாள்
15. 1. வேலை 2. சோம்பல் 3. விருப்பமில்லை இருந்தபடியால்
16. 1. மற்றைய நாட்களை 2. நேரத்திற்கே 3. உரிய நேரத்தில்
    போல் வரமுடியாது போய் விட்டது என சுபா கூறினாள்.

* 17 முதல் 19 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் எழுத்துக்கள் கொண்ட கோலத்தை அவதானிக்குக.
A பகுதியிலுள்ள எழுத்துக்கள் ஒரு குறிப்பிட்ட கோலத்தைக் கொண்டவை. அக்கோலத்துடன் தொடர்புடைய அடுத்த எழுத்தை B பகுதியிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | A | B |
|---|---|---|
| 17. | அ இ இ ஈ உ உ எ ஏ .... | 1) எ 2) ஏ 3) ஐ (............) |
| 18. | ஆ அ இ ஈ இ உ ஊ உ ...... | 1) ஊ 2) ஐ 3) எ (............) |
| 19. | ஔ ஓ ஒ ஐ ..... | 1) எ 2) ஏ 3) ஊ (............) |

* தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி 20 முதல் 22 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.
$A = 10$ $B = 8$ $C = 5$

20. $(A+C) \times B =$ ................

21.
$$\begin{array}{r} C\,B\,C \\ +\ B\,B\,C \\ \hline \\ \hline \end{array}$$

22. $(A \div 5) + (A \times B)$

* 23 ம் 24 ம் வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழே கோடிடுக.
கலா, சுந்தரம், பரீனா, சஜா ஆகியோர் போட்டிப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றினர்க்கள். சஜாவை விட 10 புள்ளிகள் கூடுதலாக கலா பெற்றதுடன் பரீனா சுந்தரத்தை விட 5 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். கலாவும் பரீனாவும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

23. ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர் யார்?
    1. பரீனா 2. சஜா 3. சுதந்தரம்.
24. பரீனா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 58 எனில், சஜா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?
    1. 58 2. 48 3. 56

(தொடரும்.......)







# இலங்கையிற் படமாகும் 'ஜங்ஷன்' திரைப்படம் - ஒரு நேரடி ரிப்போர்ட்

29.07.2002, திங்கட்கிழமை மாலை 6 மணி.

நமது தமிழக நிருபர் மணவை அசோகன் கல்கிஸையிலிருந்து டெலிபோன் பண்ணினார்.

"சார்... நான் மணவை அசோகன். தமிழகத்திலிருந்து 'ஜங்ஷன்' என்கிற சினிமாப் பட ஷூட்டிங்குக்காக டைரக்டர், நடிகர்கள் எல்லாம் வந்திருக்காங்க. 'இடி' பத்திரிகைக்கு ஒரு விஷேட பேட்டி தர விரும்புறாங்க. உடனே புறப்பட்டு கல்கிஸ்ஸை வர முடியுமா?"

மிகுந்த வேலைப் பளுவுக்கு மத்தியிலும் நமது 'இடி' வாசகர்களுக்காக அவர்களைச் சந்திக்க முடிவு செய்தோம். "இன்னும் அரை மணித்தியாலத்திற்குள் வருகிறோம்!" என்றோம்.

அடுத்து நமது புகைப்படப்பிடிப்பாளரும், 'இடி' அபிமானியுமான எஸ்.ராமதாஸைத் தேடிப் பிடித்தோம். ஆட்டோ பிடித்துக் கொண்டு ஆங்கிலத்தில் "மவுண்ட் லெவினியா" என்று அழைக்கப்படும் கல்கிஸ்ஸை போய்ச் சேர்ந்தோம்.

Ocean View Tourist Inn ஹோட்டலில் படப்பிடிப்புக் குழுவினர் தங்கியிருந்தனர். அன்போடு வரவேற்றனர். நமது 'இடி', 'இளவரசி' பத்திரிகைகளை ஆர்வத்தோடு நம்மிடமிருந்து வாங்கிப் படித்தனர். 'ஆஹா... அருமையா இருக்கே!' என்று புகழாரம் சூட்டினர்.

வெகு கெஷுவலாகப் பேச்சைத் தொடங்கினோம். 'ஜங்ஷன்' படத்தில் யார், யார் நடிக்கிறார்கள்?' என்று கேட்டோம்.

"எல்லாம் புதுமுகங்கள் தான்!" என்றார் படத்தின் காமிராமேனான (ஒளிப்பதிவு) பி.பிரிமூஸ். "யார் கதாநாயகன்?" என்றதற்கு, தன் பக்கத்தே அழகான ஆளுமையுடன் அமர்ந்திருந்த இளைஞனைச் சுட்டிக் காட்டி 'இவர்தான்' என்றார்.

"உங்களை இதற்கு முன் ஏதோ ஒரு படத்தில் பார்த்த ஞாபகமிருக்கிறதே...!" என்றோம்.

"ஆமாம்... பார்த்திருப்பீர்கள். 'துள்ளுவதோ இளமை' படத்தில் கதாநாயகனின் நண்பனாக இரண்டாவது கதாநாயகனாக நடித்திருக்கிறேன். 'ஜங்ஷன்' எனது இரண்டாவது படம். இந்தப் படத்தில் கதாநாயகனாகியிருக்கிறேன்" என்றார்.

"உங்கள் பெயர்....?"

"அபினய்!" என்றார். "சொந்தப் பெயரா, சினிமாப் பெயரா?" எனக் கேட்க, 'சொந்தப் பெயர்தான்' என்றார்.

மீசை அரும்பும் இளவயது. நல்ல உயரம். சிவந்த நிறம். தற்போதுள்ள இளம் கதாநாயகர்களுக்குள் அழகானவர் என்று அபினய்யைக் குறிப்பிடலாம்.

கதை , திரைக்கதை, வசனம், டைரக்ஷன் என்ற பொறுப்புக்களை ஏற்றிருப்பவர் ஆர். ராமணாதன். பல படங்களில் நடித்த அனுபவமும் ராமணாதனுக்கு உண்டு. ஆனால் அன்று அவர் மிஸ்ஸிங்.

ஒளிப்பதிவாளர் ப்ரிம்ரோஸ் பல படங்களின் ஒளிப்பதிவுக்குத் துணையாகக் கடமை புரிந்திருக்கிறார். எஜமான், ராஜ்ஜியம், வானவில், ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரி, ராசாவே உன்னை நம்பி போன்ற வெற்றிப் படங்களிற் பணி புரிந்த அனுபவத்தைக் கொண்டு 'ஜங்ஷனை' ஒளிப்பதிவு செய்யப் புறப்பட்டிருக்கும் காமிரா விழிகள் அவருடையன.

"கதாநாயகி யார்...?"

"கதாநாயகிகளாக இருவர் நடிக்கிறார்கள். ஒருவர் கனிஷ்கா. மற்றவர் ஆம்னா. இருவருமே புத்தம் புது முகங்கள்!" என்றார் ப்ரிம்ரோஸ்.

"அவர்களைப் பார்க்கலாமா?"

"ஓய்வெடுக்கிறார்கள். நாளைக்கு ஷூட்டிங்கிற்கு வாருங்கள்; சந்திக்கலாம் !"

பொறுத்துக் கொண்டோம்.

"சரி.... ஜங்ஷன் படத்தின் கதை என்ன?"

"காதல் கதைதான்..." என்ற பிரிம்ரோஸ், "ஆனால் முற்றிலும் வித்தியாசமான கோணத்தில் சொல்லியிருக்கிறோம். அதாவது, ஒவ்வொருவருக்கும் அவரவர் துள்ளல் வயதுகளில் ஒரு கனவுக் கன்னி இருந்திருப்பாள். சாவித்திரி, பத்மினி, கே.ஆர். விஜயா, ஜெயலலிதா, வாணிஸ்ரீ, ஸ்ரீதேவி, சிம்ரன் போன்று எல்லா ஆண்களுக்குமே ஒரு நடிகையைப் பிடித்திருக்குமல்லவா? அது போல நமது கதாநாயகனுக் கும் ஒரு கனவுக் கன்னி இருக்கிறாள். அவளை இவன் உயிருக்குயிராக நேசிக்கிறான். அதேவேளை கதாநாயகனை வேறொரு பெண்ணும் விரும்புகிறாள். இதைச் சுற்றி ஒரு காதல் கதையைப் பின்னியிருக்கிறோம்!" என்றார் பிரிம்ரோஸ்.

"எல்லாமே புதுமுகங்களாக இருந்தால் படம் வெற்றி பெறுமா...?"

"ஏன்...?" துள்ளுவதோ இளமை வெற்றி பெறவில்லையா? அதன் வெற்றிக்குப் பிறகு புதுமுகங்களை வைத்து முப்பத்திரெண்டு படங்களுக்குப் பூஜை போடப்பட்டிருக்கிறதே..! இதில், ஒரு நாளில் மட்டும் பதினாறு படங்களுக்குப் பூஜை போடப்பட்டுள்ளதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!" என்ற பிரிம்ரோஸ் 'ஜங்ஷன்' படம் நிச்சயம் வெற்றி பெறும் சார். கவலையே வேண்டாம்!" என்றார். வெற்றிக்கு எமது வாழ்த்துக்களைச் சொல்லி வைத்தோம்.

இந்தப் படத்தில் நம்மூர்ப் பையன் ஒருவரும் நடிக்கிறார். பெயர் கணேஷ். ஆமர்வீதி அம்பாள் கபே உரிமையாளர் வி.ஜி. நாராயணஸ்வாமி அவர்களின் மகன். 'ஜங்ஷனில்' ஹீரோவின் ஃப்ரெண்டாக நடிக்கும் கணேஷுக்கும் நமது வாழ்த்துக்களைக் கூறினோம்.

இலங்கையில் மூன்று பாடல் காட்சி களை எடுக்கப் போவதாகச் சொன்னார்கள். பேருவளைக்கு அண்மையில் உள்ள எழில் கொஞ்சும் கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு பாடல் காட்சி மறுநாள் படமாக்கப்பட விருப்பதாகவும் கூறினார்கள். அவர்களின் அன்பான அழைப்பின் பேரில் மறுநாள் ஷூட்டிங் ஸ்பொட்டிற்குச் சென்ற நண்பர் ராமதாஸ் சில புகைப்படங்களை எடுத்தார். அவற்றிற் சிலவற்றை இங்கே தந்திருக்கி றோம்.

'ஜங்ஷன்' படத்திற்கான இசை பரத்வாஜ். அண்மையில் வெளியான ஜெமினி படத்திற்கு 'ஓ போடு' பாடலுட்பட இசை அமைத்தவர் பரத்வாஜ்.

ஏழுமலை, ராஜா, யுனிவர்ஸிட்டி போன்ற வெற்றிப் படங்களில் டான்ஸ் மாஸ்டராகக் கடமையாற்றிய ஸ்ரீதர்தான் 'ஜங்ஷன்' படத்திற்கும் டான்ஸ் மாஸ்டராகக் கடமை புரிகிறார்.

நடிகை சிம்ரனின் மேக்கப் மேனாகக் கடமையாற்றிய ராமச்சந்திரன், இந்தப் படத்திற்கும் அபினய்யின் பிரத்தியேக ஒப்பனையாளராகவும் உள்ளார்.

'ஜங்ஷன்' படத்தின் தயாரிப்பாளர் மோகமுள் படத்தைத் தயாரித்த ஜானகிராமன். இணை தயாரிப்பு; சக்திவேல்.

பாட்ஷா, ஐ லவ் யூடா, சூரியன், முதல்வன் படங்களில் இணை இயக்குனராகப் பணிபுரிந்த நாகராஜ் இந்தப் படத்திற்கும் இணை இயக்குனராகவுள்ளார். உடைகள்: V.சாய். உதவி: ராஜா.

எம்.ஜி.ஆர்.காலத்திலிருந்து துள்ளுவதோ இளமை வரை பல வெற்றிப் படங்களின் ஒலிப்பதிவாளராக இருந்த ராதாகிருஷ்ணன் 'ஜங்ஷன்' படத்தின் ஒலிப்பதிவாளராக உள்ளார்.

'ஜங்ஷன்' செப்டம்பர் மாதமளவில் திரைக்கு வரும்.

இந்தப் படத்தின் படப்பிடிப்புகள் இலங்கையில் நடைபெறப் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கியவராக சக்தி டி.வி, சக்தி எஃப்.எம்மின் நிர்வாகப் பணிப்பாளரான ராஜ மகேந்திரனையும், குட்டி ராஜா, ஜெய்குமார், மணவை அசோகன் போன்றோரையும் நன்றியோடு குறிப்பிட்டார் ஒளிப்பதிவாளர் பிரிம்ரோஸ்.

—எஸ்.ப்ரியா—

படப்பிடிப்பு: எஸ்.ராமதாஸ்


'இடி' பத்திரிகை வாசிக்கும் கதாநாயகன் அபினய்.


அபினய், கனிஷ்கா.


படப்பிடிப்பு இடைவேளையில்....


'இடி' பேட்டியின் போது, இடமிருந்து வலமாக! அபினய், இலங்கையைச் சேர்ந்த கணேஷ், இணை இயக்குனர் நாகராஜ், ஒளிப்பதிவாளர் பி.பிரிம்ரோஸ் முதலியோர்.


படப்பிடிப்பு இடைவேளையின் போது ஒப்பனை செய்து கொள்ளும் கனிஷ்கா.

காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண் டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு வழி கண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளிநாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக. T.P. 074-519754